# தமிழ் மாகாண

# நாடகக்கலை அபிவிருத்தி

# மகாநாடு

## ஈரோடு

T14263
R005C07
T.14263

# ST. தெரேஸா டிரேடிங் கம்பெனி

சுதேசி ஜவுளி வியாபாரம்

ஈரோடு

COATING, SHIRTING.

ST THERESA TRADING CO.,

1101

REGISTERED. No. 626. ரிஜிஸ்டர் நெ. 626.

கோடிங் ஷர்டிங்

எங்கள் கம்பெனியில்

கைத்தறியினுல் நெய்யப்பட்ட கோட்டிங், ஷர்ட்டிங், பிரிண்டிங் சேலைகள், வெள்ளை பீஸ்கள், கொத்துகள் முதலியவைகளும், கரூர் பெட்சீட், துண்டு தான் முதலியவைகளும் சரசமான விலைக்குக் கிடைக்கும்

தேவைக்கு ஒருமுறை ஆர்டர் செய்யுங்கள்

கமீஷன் ஏஜண்டுகளும் மாதச்சம்பள ஏஜண்டுகளும் தேவை



மகாநாடு நடைபெற்ற ஈரோடு, செண்ட்ரல் தியேட்டர்

# தமிழ் மாகாண
# நாடகக்கலை அபிவிருத்தி மாநாடு

*

(11—2—44)

சுபானு ஆண்டு
தைத்திங்கள் 29உ

★

ஈரோடு
சென்ட்ரல் தியேட்டரில் நடைபெற்றது

★

[விலை ரூபாய் இரண்டு]

# வரவேற்புக் கழகத்தார்.

தலைவர்:

திரு R. K. வேங்கடசாமி நாயக்கர்

(நகரசபைத் தலைவர், ஈரோடு)

நிதிகாப்பாளர்:

திரு S. மீனாட்சிசுந்தர முதலியார், B.A., L.T.

செயலாளர்கள்:

திரு T. N. சிவதாணு (நகைச்சுவை நடிகர் M. S. B. S. சபா)

திரு M. கருப்பையா, மதுரை

நிர்வாக அங்கத்தினர்கள்:

திருவாளர் கான் சாகிப் K. A. ஷேக்தாவுது சாயபு,
மிராசுதார், ஈரோடு

,, நல்லசேனாபதி சக்கரை மன்றாடியார்,
குமாரபட்டக்காரர், பழயகோட்டை

,, M. சிக்கைய நாயக்கர், அர்பன் பாங்கு, ஈரோடு

,, E. M. அண்ணாமலைப் பிள்ளை, B.A., B.L., ஈரோடு

,, V. V. C. R. முருகேச முதலியார்,
நூல்மண்டி, ஈரோடு

,, K. N. பழனிசாமிக் கவுண்டர்,
நகரசபைத் தலைவர், திருப்பூர்

,, E. V. கிருஷ்ணசாமி நாயக்கர், மிராசுதார், ஈரோடு.

,, S. கிருஷ்ணசாமி முதலியார்,
ஏஜண்டு, மேட்டூர் மில்ஸ், ஈரோடு

,, M. S. முத்துக்கருப்பஞ் செட்டியார்,
அரிசி மண்டி, ஈரோடு

,, N. C. இராஜகோபால், ஆடிட்டர், ஈரோடு

,, T. K. ஷண்முகம், M. S. B. S. சபா, ஈரோடு



கான்பகதூர்
K. A. ஷேக்தாவுத் சாய்பு



திரு ஈ. வெ.
கிருஷ்ணசாமி நாயக்கர்



திரு M. சிக்கைய நாயக்கர்



திரு. N. C.
ராஜகோபால் ஐயங்கார்



திரு. K. N.
பழனிச்சாமிக் கவுண்டர்



திரு. S. மீனுட்சிசுந்தர முதலியார்
B.A., L.T.



திரு க. அ. ஆறுமுகனர்
[மகாநாட்டின் முதல் பாடலை
இயற்றியவர்]



திரு M. கருப்பையா, மதுரை
[நமது மகாநாட்டுச்
செயலாளர்]

# முன்னுரை.

இம்மகாநாடு நாடகக்கலை வளர்ச்சிக்கென்று தமிழ்நாட்டில் முதலாவதாகக் கூட்டப்பட்ட தனி மகாநாடு.

முத்தமிழறிஞர் பலரும் இதில் பங்கெடுத்துக்கொண்டனர். நாடகக்கலை பற்றித் தாம் கொண்டுள்ள கருத்துக்களை அஞ்சாது கூறினர்.

இவ்வரிய சொற்பொழிவுகளைத் தமிழக முழுவதும் சுவைத் தின்புறுவது இக்கலை வளர்ச்சிக்குப் பயன்தரும் தொண்டாக விருக்குமென்பது வரவேற்புக் கழக நிர்வாகிகளின் உள்ளக் கிடக்கை,

அதற்கிணங்க, பெரு முயற்சியின் பேரில், இயன்றவரை நிகழ்ச்சி முறையின்படி யாவற்றையும் தொகுத்து நூல்வடிவில் வெளியிட்டுள்ளோம்.

திரு S. மீனாட்சிசுந்தர முதலியார், B. A., L. T., திரு M. V. மணி, ஆகிய இரு அன்பர்களின் சொற்பொழிவுகள் முயற்சித் தும் கிடைக்கவில்லை. சில அன்பர்களின் படங்களும் கிடைக்க வில்லை. அதைத் தவிர, இந்நூல் நாடகக்கலை அபிவிருத்தி மாநாட் டின் நிகழ்ச்சிகள் முழுவதையும் தன்னுள் காட்டுமென்பதில் ஐயமில்லை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு G. சுப்பிரமணிய பிள்ளை, M. A., B. L., யோகி ஸ்ரீ சுத்தா னந்த பாரதியார் ஆகிய இருபெரியார்கள் இந்நூலின் சிறப்புக் கென வரைந்த இரு கட்டுரைகள் 'அநுபந்தமாகச்' சேர்க்கப் பட்டுள்ளன. அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த வந்தனங்கள்.

நானிலமெலாம் நாடகக்கலை ஓங்குக!

T. N. சிவதாணு,
செயலாளன்.

காரைக்குடி, 22—8—44.

# பொருளடக்கம்

## காலை நிகழ்ச்சிகள்


| | | | |
|---|---|---|---|
| 1. | கொடியேற்று விழா ... | திரு. ராவ்பகதூர் P. சம்பந்த முதலியார் | 1 |
| 2. | திறப்பு விழா ... | ,, இசை நாடக ஒளி M. K. T. பாகவதர் | 5 |
| 3. | வரவேற்புரை ... | ,, R. K. வேங்கடசாமி | 9 |
| 4. | தலைமைப் பேருரை ... | ,, சர் R. K. சண்முகம் K. C. I. E. | 17 |
| 5. | படத்திறப்பு விழா (T. T. S. சுவாமிகள்) ... | ,, நாடகமணி M. N. M. பாவலர் | 21 |
| 6. | படத்திறப்பு விழா ... (M. கந்தசாமி முதலியார்) | ,, T. K. சண்முகம் | 33 |


## மாலை நிகழ்ச்சிகள்


| | | | |
|---|---|---|---|
| 7. | நாடகமும் அதன் பயனும் ... | ,, நவாப் T. S. இராஜமாணிக்கம் | 47 |
| 8. | இலக்கியமும் சம்பிரதாயமும் ... | ,, C. R. மயிலேறு M. A. | 53 |
| 9. | நாடகத்தில் பெண்கள் .... | ,, P. S. சிவபாக்கியம் | 65 |
| 10. | நாடகமும் சினிமாவும் ... | ,, நகைச்சுவையரசு N. S. கிருஷ்ணன் | 69 |
| 11. | இன்றைய நாடகம் ... | ,, A. R. அருணாசலம் | 73 |
| 12. | கலையின் நிலைமை ... | ,, C. N. அண்ணாத்துரை M. A. | 79 |
| 13. | நடிகர் வாழ்க்கை ... | ,, K. D. சந்தானம் | 89 |
| 14. | நாடகக்கலை ... | ,, K. A. P. விசுவநாதம் | 99 |
| 15. | நடிகர்களின் கடமை ... | ,, M. M. சிதம்பரநாதன் | 103 |
| 16. | நாடகக்கலை வளர்ச்சி ... | ,, A. பொன்னம்பலனார் | 107 |
| 17. | நடிப்புக்கலையால்இன்பம் | ,, A. K. இராமலிங்கம் | 111 |
| 18. | சீர்திருத்த நாடகங்கள் | ,, S. R. சுப்பிரமணியம் | 115 |
| 19. | ஒழுக்கம் வேண்டும் ... | ,, N. தண்டபாணி பிள்ளை | 119 |
| 20. | வாழ்த்துச் செய்திகள் .... | 121 முதல் 126 வரை | |
| 21. | தலைவர் முடிவுரை .... | ,, சர் R. K. S. | 127 |
| 22. | நன்றி கூறல் .... | ,, T. N. சிவதாணு | 129 |


அனுபந்தம்


| | | | |
|---|---|---|---|
| 23. | தமிழர் நாடக வளர்ச்சி | ,, சுத்தானந்த பாரதியார் | 133 |
| 24. | நாடகம் நவின்ற நற்றமிழ் | ,, ஜி. சுப்பிரமணியபிள்ளை | 141 |

# கலைவளம்

## நடிகர் S. C. கிருஷ்ணன்

(ஸ்ரீ பால ஷண்முகானந்த சபா)

### நாட்டைக் குறிஞ்சி — ஆதி.

**பல்லவி**

நாட்டினுக் கணிகலம் நாடகக்கலையே
பாட்டும் இயலும் எழில் காட்டும் நவநிலையே (நா)

**அனுபல்லவி**

ஊட்டிடும் உணர்வினை உண்மையின்சிலையே
ஓங்கு மிக் க்லைக்கிணை உலகில் வேறிலையே (நா)

**சரணம்**

வாழ்க்கையிலே மறு மலர்ச்சியுண்டாக்கும்
மக்கள் மனத்திலுள்ள மாசினைப்போக்கும்
தாழ்வகற்றிச்சமு தாயத்தைக் காக்கும்
தாய்மொழியைப் புனருத்தாரண மாக்கும் (நா)

(திரு. க. அ. ஆறுமுகனார் இயற்றியது)



# நாடகக்கலை

## திருமதி P. S. சிவபாக்கியம்

(சினிமா, நாடக, நடிகை)

### காபி — ஆதி.

பல்லவி

நாடகம்நமது தமிழகப் பரம்பரை
நாகரீகக் கலையே — உயிர்நிலையே (நா)

அநுபல்லவி

நீடகத்தின் வயமே சமுதாயமே
நெறியானபோதமே கண்டுதேறவே (நா)

சரணம்

காரியத்திற்கன்றோ ஆரியர் நடிக்கின்றார்
கலைநலமாக எங்கே முயன்றார்
வீரியமாக நாம் ஜெயம்பெறத்தருணமே
வேதபாஸ்கர வாக்யம் ஓதினேன் சிவபாக்யம் (நா)

★

### ஜெகன்மோகினி — ஆதி.

பல்லவி

ஜெயம் ஜெயம் ஜெயம் நாடோறும்
ஜீவ நாடக தெய்வத் தமிழ்ச்சங்கீத (ஜெ)

அநுபல்லவி

பயமில்லாது பாரெங்குமே
நயவுதய மங்களமே பொங்குமே (ஜெ)

சரணம்

ஆதிசிவன் சக்தியாலே நடித்திட்ட
அறுபத்தி நாலு கலைகொண்டிட்ட
நீதியனைத்தும் நேர் காட்டவே
நீடூழிவாழ்கப் பிரம்மானந்தமே சூழ்க (ஜெ)

(திரு. மதுர பாஸ்கரதாஸ் இயற்றியது)

**மதுரை ஸ்ரீ பால ஷண்முகானந்த சபா**

**—— தமிழ் நாடு ——**

**நாடகக்கலை அபிவிருத்தி மகாநாட்டில்**

# ★ ஔவையார்

## சர். R. K. சண்முகம், K. C. I. E.

..................நான் என் வாழ்க்கையில் கண்ட நாடகங்கள் யாவற்றிலும் "ஔவை" தலை சிறந்த நாடகம். இந்த நாடகத்தை நான் காணத்தவறி யிருந்தால் ஒரு அரிய சந்தர்ப்பத்தை இழந்திருப்பேன் .........T. K. S. சகோதரர்கள் 'ஔவை' நாடகத்தின் மூலம் தமிழ் நாடக உலகில் முதலிடம் பெற்றுவிட்டார்கள் என்பதில் ஐயமில்லை.

●

## நகைச்சுவை மன்னன் N. S. கிருஷ்ணன்

..............இரண்டொரு வார்த்தைகளாவது இதைப்பற்றிப் பேசாமலிருக்க என்னால் முடியவில்லை. சர். சண்முகம், T. K. ஷண்முகத்திற்கு "ஔவை" என்ற பட்டமளித்தது முற்றிலும் பொருந்தும் ..............நான் சமீபத்தில் ஒரு மலையாள நாடகத்திற்குத் தலைமை வகித்தபோது, மலையாள நடிகர்களைப்போல் தமிழ் நடிகருலகில் எவருமில்லை யென்று கூறினேன். அதை இன்று 'வாபஸ்' பெற்றுக் கொள்கிறேன். எனது சகோதரன் ஔவை ஷண்முகம் நெடுங்காலம் வாழவேண்டும். T. K. ஷண்முகம் ஒருவராலேயே தமிழ் நாடகக்கலை வளர்ந்தோங்கு மென்று உறுதியாகக் கூறுகின்றேன்

●

**T. K. S. சகோதரர்கள்**

**உரிமையாளர்கள்**

முகாம்: **காரைக்குடி.**

நகைச்சுவை அரசு

திரு என். எஸ். கிருஷ்ணன் அவர்களின்

மதுரை

# ★ ஸ்ரீ மங்கள பால கான சபா ★

[ நாடக ஆசிரியர் திரு. T. P. பொன்னுச்சாமி பிள்ளை
அவர்களால் பயிற்றுவிக்கப்பட்டது. ]

●

பழமையில் புதுமையும், புதுமையில் இனிமையும்
கலந்த நாடக சித்திரங்கள்!
கலையில் தேர்ச்சிபெற்ற நடிக ரத்தினங்கள்!!
கண்களுக்கு விருந்தளிக்கும் காக்ஷி ஜோடனைகள்!!!
இத்தனையும் அமைந்தது.

●

சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்
வெற்றியுடன் நடைபெற்றுவருகிறது.

●

எதிர்பாருங்கள்:

★ ஸ்ரீ கிருஷ்ண லீலா ★

சிவசக்தி லீலா :: மகாத்மா புத்தர்



நாடகப் பேராசிரியர்

# கொடியேற்று விழா

★

(திரு இராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார்)

தமிழ் நாடகாபிமானிகளே! தமிழ் அன்பர்களே!

என்னுடைய முதற்கடமையாக, எல்லாம் வல்ல இறைவனை வணங்கி விட்டு, இன்றைத் தினம் தமிழ் நாடகக் கொடியை ஏற்றி வைக்கும் படியான பாக்கியத்தையும், பெருமையையும், எனக்குக் கொடுத்த இந்நாடக மகாநாட்டைக் கூட்டிய சங்கத்தார்க்கு என்மன மார்ந்த வந்தனத்தைச் செலுத்த வேண்டியதாகும். அவர்கள் அதனை அங்கீகரிக்கும் படியாகக் கேட்டுக் கொள்கிறேன். என்வாழ் நாட்களில் இதை ஓர் சிறந்த தினமாகக் கொண்டாடுகிறேன்.

சுமார் 53-வருடங்களுக்கு முன் நான் தமிழ் நாடகங்களில் ஆட ஆரம்பித்தபோது தமிழ் நாடக மிருந்த நிலையையும் அது தற்காலம் இருக்கும் நிலையையும் கருதுமிடத்து நான் மிகவும் சந்தோஷப்பட வேண்டியவனாயிருக்கிறேன். அக்காலம் நாடகமாடுவதென்றால் மிகவும் இழிவான ஓர் தொழிலாக எல்லோராலும் கருதப்பட்டது. இதைப் பற்றி நான் அதிகமாய்ச் சொல்ல வேண்டியதில்லை. என்னைப் பற்றிய ஒரு உதாரணத்தை மாத்திரம் கூறினாலும் போதும். நான் நாடகமாட ஆரம்பித்த பொழுது யாதோ ஒரு காரணத்தால், என்னைப் பற்றி இழிவாகப் பேசவேண்டுமென்று நினைத்த ஒருவர் என் சொந்த பந்து ஒருவரிடம் சென்று "என்ன? சம்பந்தம் கூத்தாடியாய்ப் போய் விட்டானாமே!" என்று கூறினாராம். அந்த பந்துவே என்னிடம்—பிறகு இதைத் தெரிவித்தார். அக்காலம் கூத்தாடி என்பது ஓர் வசை மொழியாகக் கருதப்பட்டது. அக் காலமெல்லாம் போய்ப் பிறகு நாடகமாடுவதில் இழிவில்லை, கற்றவர்களும் அப்படிச் செய்யலாம், எல்லா வர்ணத்தாரும் அப்படிச் செய்யலாம். குல ஸ்திரீகளும் அதில் பங்கெடுத்துக் கொள்ளலாம், என்ற ஸ்திதிக்கு வந்ததற்காக தமிழ் நாடகாபிமானிகள் அனைவரும் சந்தோஷப்பட வேண்டியதே.

இது ஒரு புறம் இருக்க, தற்காலம் இன்னொரு விசாரம் கிளம்பி இருக்கிறது. நான் இந்த நாடக மகாநாட்டிற்கு வரப் புறப்பட்டபோது சென்னையிலிருக்கும் எனது நண்பர்களில் ஒருவர், "தமிழ் நாடகம் தான் சினிமா வந்த பிறகு க்ஷீணித்துப் போய்விட்டதே, இதற்காக நீங்கள் ஈரோட்டிற்குப் போவானேன்?" என்று கேட்டார். இதற்கு நான் பதில் சொல்ல வேண்டியது என் கடமையாகும். பேசும் படங்கள் வந்த பிறகு சென்ற 10 அல்லது 12 வருடங்களாக தமிழ் நாடக மேடை முன்பிருந்த உயர்ந்த ஸ்திதியிலிருந்து கொஞ்சம் க்ஷீணித்திருக்கிறது என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயமே. ஆயினும் தமிழ் நாடகக் கலையானது அழிந்து போகும் என்று ஒரு நாடகாபிமானியும் பயப்பட வேண்டியதில்லை. புதிதாக ஒரு கலை ஏதாவது உதயமானல் ஜனங்களுக்கு அதன் மீது அதிக ஆர்வம் உண்டாவது சகஜம்தான். அது போல் பேசும்படக் காட்சிகள் முளைத்தபோது அதன் மீது அதிகப் பிரியம் ஜனங்களுக்கு உண்டானது சகஜமே. ஆயினும் பழய நாடகக் கலைக்கும் புதிய சினிமாக்கலைக்கும் என்ன வித்தியாசமென்று சற்று ஆராய்ந்து பார்ப்போம். இதிலும் கதை எழுத வேண்டியதிருக்கிறது. அதிலும் "சினேரியா" எழுத வேண்டியிருக்கிறது. இதிலும் நடிகர் நடிகைகள் வேஷம் போட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதிலும் அப்படியே. இரண்டிலும் நடிகர், நடிகைகள் நடித்துப் பாடவேண்டி யிருக்கிறது. இரண்டிலும் சீன்கள் ஜோடிக்க வேண்டி யிருக்கிறது. இப்படியிருக்க நாடகத்திற்கும், சினிமாவிற்கும் ஒரே வித்தியாசம்தான் முக்கியமானதாக இருக்கிறது. பழைய நாடக நடிகர், நடிகைகள் மேடையின் மீது ஜனங்களுக்கெதிரில் நடித்து வந்தார்கள். தற்கால சினிமாக்களில் நடிகர்களும் நடிகைகளும் ஸ்டூடியோ (Studio)வில் செட்டிங்குகளில் மைக் (mike) என்பதின் எதிராக நடிக்க வேண்டி யிருக்கிறது. அதை அப்படியே படம் பிடித்து சினிமா சாலைகளில் காட்டுகிறார்கள். இவ்வளவே வித்தியாசம். நாடகக்கலையில் இரண்டிற்கும் வித்தியாசம் என்ன? கலையென்பது இரண்டிலும் ஒன்றேதான். ஆகவே இந்த விதத்தில் யோசித்த போதிலும் தமிழ் நாடகக்கலை அழிந்து போகுமென்று ஒரு நாடகாபிமானியும் ஐயுறவேண்டியதில்லை.

அன்றியும் மேடைகளில் நாடக மாடுவது அற்றுப்போகு மென்று ஒருவரும் பயப்பட வேண்டியதில்லை என்பதற்கொரு உதாரணத்தைக் கூறுகிறேன். தற்காலமும் சினிமா நட்சத்திரங் கள் மேடையின் மீது நடித்தால் அவர்களைப் பார்க்க ஜனங்கள் ஆயிரக்கணக்காக வருவார்களென்பதற்குத் தடையில்லை. கிராமபோன் ரிக்கார்டுகள் வந்த பிறகும், அவற்றைப் பாடிய சங்கீத வித்வான்களை நேரிற் கேட்க நாம் அதிகமாக விரும்புவ தில்லையா? பேசும் படத்தில் அவர்கள் குரலைக்கேட்டு, அவர்கள் உருவத்தைப் பார்ப்பதிலும், கண்ணுக்கு நேராக அவர்கள் நடிப்பதைப் பார்த்து, அவர்கள் நேராகப் பாடுவதைக் கேட்க யார்தான் அதிகமாக விரும்ப மாட்டார்கள்! தற்காலம் நாடக சபைகளுக்கு முன்போல் ஜனங்கள் வர ஆரம்பித்து விட்டார்கள் என்பது என் சொந்த அனுபவம். அன்றியும் ஐரோப்பா அமெரிக்கா முதலிய கண்டங்களிலும் நாடக மேடையானது மறுபடியும் தலையெடுக்க ஆரம்பித்து விட்டது என்று மேனாட் டார்களும் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

இன்றையத் தினம் இம் மகாநாட்டில் இன்னும் பலர் பேச வேண்டி யிருக்கிறபடியால் நான் சொல்ல வேண்டிய தைச் சுருக்கிக் கொண்டேன்.

[கொடியேற்று விழா முடிந்தபின்]

அன்பர்களே! தமிழ் நாடகாபிமானிகளே! உங்கள் அனு மதியின் மீதுநான் வெளியில் ஏற்றிய தமிழ் நாடகக் கொடி யானது என்றும் அழியாப் புகழுடன், தமிழ் நாடகத்தின் பெருமையை தமிழ் பேசப்படும் நாடுகளிளெல்லாம் பிரகாசிக்கு மாறு எல்லாம் வல்ல இறைவன் இணையடியைப் போற்று கிறேன்.

★

"நற் சரிதை நற்கவிதை நல்நடிப்பு
நாட்டினிலே நாடகத்தில் அமைக்க வேண்டும்"

—பாரதிதாஸன்

ரிஜிஸ்டர் நெ. 1216 தந்தி விலாசம்- "LUCK"

SREE RAMA VILAS

# :: ஸ்ரீ ராம விலாஸ் ::

(ஸ்தாபிதம் 1931)

கரூர் விலை! கரூர் விலை!

கலியாணத்திற்கு வேண்டிய **புதுமோஸ்தர்** ரகங்கள், **பட்டுநூல் சேலைகளும்** விதவிதமான வேஷ்டிகளும் சகல ஊர் ஜவுளி தினுசுகளும், சரசமாயும், நாணயத்துடனும் கிடைக்குமிடம்.



ஸ்ரீ ராம்
சில்க் ஸ்டோர்ஸ்

மில் ஜவுளி
தினுசுகள்

ஸ்ரீ ராம்
டெக்ஸ் டைல்ஸ்

சுதேசி கோட்டிங்
ஷர்ட்டிங் ரகங்கள்

ஸ்ரீ ராம்
சாயத் தொழிற்சாலை

நூல் சாயம்,
பிரிண்டிங் சாய
வேலைகள்
செய்யப்படும்.

ஸ்ரீ ராமவிலாஸ்
பாங்கு

லேவாதேவி
செய்யப்படும்.

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

**S. I. R. கோவாப்ரேட்டிவ் ஸ்டோர்களுக்கு**

நாங்கள் சப்ளை செய்கிறோம்.

புரொப்ரைட்டர்:—

**B. ராமனுத செட்டி,**

பட்டு ஜவுளி வியாபாரம், ஈரோடு.



மகாநாட்டுத் திறப்பாளர்

# திறப்பு விழா

(இசை நாடக ஒளி திரு. எம். கே. தியாகராஜ பாகவதர்)

பெரியோர்களே! தாய்மார்களே!
சகோதர, சகோதரிகளே!

நாடகத்துறையிலேயே தங்கள் வாழ்க்கையை அற்பணித்தவர்களும், இன்னும் நாடகக் கலையைப்பற்றி நன்கு கற்றறறிந்தவர்களுமான எத்தனையோ அறிஞர்கள் இருக்கும் போது, இம்மகாநாட்டை திறந்துவைக்கும் பாக்யம் எனக்கு கிடைத்ததைப்பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். இப்பெருமையை எனக்களித்தவர்களுக்கு நான் நன்றி கூறிக்கொள்ளுகிறேன்.

பெரியோர்களே!

நாடகத்துறையில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் வெகு சொற்பமே. என் நாடக வாழ்க்கையில் எனக்குத் தெரிந்தது நான்கு ஐந்து நாடகங்கள் தான். வள்ளி கல்யாணம், பவளக்கொடி, கோவலன், லலிதாங்கி, நந்தனர்............இதைச் சொல்ல நான் வெட்கப்பட வில்லை; ஏனென்ருல் எனக்கு முன் எவ்வளவோ அனுபவமுடைய நடிகர்களும் கூட இந்த இரண்டு மூன்று நாடகங்களுடன் இன்னும் இரண்டொன்று சேர்ந்து ஆக நான்கைந்து நாடகங்கள் தான் நடத்தி வந்திருக்கிருர்கள். தற்போதும் நடத்திவருகிருர்கள். நாடகக்கலை வளர்ச்சியடைய வேண்டுமென்பதில் யாருக்கும் அபிப்பிராய பேதம் கிடையாது. நாடக மகாநாடு கூட்டுவது ஸ்பெஷல் நாடகம் நடத்தும் நடிகர்களைக் குறை கூறுவதுயென்று மட்டும் போய்க்கொண்டிருந்தால் எவ்வாறு நாடகக் கலைவளர்ச்சியடைய முடியும்? இன்று ஆயிரக்கணக்காக தமிழ் நடிகர்கள் தென்னுட்டில் இருக்கிருர்கள். எல்லோருக்கும் சினிமாவில் பிழைப்புக்கு வழியிருக்கிறதா! ஸ்பெஷல் நாடகங்கள் நடக்கக்கூடாது என்ற திட்டம் வந்தால் இவ்வளவு நடிகர்களின் கதியென்ன? ஸ்பெஷல் நாடகங்கள் நடத்துவதை ஒருபோதும் நிறுத்தமுடியாது! கம்பெனிகள் மூலமே நாடகம் நடைபெற வேண்டு மென்று விரும்பினுல்

நாடகக்கலை ஒருபோதும் வளர்ச்சியடைய முடியாது. நூற்றுக் கணக்கான நடிகர்களைவைத்து கம்பெனி நடத்துவதென்பது எல்லோருக்கும் சாத்தியமானதல்ல. ஆகவே, நாடகக்கலை உயர வேண்டுமானுல் குறைந்த நடிகர்களைக் கொண்ட சிறந்த புதிய நாடகங்கள் தோன்றவேண்டும். அவைகளைப் புத்தக ரூபமாக வெளியிடவேண்டும். நடிகர்கள் ஒவ்வொருவரும் அதைப் படித்து அதன்படி நடிக்கவேண்டும். தமிழ் நாட்டில் எந்த மூலையிலிருந்து வேண்டுமானுலும் நடிகர்களை அழைத்துவந்து ஸ்பெஷல் நாடகங்கள் போடலாம். பாடம் ஒன்று என்று வந்துவிட்டால் நாடகம் நிச்சயமாய் நன்ருய்த்தானிருக்கும். ஸ்பெஷல் நடிகர்களுக்கு சிறந்த நாடகங்கள் புதிதாய் நடிக்கவேண்டு மென்ற ஆர்வமுண்டு. அவர்கள் நடிப்பதற்கொத்த முறையில் நாடகங்கள் தானில்லை.

பால்ய நாடகக் கம்பெனிகளைப் போல் சிறந்த சீன் உடைகளுடன் ஸ்பெஷல் நாடகங்கள் நடத்த ஒருபோதும் முடியாது. கதை புதிதாய் ரசனையாயிருந்து விட்டால் இப்போது ஸ்பெஷல் நாடகங்களில் நடைபெறும், அனேக குறைபாடுகள் ஒழிந்து, முறையே நாடகக்கலை வளர்ச்சி அடைய வழியுண்டு.

## இன்னேன்று பாட்டைப்பற்றியது.

நம் தமிழ் நாடகத்தில் எடுத்ததற்கெல்லாம் பாட்டாகவே பாடி விடுகிருர்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இது ஓரளவு குறைய வேண்டியது தான் என்ருலும் ஒரேயடியாய்ப் பாட்டுகளை குறைத்து விட்டால் பொதுமக்களின் ஆதரவு கிடைக்குமென்று நான் நம்பவில்லை. ஏனென்ருல் நாடக மேடையில் பாட்டு அதிகமாக ஏற்பட்டது இன்று நேற்றல்ல. முற்காலத்தில் நம் நாடகம் முழுவதுமே பாட்டாகத்தான் இருந்தது என்பதற்கு ஆதாரங்களிருக்கின்றன. வர வர அது குறைந்து தான் வந்துகொண்டிருக்கிறது. ஒரேயடியாய் பாட்டை தள்ளி விடக் கூடாது. இயலையும், இசையையும் தன்னுள் கொண்டதாகவேயிருக்க வேண்டும் நாடகம். கதைக்கு தகுந்த முறையில் வேண்டிய பாடல்கள் அமைக்க வேண்டும்.

## கதை மூன்று பிரிவாக வகுக்கவேண்டும்.

அறிவை வளர்க்கும் கதைகள்; அறத்தை நிலைநிறுத்தும் கதைகள்; பக்தியை உண்டாக்கும் கதைகள். என்று மூன்ருய்

கதைகளைப் பிரித்து; பக்தி, அறம், முதலியவைகளைப் போதிக்கும் கதைகளில் பாடல்கள் அதிகமிருக்கலாம். அவைகள் கதைகளுக்கு சுவை ஊட்டுவனவாகவே யிருக்கும். ஆனால் அறிவை வளர்க்கும் கதைகளில் தான் இடம்பார்த்து பாடல்கள் அமைக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, உலகத்திலுள்ள கலைகளிலேயே சிறந்தது நான்கு. ஒன்று இசை, இரண்டு நாடகம், மூன்று சித்திரம், நான்கு சிற்பம்.

இது உலகுக்கே பொதுவான கலையாயிருந்தாலும் அவரவர் நாட்டில் பண்பட்டு வந்த கலைதான் அவரவர்களுக்குப் பிடிக்கும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நாடகம் மிகப்பழமையான கலை. அது படிப்படியாய் வளர்ச்சியடைந்து தான் வந்திருக்கிறது. நாடகத்தின் நிழல்தான் சினிமா. நாடகத்தை விட்டு அது வேறல்ல. நம் நாடகம் சகல கலைகளுக்கும் உறைவிடமாயிருக்கிறது. அது அவ்வாறு தான் இருக்கவேண்டும்.

பெரியோர்களே!

அறிவிலும், அனுபவத்திலும் சிறந்த எத்தனையோ அறிஞர்கள் இந்நாடக விஷயத்தைப்பற்றி உங்களுக்கு விளக்கமாகச் சொல்லுவார்கள். ஆனால் ஒன்றுமட்டும் கூறுகிறேன். நாடக நடிகர்களும் கம்பெனிவைத்து நடத்துகிறவர்களும் கதாசிரியர்களும் பாடகாசிரியர்களும் தென்னிந்தியாவில் சிறந்த அறிஞர்களும் நிறைந்த இந்த மகாநாட்டைப் போல் பிரதிநிதித்வமுடைய மகாநாடு இதற்கு முன் நடந்ததாகத் தெரியவில்லை. நாடக மகாநாடு என்பதற்கேற்ப நாடகத்திலீடுபட்ட முக்கியஸ்தர் அனைவரும் இருக்கிறார்கள். அவர்களுக்கு யோசனை சொல்ல தமிழ்நாட்டிலுள்ள சிறந்த அறிஞர்களும் குழுமியிருக்கிறார்கள். கலைஞர்களும் ரசிகர்களும் நிறைந்த இந்தமகாநாடு பயனுள்ளதாகவே இருக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு இம்மகாநாட்டை நான் திறந்துவைக்கிறேன்.

வாழ்க நாடகக் கலை!

# ஸ்ரீ சீதாராம விலாஸ் ரெஸ்டாரண்டு

போர்டிங் & லாட்ஜிங்



அன்புடன் உணவளிக்கும்
அன்னை வீட்டுக்கொப்பானது

இரங்கே கவுண்டர் வீதி,
கோயமுத்தூர்.

புரொப்ரைட்டர்
A. K. கிருஷ்ணய்யர்.

---

அசல் வைரம்போல் பிரகாசிக்கக் கூடிய

## ஒரிஜினல் மயில் மார்க்

## ★ ஸ்பெஷல் வைரங்கள் ★

எங்களிடம் சுத்தமான தங்கம், வெள்ளி,
ஆபரணங்கள் சரசமான விலைக்குக் கிடைக்கும்

ஸ்வஸ்திக், வசுந்தரா, பிரபாத், மிர்ரு, வளையல்களும், எனுமல், வளையல்களும், நவநாகரீக செயின், நெக்லெஸ், டோலக் வகையருக்களும் குறித்த தேதியில் சுத்தமாகச் செய்து கொடுக்கப்படும்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை விளங்கும்.

**N. K. சென்னியப்பக் கவுண்டர்,**
**N. N. வாரணவாசிக் கவுண்டர்.**

ஷராப் கடை மண்டி வீதி, ஈரோடு

# வரவேற்பு உரை

**(திரு. ஆர். கே. வேங்கடசாமி)**

**ஈரோடு நகராண்மைக் கழகத்தலைவர்**



தமிழ்ப் பெருமக்களே!

வாருங்கள் வாருங்கள், உங்கள் வரவு நல்வரவாகுக!

தமிழ் நாடகக் கலையின் முன்னேற்றத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைப்பற்றிச் சிந்திக்கவும், ஏற்ற திட்டங்களைப் போடவும் நீங்கள் இங்கு கூடியிருக்கிறீர்கள். உங்களுடைய இந்த முயற்சி மிகவும் போற்றத்தக்கது. இம்முயற்சியில் நீங்கள் முழு வெற்றியும் அடைவீர்களாக!

பெரியோர்களே, ஒரு கூட்டத்தினரோ, நாட்டினரோ தங்களை முன்னேற்றமடைந்தவர்களென்றும், நாகரீகமடைந்தவர்களென்றும் கூறிக்கொள்ளு முன்னர், தங்களுடைய கலையுணர்ச்சி எந்நிலையில் இருக்கிறது என்பதை ஆராயவேண்டுமென எண்ணுகிறேன். மக்களிடம் கலையுணர்ச்சி இல்லாவிட்டால், முழு வளர்ச்சியடைந்த சிறந்த கலைகள் அவர்களுடைய

நாகரீகத்தின் சிறந்த அம்சங்களாக இல்லாவிட்டால், அம்மக்கட் கூட்டத்தினர் தங்களைத் தாங்களே எவ்வளவு உயர்வாக எண்ணிக்கொண்டாலும், மற்ற இனத்தினரும் மற்ற நாட்டினரும் அவர்களை உண்மையான நாகரீகம் பெற்றவர்கள் என்று மதிக்க மாட்டார்கள்.

ஆதலால், ஒரு இனத்தாரின் பெருமைக்கு அவர்களுடைய கலையுணர்ச்சியும், கலைகளும் சிறந்த அளவுகோல்களாக இருக்கின்றன வென்பதை யாரும் மறுக்கமுடியாது.

எனவே, தமிழ் மக்களாகிய நாம் எவ்வளவுதான் சிறந்த பழமையான நாகரீகத்தை அடைந்தவர்களாக விருந்தாலும், தற்போது பிறநாட்டினரும் பிற இனத்தினரும் நம்மை மதிக்க வேண்டுமானல் நம் நாட்டுக் கலைகளைப் போற்றி வளர்ப்பதோடு நம் மக்களிடையே கலையுணர்ச்சியையும் வளர்க்க வேண்டும்.

அறிஞர்களே! கலைகள் பல வகைப்பட்டன. அவற்றுள் ஓவியம், சிற்பம், இசை, நாடகம் ஆகியவை நுண்கலைகளெனப் படும். இவற்றுள் இன்று நாம் கூடியிருப்பது நாடகக் கலையைப் பற்றி ஆராய்வதற்காகத்தான். பழங்காலத்திலிருந்தே தமிழ் மக்கள் நாடகக் கலையில் தேர்ச்சிபெற்றவர்களாகவே யிருந்தார்கள். சினிமா வருவதற்கு முன்னர் நம் தமிழ் நாட்டில் நாடகங்கள் அதிகமாக நடிக்கப்பட்டு வந்தன. ஆனல், பேசும் படம் பரவ ஆரம்பித்ததும் நாடகங்கள் கொஞ்சம் கொஞ்சமாக குறையவாரம்பித்தன. சினிமாப் போட்டியால் நாடகம் அழிந்து விடாது. கிராமபோனும் ரேடியோவும் மலிந்துள்ள இக்காலத்தில் பாட்டுக்கச்சேரிகள் நடப்பதில்லையா? அஃதேபோல சினிமா வளர்ச்சியால் நாடகக்கலை அழியாதென்பது திண்ணம்.

தற்போது நாடகங்கள் குறைந்து கொண்டு வருவதற்கு சினிமாவின் பெருக்கைத் தவிர வேறு முக்கிய காரணங்களும் இருக்கின்றன. அவை பெரும்பாலும் நாடகங்களிலுள்ள குறைபாடுகளேயாகும். அக்குறைபாடுகளால் நாடகங்கள் மக்கள் உள்ளத்தைக் கவருவதர்யில்லை.

முதலாவதாக நாடகங்களில் நடிக்கப்படும் கதைகளைப் பார்ப்போம். இக்கதைகள் மக்களுடைய மனோ நிலைக்கு ஏற்ற

வைகளாக இல்லை. அரசியல், பொருளாதாரம் முதலிய வாழ்க்கையின் முக்கியத் துறைகளிலெல்லாம் கிளர்ச்சிகளும் கொந்தளிப்பும் ஏற்பட்டிருக்கும் இந்தக்காலத்திலும் பண்டுபோலவே மக்களைப் பழம் புராணக் கதைகளால் பரவசப்படுத்த முடியாது. ஆகவே, மக்களின் மனோ நிலையையும் உலகத்தின் போக்கையும் நன்றாக உணர்ந்த சிறந்த ஆசிரியர்கள் தோன்றி, மக்களின் எண்ணங்களையும், குறிக்கோள்களையும் உயர்ந்த முறையில் எடுத்துக்காட்டும் சிறந்த நாடக நூல்களை எழுத வேண்டும்.

இரண்டாவதாக, இப்போது இருக்கும் நாடகங்களும் நல்ல முறையில் நடிக்கப்படவில்லை. ஏதோ ஒருசில நாடகக் கம்பெனிகளைத் தவிர மற்றவர்கள் நடிக்கும் நாடகங்கள் மிக மோசமாகவிருக்கின்றன. நாடக மேடையின் அமைப்பும், நல்ல நடிப்புத் திறமையும், நீண்ட பயிற்சியும், ஓரளவுக்குட்பட்ட பாடல்களும், பக்கவாத்திய ஒத்துழைப்பும் ஒரு நாடகத்தின் வெற்றிக்கு இன்றியமையாதவை. இவ்வளவு அம்சங்களையும் சரியான முறையில் பொருத்தி நாடகங்களை நடத்தும் கம்பெனிக்காரார்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். பல நாடகங்கள் ஏதோ ஒரு முறையில் நாடகமென்ற பெயரால் நடத்தப்படுகின்றன. அந்த நாடகங்களில் நடிக்கும் சில குறிப்பிட்ட நடிகர்களின் பெயராலும், புகழாலும் அதற்கும் மக்கள் அதிகமாகச் செல்வதைப் பார்க்கிறோம். செல்லும் மக்களுக்கு அங்கு நடைபெறும் நாடகத்தைப்பற்றிக் கவலையில்லை. அந்நடிகர்களின் புகழ்பெற்ற சில சினிமாப் பாடல்களைக் கேட்பதோடு திருப்தி யேற்பட்டு விடுகிறது. இந்நிலை வருந்தத்தக்கது.

மூன்றாவதாக, நாடக பாத்திரங்கள் பேசும் பேச்சு இலக்கண வரம்பிற்குட்பட்ட இனிய எளிய தமிழ் நடையாக இருக்கவேண்டும். அதற்குப் பதிலாக தற்கால நாடக மேடைகளிலும், சினிமாவிலும் பெரும்பான்மையாக உபயோகப்படுத்தப்படும் பேச்சு காதிற்கும், உள்ளத்திற்கும் ஒருங்கே துன்பந் தருவதாகவும், தமிழ்க் கொலைக்கு வழிகாட்டியாகவும் இருக்

கின்றது. இவ்விஷயத்தில் இன்றிரவு நீங்கள் பார்க்கவிருக்கும் **"ஔவையார்"** என்ற நாடகம், நமக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியதாகவும், இனிமேல் நாடகங்களில் பாத்திரங்கள் எத்தகைய உரைநடையைக் கையாள வேண்டுமென்பதற்கு எடுத்துக் காட்டாகவு மிருக்குமென்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆகவே, தமிழ் நாடகக் கலை முன்னேற்றமடைய வேண்டுமானல், மக்கள் மனத்தைக் கவரக்கூடிய நாடகங்கள் இயற்றப் படவேண்டும். அவற்றை இயற்றும் நாடகாசிரியர்கள் நல்ல தமிழ்ப் பற்றுடையவர்களாகவும், ஆங்கிலம் போன்ற பிற மொழிகளிலுள்ள நல்ல நாடகங்களை ஆராய்ந்து நாடகக் கலையின் நுட்பங்களை உணர்ந்தவர்களாகவும் இருக்கவேண்டும்.

இத்துறையில், காலஞ்சென்ற பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களும். இன்று நம்மிடையே வந்திருக்கும் இராவ்பகதூர் சம்பந்த முதலியார் அவர்களும், ரேடியோ நாடகங்களின் மூலம் தொண்டாற்றிவரும், உயர்திருவாளர் M. N. M. பாவலர் அவர்களும் செய்துள்ள தொண்டு போற்றத்தக்கதாகும்.

மேலும், நாடகக் கலையில் ஆர்வமும் கல்வியறிவும் உள்ளவர்கள் நடிகர்களாக நல்ல பயிற்சிபெற்று நாடகக் கலையின் மூலம் மக்கள் அறிவை வளர்ப்பதே தங்கள் வாழ்க்கையின் நோக்கம் என்ற திண்ணமான எண்ணத்தோடு இத்துறையில் இறங்கித் தொண்டு செய்ய வேண்டும்.

அன்பர்களே! இவ்வளவு காலமாக இல்லாமல் இப்பொழுது ஈரோட்டிலுள்ள சில பெரிய மனிதர்களுக்கு நாடகக்கலை அபிவிருத்தியைப்பற்றி என்ன அக்கரை வந்தது? இதில் உள்ளூர ஏதேனும் சூழ்ச்சியிருக்குமோவென சிலர் நினைக்கக்கூடும்; எவ்வித சூழ்ச்சியுமில்லை. தந்திரமு மில்லையென்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

சென்ற ஏழெட்டு மாத காலமாக டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகங்களை இந்நகரில் பார்த்தபின், நாடகக் கலையின் மேன்மையையும், அது மக்களிடையே பெற்றுள்ள செல்வாக்

கையும், அதனாலேற்படும் பயனையும் ஒருவாறு நன்குணர்ந் தோம். அதன் காரணமாக இக்கலையை நல்ல முறையில் போற்றி வளர்ப்பதற்கு, தமிழ்நாட்டிலுள்ள அறிஞர்களை யெல்லாம் ஒருங்கு கூட்டி யோசிக்கவும், இயலுமானால் உருப்படியான திட்டங்கள் வகுக்கவும் முடிவு செய்தோம். அதற்கிணங்க, கலை வளர்ச்சி எல்லோருக்கும் பொதுவென்ற முறையில், பல வேறு கொள்கையுடையவர்களும் ஒன்று சேர்ந்து, தொழில் நடத்தும் கம்பெனியாரின் பூரண ஒத்துழைப் பையும் பெற்றதால் இன்று இம்மகாநாடு நடைபெறுகிறதே யன்றி, தனிப்பட்ட சிலருடைய பெருமைக்கோ, புகழுக்கோ அல்லவென்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தோழர்களே! உங்களுடைய அருமையான பொழுதை இன்னும் அதிகமாக எடுத்துக்கொள்ள நான் விரும்பவில்லை. இந்த நாடகக் கலை அபிவிருத்தி மகாநாடு முதல் முதலாக இந்நகரில் கூட்டப்பட்டது, இந்நகருக்கும், நகர மக்களுடைய கலையுணர்ச்சிக்கும் பெருமையளிப்பதாக நான் கருதுகிறேன்.

தமிழகத்தின் சிறந்த அறிஞரும், மேனாட்டுக் கலைகளின் வளர்ச்சியை நேரில் கண்டறிந்தவருமான சர். R. K. சண்முகம் செட்டியார் அவர்களும், தமிழ் நாடக மறுமலர்ச்சிக்கு அடிகோலிய ராவ்பகதூர் P. சம்பந்த முதலியார் அவர்களும் நல்ல முறையில் நாடகக் கலையைப் போற்றி வளர்த்துவரும் கம்பெனியார்களும் நிறைந்த இந்த மகாநாடு, தமிழ் நாடகக் கலை வளர்ச்சிக்கு வழிகாட்ட எவ்வகையிலும் உரிமையுடைய தென்பதையும், பிரதிநிதித்வமுடையதென்பதையும் எவரும் மறுக்கமாட்டார்களென நம்புகிறேன்.

நான் தமிழில் போதிய பயிற்சியில்லாதவனாயினும் எனக் குள்ள ஆர்வத்தின் காரணமாக உங்களை வரவேற்கும் இப் பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

இங்கு விஜயம் செய்துள்ள இம்மாபெரும் தலைவர்கள் இம்மகாநாட்டோடு இக்கலையை மறந்துவிடாது, நிரந்தரமாக இதில் ஈடுபட்டுத் தொண்டாற்றி தமிழிசை வளர்ச்சியோடு

இதனையும் பொறுப்பேற்று நடத்தி, நாடகக்கலையை அதன் உன்னதமான ஸ்தானத்தில் வைப்பார்களென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

இத்தகைய ஒரு நன்முயற்சிக்கு ஆதரவுகாட்டி, தமிழ் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து இங்கு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்புக் கழகத்தின் சார்பில் என் உள்ளம் நிறைந்த அன்போடும் மகிழ்ச்சியோடும் வரவேற்கின்றேன்.

**வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்!**
**வாழிய பாரத மணித்திரு நாடு!**

“சீரியநற் கொள்கையினை எடுத்துக் காட்ட
சினிமாக்கள் நாடகங்கள் நடத்த வேண்டும்’

—**பாரதிதாஸன்**

## விக்டோரியா பிஸ்கட் பாக்டரி

சுகாதார முறைப்படி தயார் செய்த பட்டர் பிஸ்கட், பீனஸ் பிஸ்கட், சாக்லட் பிஸ்கட், வெனிலா பிஸ்கட், பார்லி பிஸ்கட், சூஸ்பரி, டின்னர் S. B. பிஸ்கட் வகைகளும், பிளம் கேக், பாஞ்சு கேக், பாஸ்கட் கேக், பேன்ஸ் கேக் இன்னும் பலவிதமான கேக் தினுசுகளும் குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

● வெளியூர் ஆர்டர்கள் உடனே கவனிக்கப்படும்.

**K. குப்பண்ணக் கவுண்டர்,**
விக்டோரியா பிஸ்கட் பாக்டரி,
லார்டு நேபியர் வீதி,
**ஈரோடு**

## ஸ்ரீ குமரன்
## சுத்தக்கதர் வஸ்திராலயம்

நம்பிக்கையான சுத்தக்கதர் வேஷ்டிகள், சால்வைகள், ஷர்ட்டிங் முதலிய பல ரகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

●

ஏழைத் தொழிலாளருக்கு உணவளிக்கும் சுத்தக் கதர்த்தொழிலை ஆதரியுங்கள்.

**ஸ்ரீ குமரன் கதர் வஸ்திராலயம்**
ஈஸ்வரன் கோவில் வீதி
**திருப்பூர்**

# ஸ்ரீ முருகன்
# சாயத் தொழிற்சாலை

ஆரியமாலா, மனோன்மணி, முதலிய பலவித உத்திரவாதமுள்ள பார்டர் சேலைகள் குறித்த காலத்தில் தயார்செய்து கொடுக்கப்படும்

★

**S. N. கருப்பண்ணன்**
மானேஜர்,
**சென்னிமலை**



## எங்களிடம்

சுத்தமான தங்கத்தினால் செய்யப்பட்ட ஆபரணங்கள் சரசமான விலைக்குக் கிடைக்கும். இன்னும் ஸ்வஸ்திக், வசுந்தரா, பிரபாத், மீர்னு வளையல்களும், எனுமல் வளையல்களும், நவநாகரீக செயின், நெக்லேஸ் லோலக் வகையருக்களும் குறித்த தேதியில் சுத்தமாக செய்து கொடுக்கப்படும்

**எங்களிடமுள்ள,**

அசல் வைரம், போல் பலவித வர்ணங்களுடன் பிரகாசிக்கக் கூடிய புளூ ஜாகர் எம்பயர் வைரங்களை ஒரு முறை பரிக்ஷித்துப் பாருங்கள்.

**E. K. கோவிந்தசாமி & Co.,**
பாரத் ஜுவல்ரி மார்ட்,
**மண்டி வீதி, ஈரோடு.**



மகாநாட்டுத் தலைவர்

# தலைமைப் பேருரை

(சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் K. C. I. E.)

நண்பர்களே! நகரசபைத் தலைவர் அவர்களே, அங்கத்தினர்களே!

நாடகக்கலை அபிவிருத்தி மகா நாட்டுக்குத் தலைமை வகிக்க வந்த எனக்கு, ஈரோடு நகரசபையின் சார்பாக ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்ததை நான் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டேன், காரணம், இது என்னைக் கௌரவப் படுத்துவது என்பதற்காக அல்ல. நாடகக்கலை அபிவிருத்தியிலே நகர சபைகள் அக்கரை எடுத்துக் கொள்ள வேண்டியது மிகப் பொருத்தமானதாகும். நாடகக்கலை மாநாட்டுத் தலைவரைப் பாராட்டுவது, மிகவும் பொருத்தம் என்று கூறுவேன். நமது நாட்டிலே நாடகக் காரர்களைக் கூத்தாடிகள் என்று கேலியாகப் பேசுகிறார்கள். மேனாடுகளிலே, அவர்களைப் பாராட்டுகிறார்கள். நகரசபைகள் நாடகக் கலைக்காக உதவி செய்கின்றன. மேனாடுகளிலே காணப்படும் பெரிய தியேட்டர்கள் நகர சபைகளுக்குச் சொந்தமானவைகளே. பாரிஸ் பட்டணத்தில் உள்ள பெரிய அருமையான நாடகக் கொட்டகை, அந்த ஊர் நகரசபையின் சொந்தக் கட்டிடம். அதுபோலவே மேனாடுகளிலே மற்ற இடங்களிலும் விலை உயர்ந்த நாடகக் கொட்டகைகள், நாட்டிய சாலைகள் எல்லாம் நகரசபைகளுக்குச் சொந்தம். இனி இங்கும் நகரசபைகள் நாடகக்கலைக்கு ஆதரவு தருமென்று நம்புகிறேன்.

நாடகக்கலை என்பது நமது தமிழ் நாட்டிலே பழமையானது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பும் இருந்தது. ஆனால், இன்று சிலர் 'நாடகம்' என்ற சொல்கூடத் தமிழல்ல! சமஸ்கிருதம் என்று கருதுகிறார்கள். சமஸ்கிருதம் என்றாலே செம்மைப்படுத்தப்பட்ட மொழி என்றுதான் பொருள். ஆரியர்கள் இங்கு வரும்போது, சமஸ்கிருதத்தை வளமான ஒரு பாஷையாகக் கொண்டு வரவில்லை. இங்கு வந்து தமிழ்மொழியிடமும், தமிழ்க் கலையிடமும் பல கருத்துக்களைப் பெற்றுத் தங்கள் மொழியை வளர்த்துக் கொண்டனர். அப்படிச் செம்

மைப் படுத்தப்பட்ட மொழியே சமஸ்கிருதம் என்பது. சிலர் எதைப் பார்த்தாலும் இது சமஸ்கிருதத்திலிருந்து வந்தது. இது ஆரியக்கலை, என்றுகூறித் தமிழருக்கு இழிவு தேடுகிருர்கள். நாடகம் என்ற சொல், நடை என்ற தமிழ்ச் சொல்லின் கருத்தைக் கொண்டது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப் பட்ட சிலப்பதிகாரத்திலே நாடகக்கலை இருக்கிறது. பழங் காலத்திலே நாடகங்களை மூன்று வகையாகப் பிரித்திருந்தனர். ஒன்று பக்திரசமான புராணக் கதைகள். இவைகளைக் கோயில் களிலே நடத்தி வந்தார்கள். மற்ருென்று வீரர் கதை, இது அரசர்கள் முன்னிலையில் மாளிகைகளிலே நடிக்கப் பட்டன. மூன்ருவது அறிவு வளர்ச்சிக் கதைகள். இவைகளை மக்கள் முன்பு நடத்தி வந்தார்கள். இப்போதோ, நாடகங்கள் யாவும் வெறும் புராணக்கதைகளாக உள்ளன. நாரதர் வந்து வந்து போகாத நாடகமே காணேம். அவைகளைப் பார்க்கும்போது கஷ்டமாகத்தான் இருக்கிறது. புதிய கருத்துள்ள சீர்திருத்த நாடகங்கள் நடத்த வேண்டும். புராணங்களிலே புளுகுகள் உள்ளன. இராமாயணம், பெரிய புராணம், பாரதம் போன்றவைகள், புராணப் புளுகுகள் என்பதிலே சந்தேக மில்லை. இதைவிட அதிகமான புளுகுகள் ஆங்கிலத்தில் இலியட்டிலும், ஒடிசியிலும் உள்ளன. நான் மக்களிடையே உள்ள மூடப்பழக்க வழக்கங்கள் போகவேண்டும் என்று முன்பெல்லாம் பேசிவந்தவன்தான். இப்போதும், எனக்கு அதுதான் கருத்து. ஆனல் இந்தப் புராணங் களிலே, கலை யழகும் இருக்கிறது. சிலர் இப்புராணங் களைக் கொளுத்திவிட வேண்டுமென்று கூறுகிருர்கள். இவை களைக் கொளுத்தி விட்டால் மக்களிடம் உள்ள மூடப்பழக்க வழக்கங்கள் போய்விடுமா! போய்விடுவதானல் விறகுப் பஞ்ச முள்ள இந்த நாட்களிலே அவைகளைக் கொளுத்தக்கூட விட லாம். மக்களிடையே இந்த மூடப்பழக்க வழக்கங்கள் ஒழியும் படியான அறிவை உண்டாக்க வேண்டும். படை யெடுப்பின் போது ஒரு அரசன், படிப்பகம் ஒன்றைக் கொளுத்தினன், "கொரானில் இருக்கும் உண்மைகளே உலகுக்குப் போதும். ஆகவே வேறு புத்தகங்கள் வேண்டாம். படிப்பகம் தேவை யில்லை. இந்தப் படிப்பகத்திலே உள்ள புத்தகங்களிலே காணப்

படும் சகல ஞானமும், கொரான் ஒன்றிலே உண்டு; ஆகவே வேறு நூல் தேவையில்லை. கொரானுக்கு மாறுபாடான கருத்துகள் இந்தப் புத்தகத்திலே இருக்குமானல் அவை இருக்கக் கூடாது.'' என்று சொன்னனும். அதைப்போலப் பழம் நூல்களைக் கொளுத்தி விட்டால், பிறகு நமக்கென என்ன நூல் இருக்கும்? இந்த நூல்களைப் பற்றிக் கவனிக்கும்போது, அந்தக் காலத்துக் கருத்தைக் கவனிக்க வேண்டும். சிலப்பதிகாரத்தின் சுவையை உணர வேண்டுமானல், அது எழுதப்பட்ட காலமாகிய 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த கண்ணேடும் மனத்தோடும் பார்த்தால்தான் சுவை தெரியும். அறிவு ஒன்று மட்டுமே போதும் என்றிருக்க முடியாது. உள்ளத்திலே வேறு உணர்ச்சிகளும் வேண்டி இருக்கிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்திலே அரங்கேற்று காதையிலே, நாடகமேடையின் அமைப்புக்கூடச் சரியாகக் கூறப்பட்டிருக்கிறது. இத்தனை கோல் நீளத்தில் இத்தனைகோல் அகலத்தில் இவ்வளவு உயரமுள்ளதாக நடனமேடை இருக்க வேண்டுமென்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. கோல் என்றல் என்ன? என்று நான் மலையாள நாட்டினரைக் கேட்டேன். அவர்கள் அந்த அளவைக் கூறினர்கள். இன்னும், அவர்களின் நில அளவு முறையிலே கோல் கணக்கேதான் இருக்கிறது. பழய காலத்திலேயே நாடகக்கலை இங்கு இருந்திருக்கிறது. நாட்டியத்தை நாம் இன்று பரதநாட்டியம் என்று கூறுகிறேம். நாட்டியக்கலையே பரதன் என்பவர் எழுதிய நூலை ஆதாரமாகக் கொண்டது என்று சிலர் கூறுகின்றனர். பிறகு நான் யோசித்தேன். தமிழ் நாட்டிலே நாட்டியத்துக்குப் பரத நாட்டியம் என்று பெயர் வருவானேன்? தமிழருக்கு என்று நடன நூல் இருந்ததில்லையா என்று யோசித்தேன். பரதம் என்ற சொல் எப்போது வந்தது என்று ஆராய்ந்தேன். சுமார் இருபத்து ஐந்து வருடங்களாகத்தான் இந்தப் பரத நாட்டியம் என்ற சொல்வழங்குகிறது. சென்னையிலே மியூசிக் அகாடமி போன்றவைகள் தோன்றிய பிறகே, பரத நாட்டியம் என்ற பெயர் உபயோகிக்கப்பட்டது. முன்பெல்லாம் அதனைச் சதிர்க்கச்சேரி என்றே சொல்லிவந்தார்கள். பரதம் எழுதப்பட்டுச் சுமார் ஆயிரம் வருடமிருக்கும், சிலப்பதி

காரமோ 2000 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டது. எனவே பரதநாட்டிய நூல்தோன்றுவதற்கு முன்பே தமிழ் நாட்டிலே நாட்டியக்கலை விருத்தியாகி இருந்தது. பழங் காலத்திலிருந்து வளர்ந்து வரும், இந்நாடகக்கலையை அபிவிருத்தி அடையச் செய்யவே இன்று இந்த மகாநாடு நடைபெறுகிறது. இதிலே பலர் நாடகக்கலை பற்றிப்பேசுவார்கள். இந்த மகா நாட்டுக்குத் தலைமைவகிக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்ட மகாநாட்டு நிர்வாகிகளுக்கு என் வந்தனத்தை அளிக் கிறேன்.

தூய வாழ்வைத் துலக்கி யுலகில்
தோற்றவைத்து நடித்திடல் நாடகம்.

—சுத்தானந்தபாரதியார்

தமிழ் நாடகத் தலைமையாசிரியர்

**திரு தூ. தா. சங்கரதாஸ் சுவாமிகள்**



நாவல் நாடக ஆசிரியர்

**திரு M. கந்தசாமி முதலியார் அவர்கள்**



தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்

உயர்திரு தூ. தா. சங்கரதாஸ் சுவாமிகளின்

திருவுருவப்படத்

# திறப்பு விழா

( நாடகமணி )

திரு. எம். என். எம். பாவலர்



தலைவர் அவர்கட்கும மற்றுமுள்ள பெரியோர்கட்கும், அறிஞர்கட்கும் வணக்கம். இம்மாபெரும் நாடகக்கலை அபி விருத்தி மகாநாட்டில் எனக்கும் ஒரு பங்கு கொடுக்க வேண்டி, மிகவும் நல்ல பணி ஒன்றினை கொடுத்தமைக்காக மகாநாட்டின் தலைவர் அவர்கட்கும், நிர்வாகிகட்கும் பெரிதும் நன்றி செலுத் திக் கொள்ளுகிறேன். தமிழ் நாடகத் தந்தையாரும் தமிழ்

நாடகத் தலைமை யாசிரியரும் நன்மதிப்பிற்குரிய பெரியாருமான தூ. தா. சங்கரதாஸ் சுவாமி அவர்களின் திருவுருவப் படத்தை இன்று திறந்து வைக்கும் தொண்டு, எனது வாழ்க்கையில் மறக்க முடியாத நல்ல தொண்டாகும். நல்லவர்கட்கும் அறிஞர்கட்கும் சேவை செய்வதினாலும் அவர்களைப் பற்றிய நல்லுரைகளைக் கூறுவதினாலும் நாமும் நல்லவர்களாகின்றோம். நமது தொண்டும் நல்ல தொண்டாகிறது.

மனித சமுதாயத்தின் வாழ்க்கைக்கும், வாழ்க்கைக்கு அடிப்படையான சீர்திருத்தத்திற்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும், மொழி, கலை வளர்ச்சிக்கும் ஆதாரமாக விளங்கி வருவது "நாடகம்" என்பதை அறிஞர்கள் ஒப்புக் கொள்வார்கள். இன்னும் ஒருபடி அதிகம் கூறுவோமானால், மனிதப் பிறவி எடுத்த பயனை உண்மையில் அடைய வேண்டுமானால், அஃது நாடகம் ஒன்றினால்தான் முடியும்.

காலஞ்சென்ற திரு. சத்தியமூர்த்தி அவர்கள் "சங்கீதத்தின் மூலம் சுயராஜ்யம் அடைந்து விடலாம்" என்று ஒரு சமயம் கூறினர். அது அவர்கருத்து. நான் சொல்லுகிறேன், நல்ல முறையில் நாடகக் கலையை அபிவிருத்தி செய்து விட்டால், நாடக மூலமாகவே சுயராஜ்யத்தையும் அடையலாம். இது வெறும் வார்த்தை அலங்காரமல்ல. ஆராய்ச்சியினாலும், அனுபவத்தினாலும் நான் கண்ட உண்மையாகும். இதற்கு ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் கூறுகிறேன்.

பண்டைய நாளில் "பாரி வள்ளல்" என்ற குறுநில மன்னன் ஒருவன் இருந்தான். அவன் தமிழ் மொழியையும், தமிழ்க் கலையையும் வளர்த்து வந்ததால் அவன் புகழ் நாடெங்கும் பரவியது. குறுநில மன்னனின் புகழ் பெருகுவதைச் சகியாத சேர சோழ பாண்டிய அரசர்கள், படை யெடுத்து வந்து யுத்தம் செய்து, பாரி வள்ளலால் புறங்கண்டனர். பிறகு அம் மூவேந்தர்கள் இனிய குரலுடைய பெண்களையும், அழகும் நடிப்பும் உள்ள பல பெண்களையும் பாரியின் அரசவைக்கு அனுப்பி ஆடிப்பாடச் செய்தனர். அப் பெண்களின் ஆடல் பாடல் நடிப்பில் மகிழ்ந்த பாரி வள்ளல், வேண்டியதைக்

கேளுங்கள் தருவோமென்றான். நடன மாதர்களில் ஒருவள் பாரியின் புகழினைக் கேட்டாள். மற்றொருவள் அவனது அரசைக் கேட்டாள். வேறொருவள் பாரியின் உயிர்தனைக் கோரினாள். நடிப்பிலும் இசையிலும் திளைத்த அம்மன்னன் கலைக்காகப் புகழையும், அரசையும் தியாகம் செய்தான் என்பது சரித்திர உண்மை. புலவர்களின் கவிதையின் மேதையை மெச்சிப் புரவலர்கள் பலர் அடி வணங்கினர். இசையின் மேன்மையினால் இறைவனும் அருள் புரிந்தான் என்பதைக் காணுகிறோம். அங்ஙனமிருக்க, ஐம்புலன்களுக்கு அறிவையும், ஆனந்தத்தையும், ஞானத்தையும் ஒருங்கே கொடுக்கும் நமது நாடகத்தினால் அரும்பெருங் காரியங்களையும் அடையலாம் என்பது எனது துணிபு. எவ்விதம்?

நாடக அரங்கில் நடிக்கும் நடனமணிகள் காரியாதி காரியங்களை தத்ரூபமாக நடித்துக் காட்டுகிறார்கள். ஏற்றுக் கொண்ட பாத்திரங்கட்குத் தக்க உடுபாவனையுடனும், முக லட்சணங்களுடனும், தக்க காட்சி வசதிகளுடனும் நடித்துக் காட்டுகையில், நடிகன், நடிப்பு என்பதை மறந்து, தானே அவனாய் உணர்ச்சியுடன் நடிக்குங்கால், பார்ப்பவர்களின் ஐம்புலன்களையும் ஆட்கொள்கிறான். இதற்குத் துணையாக இயல், இசை வாத்தியக் கருவிகள் முதலியன அமைந்திருக்கின்றன. உலக நிகழ்ச்சிகளையும் பல்லாண்டு நடைபெற்ற சம்பவங்களையும், நாடக மேடையில் சில மணி நேரங்களில் நடித்துக் காட்டப்படுகையில், மக்கட்கு அஃது கண்ணுக்கு இனிய காட்சியாகவும், காதுக்கு இனிய அமுதமாகவும், அறிவிற்குரிய ஆதாரமாகவும் காணப்படுகிறது. பிச்சைக் காரர்களின் வாழ்க்கையிலிருந்து அரசர்கள் வாழ்க்கை வரையிலும், பாமரர் முதல் பண்டிதர் வரலாறுகளையும் பல்வேறு துறைகளில் காணப்படும் வாழ்க்கைச் சித்திரங்களையும் நாடக மேடையில் காண்பிக்கப் படுகிறது. மொழி, கவிதை, சம்பாஷணை, விகடம், வீரம், சோகம், தியாகம், சமுதாயச் சீர்திருத்தம், கலை வளர்ச்சி, இதிகாசம், புராணம், சரித்திரம் முதலிய அனைத்தையும் மக்கட்கு ஒருங்கே அமைத்து அளிப்பது நாடகம் ஒன்றுதான். இயலும் மொழியும், அறிவுக்கும் புலமைக்கும் மட்டும் துணை செய்கின்றன. இசை செவிக்கு மட்டும் இன்பம் பயக்குகின்றது.

தமிழிசையானல் சிந்தைக்கும் சிறிது உணர்ச்சியைத் தருகிறது. ஆனல், நல்ல நாடகங்கள் ஐம்புலன்கட்கும், மொழி கலை வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கு அவசியமான ஆநந்தத்தையும், அறிவையும் கொடுக்கின்றன.

இயலில் இசை சேருவதில்லை. இசையில் ஒரு பகுதி இயல் சேருகிறது. ஆனல் நாடகத்தில் இயலும், இசையும் சேர்ந்து, அதனுடன் நடிப்பும் அமைந்து நாடகமாகின்றது. இயலிற்கும் இசைக்கும் ஆதாரமாக உள்ளது நாடகமாதலால், இயல்" இசை - நாடகம் என்று நாடகத்தை இறுதியில் அடிப்படையாக வைத்து முத்தமிழ் என முடிவு கட்டினர் ஆன்றோர். நாடகமோ, நடிப்புக் கலையோ, நாடகத் தமிழோ சேராவிடில் "முத்தமிழ்" என்பதற்குப் பொருளே இல்லை. இயலிற் காதாரமாகவும், இசை வளர்ச்சிச் சங்கமாகவும், நாடகமும் நாடக மேடையும் விளங்குகின்றது. இத்தகைய சீரிய கலைக்கு நவரசங்களும், கதையும் காட்சியும் துணைசெய்கின்றன.

இன்னொரு முக்கியத்துவமும் நாடகக்கலைக்கிருக்கிறது, நாடகத்தினர் இயலையும், இசையையும் அரங்கத்தில் மிளிரச் செய்யலாம்; ஆனல், இயல் அன்பர்கள் நடிப்பினை அனுஷ்டிக்க முடியாது. இசை வாணர்களும் நாடக பாவத்தைக் காண்பிக்க இயலாது. ஒரு நடிகர் இசை பாடுபவர்களைப் போலவே நடிக்கலாம், பாடலாம், எங்கே, ஒரு இசைவாணர் பாடுகையில் நடிகரைப்போல் நடிக்கச் சொல்லுங்கள். முடியாது. மீறி நடிக்க முயன்ருல் அது கேலிக் கூத்தாக இருக்கும். நடிப்பிலக்கணத்தில் இசை இலக்கணம் சேரும் ஆனல் இசை இலக்கணத்தில் நடிப்பிலக்கணம் சேராது. சேரவும் முடியாது. அதுபோலவே இயல் இலக்கணமும். ஆகவே, இயல் இசை இலக்கணங்கள் நடிப்பிலக்கணத்தில் சேரும். அப்போது அவைகட்கு ஓர் பெரும் மதிப்பேற்படும். இத்துடன் நடிப்பில் நடனமும் சேர்ந்து விடும். இவைகள் தான் நாடகக் கலையின் அடிப்படையான தத்துவம். இது உயர்ந்த தத்துவமாகும். இத்தகைய அரும்பெரும் காரணங்களால் நடிப்புக்கலையை ஆதாரமாகக் கொண்ட நாடகக்கலை தொன்று தொட்டு நமது நாட்டில் சீருடன் விளங்கி வருகின்றது.

இவ்வுண்மையை அறிந்த ஸ்ரீமதி சரோஜினி நாயுடு அவர்கள் சமீபத்தில் கூறுகையில், "கல்வியைப் பரப்புவதற்கான விரிவான முறைகளில் நாடகசாலையும் ஒன்று, நீண்டகாலமாக நாடக சாலை பொது ஜனங்களின் சர்வகலாசாலையாகவும், வாழ்க்கையின் பொருளை எடுத்துக்கூறும் சாதனமாகவும் இருந்து வந்திருக்கிறது. மற்ற நாடுகளில் இருப்பது போலவே இந்தியாவிலும் நாடக மேடைமூலம் மக்களுக்கு ஒற்றுமையைப் பற்றிய மகத்தான பாடங்கள் போதிக்கப்படவேண்டும். நாடகம் மக்கள் உள்ளத்தை உற்சாகப்படுத்தி அறிவை விசாலப்படுத்தும்" என்று கூறினர்.

இத்தகைய நாடகக் கலை அபிவிருத்தி அடைவதற்கு கதாசிரியர்களும், கவிதை ஆசிரியர்களும், நாடகாசிரியர்களும் அவசியமானவர்கள்; அடிப்படையானவர்கள். ஒரு நல்ல நாடகாசிரியரின் அறிவின் திறத்தினல், புலமையின் வியாபகத்தினல், பல்வேறு சமுதாயத்தினர்கள் கொண்ட, பல லட்சம் மக்கள் ஆனந்தமடைய வேண்டும். அறிவுணர்ச்சி பெறவேண்டும். நாடகாசிரியரின் நல்ல அடிப்படைபோட்ட கட்டுக் கோப்பின் பேரில் தான் நடிப்பு, பாவம், கதை, இசை, மொழி, காட்சி முதலியன நன்கு மிளிரவேண்டும். இத்தகைய கட்டுக் கோப்பை நல்ல முறையில் அமைத்து உலகிற்கு அளிக்கும் உத்தம நாடக ஆசிரியர்கள் இலைமறைவு காய் மறைவு போல் எங்கோ ஒருவர் இருவர் தோன்றுவர், தோன்றிப் புகழ் பெறுவர், மற்றவர்களையும் புகழ்பெற வைப்பர். அத்தகைய புகழுடம் பெடுத்த புண்ணிய சீலர்தான் நமது தமிழ்நாடகத் தலைமை ஆசிரியரான, திருவாளர் தூ. தா. சங்கரதாச சுவாமிகள். தமிழ் நாடக உலகில் "சுவாமிகள்" என்றால் சங்கரதாச சுவாமிகள் அவர்களையே குறிக்கும். சங்கரதாச சுவாமிகள் என்று கூறினலே தமிழ் நாடக நடிகர்கட்கு அவர்பால் பக்தியும் அன்பும் ஏற்படும். தங்களை அறியாமலே அஞ்சலி செய்வார்கள். நாடக முதலாளிகள் அச்சம் கொள்வார்கள். இதன் காரணமாகவே சுவாமி அவர்கள் தலைமைத் தமிழ் நாடகாசிரியர் என்று பல்லோராலும் போற்றப்பட்டு வருகிறார். தலைமைத் தமிழ் நாடகாசிரியர் என்று நமது சுவாமிகளைத் தவிர வேறு எவருக்கும் சொல்லப் படவில்லை. அவ்விதம் சொல்லிவிடவும் முடியாது. நாடக உல

கில் எத்தனையோ சுவாமிகள் புறப்பட்டார்கள். எனினும் எங்கள் அமுதக்கவியாசிரியர் சங்கரதாச சுவாமிகளின் பெயர் தான் இன்று நின்று நிலைத்திருக்கின்றது. என்றும் நின்று நிலைத்திருக்கப் போகின்றது என்பதை இங்கு நான் வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

இத்தகைய இறுமாப்புடன் நான் சொல்வதற்குரிய நல்ல காரணம் பலவிருக்கின்றன. இன்று தமிழ் நாட்டில் நடிகர்கள் என்போர் பலரும் அவரது சீடர்களே! பல நடிகர்கள் நேர்முகமாக சுவாமிகளால் கற்பிக்கப்பட்டும், சிலர் மறைமுகமாக அவரது நாடகங்களையும், பாடல்களையும் கற்பித்துக் கொண்டு அதனை உபயோகித்து புகழும் செல்வமும் அடைந்து வருகின்றனர். அவரது கவிகளைப் பாடாத நடிகர்களே இல்லை யென்று கூறலாம். தமிழ் நாடகத்தில் பெரும் புரட்சி செய்து உரிய காலத்தில் அதனை வளர்ச்சிபெற வைத்தார் நமது சுவாமிகள். அன்று அப்பெருந்தகையாரின் அரிய உழைப்பு இல்லையேல், இன்று தமிழ்நாடகம் மிகவும் கீழ் நிலையில் இருக்கும் என்பதே எனது துணிபு. தமிழ் நாடகக் கலைஞர்கள் செய்த தவத்தினால் சுவாமி அவர்கள் தமிழ் நாட்டிற் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வந்தார். பெரும்புலமையுடன் இயலினும் இசையிலும் வல்லுனரான சுவாமிகளின் அறிவும் உழைப்பும் எங்ஙனம் நாடகத் துறைக்கு அணிகலனாக விளங்கியது என்பது சிந்திப்பதற்குரியதாகும்.

## சுவாமிகளின் வாழ்க்கைச் சுருக்கம்

தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளையை அளித்த தூத்துக்குடி நகரமே இப்புலவர் சிகாமணியையும் அளித்தது. இராமனாதபுரம் சேதுபதியின் வகுப்பான மறவர் குலத்தில், தோன்றிய புலவர் சிகாமணி நமது சுவாமிகள். சுவாமியின் தகப்பனார் தாமோதரக் கணக்கப் பிள்ளை யென்பார், கல்வி கேள்வியில் வல்லவர். அவரே சுவாமிக்கு கல்வி அளித்தவர். தகப்பனார் கூறியபடி, சிறுவயதில் சுவாமி அவர்கள் பாரத காவியத்தை மூன்று தடவை வசனமாக எழுத்தாணி கொண்டு ஓலையில் எழுதி யிருக்

கின்றுராம். இலக்கிய இலக்கணம் கற்றுக் கொண்ட பிறகு சுவாமி யாழ்ப்பாணம் சென்று தனது கல்வி அறிவை விருத்தி செய்து கொண்டார். பிறகு பல நாடகங்களில் நடித்தும் பல சபாக்கள் ஏற்படுத்தியும், ஆசிரியராகவும் இருந்தும் வந்தார். 1902-ல் நாடக ஆசிரியர் என்ற புகழ் சுவாமிக்கு கிடைத்தது. சுவாமிகள் காலத்திய நாடக ஆசிரியர்கள், உடுமலைச் சரபம் முத்துச்சாமிக் கவிராயர், கும்பகோணம் வீராசாமிக் கவிராயர், ஆரியகான சந்தானகிருஷ்ண நாயுடு முதலியவர்கள். சுவாமிக்கு 15-வது வயதில் மாயவரம் வேத நாயகம் பிள்ளை இருந்ததாகத் தெரிகிறது. ஒரு புலவர் மற்ற புலவரை நேசிக்கும் இயல்பில்லாத இந்நாட்டில் கவிராயரும், சுவாமியும் மற்றுமிருவரும் இணைபிரியாத நட்பாளராக இருந்தது அவர்களின் அறிவின் மேன்மையைக் காட்டுகிறது.

சுவாமி தமிழ்ப் பெரும் புலவர், என்று மட்டும் சொல்ல முடியாது. இயலிசைப் பெரும் புலவர் என்றுதான் கூற வேண்டும். கடின பதங்கள் கொண்ட வண்ணம், சந்தம், சிந்து, வெண்பா, விருத்தம், கலித்துறை முதலியவைகளை இயற்றுவதில் வல்லார். நாற்கவி இலக்கண இலக்கிய விற்பன்னர். ஆனுல், அதனை மிக அழகாகவும், பலருக்கும் புரியும் விதமாகவும் அமைத்துக் கொடுப்பார். எவ்விதச் செய்யுளையும் விரைவில் எழுதுவார். தமிழ் வளர வேண்டும், தமிழர் கலை ஓங்க வேண்டும், என்ற ஆர்வங்கொண்டவர். கவிதைத் துறையில் வல்ல சுவாமிகள் இயற்றமிழை தனது அபார அறிவினுல் வளைத்துப் பிடித்து இசைப் பாடலில் புகுத்தி நாடகத்துறை மூலம் சர்வ ஜனங்கட்கும் தமிழ் அறிவையும் தமிழ்க் கலையின் அருமையையும் புகட்டுவித்தார். சிறு வயதிலேயே சங்கீத ஞான முடையவராக இருந்ததோடு ஆர்மோனியம் வாசிக்கும் வன்மை உடையவராகவும் இருந்தார். நாடகத்துறையி லீடுபட்டு, நாடக லட்சணங்களையும், தமிழையும் பரவச் செய்து வந்ததுடன் நமது சுவாமிகள் நடிக லட்சணத்தையும் விளக்க வேண்டி தாமே நாடகத்தில் நடிக்க முற்பட்டார்.

கீசகன், இரணியன், இராவணன், இடும்பன், நரகாசூரன், யமன் முதலிய வீரமிகு வேடங்களில் சுவாமிகள் நடித்துள்

ளார். இவருக்கு அக்காலத்தில் சம நடிகராக நடித்தவர்கள் கலியாணராமய்யர், பரமேஸ்வரய்யர், வி. பி. ஜானகி அம்மாள், பரமக்குடி அரங்கசாமி ஐயர், ராமுடு ஐயர், டி. டி. தாயம்மாள் முதலியோராவர். பி. எஸ். வேலுநாயர், சின்னச்சாமா, எம். ஆர். கோவிந்தசாமி முதலிய பெரிய நடிகர்கள் சுவாமிகளின் மாணவர்கள்தாம். "ஜெகநாதய்யர் கம்பெனி" என்ற பாய்ஸ் கம்பெனி, ஓரிஜினல்பாய்ஸ் கம்பெனி முதலியவைகளின் உபாத்தியாயராகவுமிருந்தார். பிறகு (1920-ல்) மதுரை தத்துவ மீனலோசனி வித்வ பால சபா என்ற பெயருடன் ஒரு பாய்ஸ் கம்பெனியை ஆரம்பித்து வெகு திறமையுடன் நடத்தி வந்தார். சுவாமிகள் தமது அறிவாற்றல் முழுமையையும் அக்கம்பெனிக்கு கொடுத்துதவினர். தமிழ் நாடெங்கும் சென்று பொருள் பெற்று அக்கம்பெனியை வளர்த்து வந்தார். பால் மணம் மாருத அக்கம்பெனியின் சிறுவர்கள் மூலம், தமிழ் நாடகக் கலையை பரிணமிக்கச் செய்தார். தமிழ் மொழியையும், இசையையும் திறம்பட வளர்த்தார். தத்துவ மீனலோசனி வித்வ பால சபா பெரும் புகழுடன் விளங்கியது. அந்த சபையின் நடிகமணிகளே தற்காலம் பிரசித்தி பெற்று விளங்கும் டி. கே. எஸ். சகோதரர்கள். அக்காலத்தில் சிறுவர்களான திருவாளர்கள் சண்முகம், பகவதி, முத்துச்சாமி, சங்கரன் ஆகிய நான்கு சகோதரர்களின் கலைவளம் பொருந்திய நடிப்பினையும், சுவாமி அவர்களின் ஆசிரியத் திறமையையும் கண்டு களிக்க ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வருவார்கள். அத்தகைய புகழ்பெற்றவர்கள்தான் இன்று இதோ உங்கள் முன் இருக்கும் திருவாளர்கள் டி. கே. சண்முகமும், அவரது சகோதரர்களும். இவர்கள்தான் அவருக்கு அந்திய காலத் தொண்டாற்றிய புண்ணிய சீலர்கள். திரு. சண்முகம் அவர்கள் சுமார் 8-வயது இருக்கும் போது தமிழ் மொழியின் அருமை பெருமைகளைப் பற்றி சாங்கோபாங்கமாக சுமார் மணிக்கணக்கில் பேசுவார். நாடக மேடையில் இலக்கிய இலக்கண ஆராய்ச்சியுடன், மொழி வன்மையையும் கலந்து பாடல்களுடன் பேசுவார். பிரகலாதனின் வேடத்தில் திரு. சண்முகம் அவர்கள் 'ஒருமடமாது' என்ற பட்டினத்தார் பாடல் முழுமையும் பாடி, மனிதப் பிறவியெடுத்ததற்குரிய அவசியத்தைப்பற்றி தக்க மேற்கோள்களுடன் பேசுவார். ஒரு சிறிய பாலகன் மூலம் பெரிய கொள்கையை

யும், கலைவளர்ச்சியையும் இந்நாட்டிற்கு உதவிய சுவாமிகளின் வித்வத் தன்மையை மக்கள் மிகவும் பாராட்டி ஆரவாரம் செய்வார்கள். சுவாமிகள் தமிழ்மொழி வளர்ச்சியைப் பற்றி என்ன அழகாகவும் அற்புதமாகவும் சித்தரிக்கிறுர் என்பதை கீழ்கண்ட பாடலில் பார்க்கலாம்.

பல்லவி

தமிழே சிறந்ததென உனது நாமம் விளங்க
சாற்றும் அந்தப்பொருளை யாரறிவார் அம்மா தமி

அனுபல்லவி

அமுதினிற்சிறந்தது ஆரியத்துயர்ந்தது
அகத்தியனுர் சிவனிடத்திலுணர்ந்தது
அடி சீர்மோனை எதுகைதொடைசேர் தளையின்வகை
யாகும் பாவினஞ் சந்தமா விரிந்தது வண்ணத் தமி

சரணம்

திணைபால் காட்டும் விகுதி சிறப்புப் பொதுப்பகுதி
சேர்ந்தவிதங்களெல்லாம் தென்மொழிக்கே தகுதி
இணையெனும் வடமொழி இருமொழியின் பேர்வழி
இசைக்கும் எழுதுவதெல்லாம் வலஞ்சுழி அதனல் தமி

அகரத்தோடகரஞ்சேர் வடமொழி தீர்க்கசந்தி
ஆகுமென்றுரைப்பார்கள் அறியார்கள் புத்தி நந்தி
மகரவொற்றழிவிதி மார்க்கமென்பதைப் புந்தி
வைத்தவர் மருவென்றுரே முந்தி அதால் தமி

கயற்கண்ணி மொழிபெயர்ப்பதற்கென வுரைசெய்வார்
கந்தபுராணமதின் காப்புச் செய்யுளறியார்
இயற்படப் புணரியல் என்னுடன் வாதாடுவார்
இசை மராடி என்பதற்கென்புகல்வார் அதால் தமி

வடமொழி வழக்கில்லை வழங்குவார் தமிழ்ச்சொல்லை
மலை வேங்கடங்குமரி மற்றிரு கடல் எல்லை
இடமாக வகுத்தவர் இன்றுளார்களுமில்லை
இயம்பும் மீனுட்சி என்ற பெயர் வல்லை அதால் (தமி)

இப்பாடலில் சுவாமி அவர்களின் தமிழன்பு பீறிட்டுக்கிளம்பு கிறது. சுவாமி அவர்களின் காலத்திலும் பிறமொழிப்பாடல் கள் தமிழ்நாட்டை ஆதிக்கம் கொண்டிருந்தது. அப்போது தமி ழிசைச்சங்கங்களோ, கழகங்களோ கிடையாது. அங்ஙன மிருந்தும், சுவாமிகளைப் போன்றோர்கள் செய்துள்ள தமிழிசை அமுதமே தமிழர்களின் தன்மானத்தைக் காத்துக்கொண்டிருக் கிறது.

இலக்கிய இலக்கணப் பகுதியையும், செய்யுள் இலக்கணக் குறிப்புகளையும் சுவாமிகள் மேற்படிப்பாடலில் பிழிந்துக்கொடுத் திருக்கிறார். செய்யுளிலக்கண வழியை ஒரு சில அடிகளில் ரத் னச் சுருக்கமாக எடுத்துக்காட்டுகிறார். தமிழ் மொழியில் உள்ள பதங்கள், எதுகை, மோனை, தொடை, சீர் தளை முதலியவை களும், சந்தம், வண்ணம், சிந்து முதலிய கவிதைகளும் சுவாமி களைத் தேடிவருமே ஒழிய, சுவாமிகள் எழுதுகையில் அவை களை அவர் தேடுவதுமில்லை, காத்திருப்பதுமில்லை. மண்டியிட்டு பாட்டெழுதத் தொடங்கினால், அவர் பேனாவில் அவைகள் தாமாக வந்துநிற்கும். குறைந்தபட்சம் எதுகை, மோனையும் வைத்தெழுதத் தெரியாததால், பாட்டிற்கு இலக்கணமே வேண்டு வதில்லை யென்று அடிப்படையைத் தகர்க்கப்பார்க்கும் ஒரு சில கவிதாசிகாமணிகள் புறப்பட்டிருக்கும் இந்நாளில் சுவாமிகள் இருப்பின், தமிழையும், தமிழிசையையும், தமிழ்ப் பாடல்களின் இலக்கணத்தையும் சின்னா பின்னம் செய்துவரும் சிறுமதியா ளரை முதலில் பின்னம் செய்திருப்பார்.

சுவாமிகள் ஆடம்பரமற்றவர். விபூதி தரித்த பரந்தநெற்றி, கழுத்தில் உருத்திராட்சம். கையில் திருமுருகாற்றுப்படை, மேலே ஒரு வேட்டி—ஆஜானுபாகுவானதேகம், முருகா—முருகா என்றுரைக்கும் வாய். இவைகள் தான் சுவாமி அவர் களின் திருக்கோலம். தற்போதும் என் கண்கள் முன் அவர் திருவுருவக் காட்சியினைக் காண்கிறேன். சிலகாலம் காவிவஸ்திர மணிந்த, முருகப்பெருமான் வதியும் தலங்கட்கும், கண்டி, கதிர்காமம் முதலிய இடங்கட்கும் சென்று கவிபாடிவருவார். அக்காலத்தில் தான் "சுவாமி" என்றழைக்கும் பெயர் பெற்ற னர். இறைவன் எக்காலத்தும் நன்மை செய்வான் என்ற

திடமனதுண்டு அப்பெரியாருக்கும். இவ்வரும்புலவர், ஆயிரக் கணக்கான பாடல்கள் எழுதியிருப்பினும் ஒரு அடியிலேனும் தமது பெயரைக் குறிப்பிட்டவரல்ல. உடுமலைக் கவிராயரவர்கள் எழுதிய ராமாயணத்தில் சுவாமிகளும் சில பாடல்கள் இயற்றி யுள்ளார். கவிராயர் அவர்கள் சுவாமியின் நட்பின் மிகுதியை விள்க்குவான் வேண்டி அந்த ராமாயணத்தில் வரும் ஒரு பாடலில்,

> **தம்பியாம் லட்சுமணன் எம்பிரான் பக்கம்**
> **சகாயமே—சம்பிரதாயமே—முத்துச்**
> **சாமிசேர் சங்கர தாசராதி மெச்சுந்**
> **தூயனே ஆஞ்சநேயனே.**

என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்பாடல் ஒன்றில்தான் சுவாமி யின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுவும் கவிராயர வர்களால். சுமார் 35 வருஷம் தொண்டாற்றிய பெரியாரின் சரிதத்தை குறுகியகால அளவில் அறிமுகப்படுத்துவது சிரமந்தான். மேலும் எனக்குத் தெரிந்த அளவு விவரித்தேன். தெரியாததும் பலதிருக்கும், அவைகளை அறிஞர்கள் எனக்குத் தெரிவிப்பின் என்னால் கூடிய விரைவில் வெளியிடப் பெறும் "தமிழ் நாடகக் கலைஞர்கள்" என்ற புத்தகத்தில் சேர்த்துக் கொள்கிறேன். சுவாமிக்குப் பல ஆயிரம் சீடர்களிருந்தனர், இருக்கின்றனர். எனினும் அவரின் அந்தியகாலம் புதுவையில் முடியும் போது, உடனிருந்து தொண்டாற்றித் தங்கள் கடமை யைச் செய்து கொண்டவர்கள் முத்தமிழ் கலாவித்வரத்ன டி. கே. எஸ். சகோதரர்கள் தான். சுவாமிகள் மறைந்த தினம், தமிழ் நாட்டுப் புலவர்களும், கவிஞர்களும் கதறினர்கள். உடுமலை சரபம் முத்துச்சாமி கவிராயரவர்கள் "நான் சாக நீ காணவேண்டுமென நினைத்திருந்தேன், தான் சாக மருந் துண்ட சங்கரதாஸ் சுவாமிகளே!" என்று மனமுருகிக் கதறினர்.

புதுவையிலிருக்கும் சுவாமி அவர்களின் சமாதியைத் திருக் கோவிலாகக் கட்டி அமைக்க வேண்டும் என்பது எனது நெடு நாளைய ஆசை. எனது ஆசையை, டி. கே. எஸ். சகோதரர் களும், கலைஞர்களை ஆதரிக்கும் நவாப்-நாடக கலாநிதி ராஜ

மாணிக்கம் அவர்களும், நகைச்சுவை மன்னன் என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராஜ பாகவதர் முதலிய பல நாடக மணிகளும் முயற்சி செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். கலைஞர்களைப் பாராட்டுவதும், அவர்கட்குச் சேவை செய்வதும், செய்பவர்கட்கும் நலனையும் புகழினையும் கொடுக்கும்; உயிருடன் இருக்கும் வரை கலைஞர்களைப் புறக்கணிப்பதும் இறந்தபின் கொண்டாடுவதும், தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள ஒரு வியாதி. அதனைத் தமிழ்நாட்டின் புத்தொளிமலரும் இக்காலத்திலிருந்து-விடுத்து சென்ற கால நாடக வல்லுனர்களையும், நிகழ்கால நாடகப் பெரியார்களையும், நாடகக் கலைஞர்களையும் மதித்து ஆவனசெய்து தமிழ்மொழியையும், தமிழ் இசையையும் தமிழ் நாடகத்தினையும் வளம்பெற வாழ்விக்கச் செய்யுமாறு கேட்டுக்கொண்டு எனது கலைத் தெய்வமான தமிழ் நாடகத்தலைமையாசிரியர் தூ. தா. சங்கரதாச சுவாமிகளின் திருவுருவப் படத்தை திறந்துவைக்கிறேன்.

வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழிசை!
வாழ்க தமிழ் நாடகம்!!! ஓங்குக தமிழ்க்கலை!!!!
எல்லோருக்கும் வணக்கம்.

"கலையென்றால் உணர்ச்சிகளைக் கவரவேண்டும்
களிப்பூட்டி அறிவினைப் போய்க் கவ்வ வேண்டும்"

—கா. வெ. இராமலிங்கம் பிள்ளை.

நாவல் நாடக ஆசிரியர்

உயர்திரு

# எம். கந்தசாமி முதலியார் அவர்களின்

திருவுருவப்படத்

# திறப்புவிழா

"முத்தமிழ்க்கலா வித்வரத்தின" T. K. ஷண்முகம்

ஆற்றிய சொற்பொழிவு.



நன்மதிப்பிற்குரிய தலைவரவர்களே!

நாடகக்கலை வளர்ச்சியில் நாட்டங்கொண்டு வந்து குழுமியுள்ள நல்லறிஞர்களே!! நாடகக் கலைக்கு நற்றொண்டு செய்து வரும், செய்ய விரும்பும் நடிகத் தோழர்களே!!!

திரு. எம். என். எம். பாவலர் அவர்கள், தமிழ் நாடகத் தலைமையாசிரியரும், எங்களை நாடகத்துறையில் ஈடுபடச் செய்து நல்லறிவு புகட்டிய பேராசிரியருமான உயர் திரு. தா. தா. சங்

கரதாஸ் சுவாமிகளின் வாழ்க்கைக் குறிப்புக்களையும், அரும் பெரும் புலமைத்திறனையும், அறிவாற்றலையும் பற்றி உங்களுக்கு எடுத்துரைத்தார்கள்,

யான் இப்பொழுது திறந்துவைக்கப் போகும் திருவுருவப் படம் எமது இரண்டாவது ஆசிரியர் திரு. எம். கந்தசாமி முதலியார் அவர்களுடையதாகும். (திறந்து வைத்து) சுவாமிகள் எங்கள் முதல் நாடகாசிரியர். இப்படத்திலிருக்கும் பெரியார் எங்கள் இரண்டாவது நாடகாசிரியராவார்.

இவர்களைப்பற்றி விரிவுரை நிகழ்த்த, யான் நீண்ட சொற் பொழிவாற்றும் ஆற்றலுடையவனல்ல. பாடத்தைப் பக்கம் பக்கமாக எழுதிப்படித்து நெட்டுருச் செய்து நாடகமேடையில் பேசும் பயிற்சியுடையவனேயன்றி, அறிஞர்கள் நிறைந்த அவையில் நின்ற நிலையில் பேசிப் பழக்கமுடையவனல்ல. எனினும். எமது ஆசிரியரவர்களின் பாலுள்ள அன்பின் மிகுதியினால் இப் பணியை எனக்களிக்கும்படி நானே கேட்டுக் கொண்டேன். இப்படத்திறப்பு விழாவை நடத்தத்திறனுடைய பல அறிஞர்கள் தமிழகத்தில் இருந்தும் ஆர்வத்துடன் வேண்டிக்கொண்ட என் விருப்பத்தை அன்புடன் ஏற்றுக்கொண்ட வரவேற்புக் கழகத் தாருக்கு எனது நன்றி உரித்தாகுக.

ஆசிரியர் எம். கந்தசாமி முதலியாரவர்களைப்பற்றி உங் களில் பலர் அறிந்திருக்க மாட்டீர்களென்றே கருதுகிறேன்.

டி. கே. எஸ். சகோதரர்களோ, அவர்களது கம்பெனி நடிகர்களோ நல்ல தமிழ் பேசுகிறார்கள் என்றால் அப்பெருமை அந்தப்படத்தில் வீற்றிருக்கும் சுவாமிகளைச் சேர்ந்தது. அதே போன்று டி. கே. எஸ். சகோதரர்களோ, அவர்களது நடிகர்களோ நன்றாக நடிக்கிறார்களென்றால் அப்பெரும் புகழ்முழுதும் இப்படத்தில் வீற்றிருக்கும் முதலியாரவர்களைச் சேர்ந்தது.

முதலியாரவர்கள் ஆசிரியர் சுவாமிகளைப் போல் செந்தமிழில் தீஞ்சுவைப்பாடல்கள் எழுதும் ஆற்றலுடையவரல்ல; சங்க இலக்கியங்களின் சாரத்தை யெல்லாம் பிழிந்தெடுத்துத் தந்தவரல்ல; எனினும் இப்பெரியார் தமிழ் நாடக உலகிற்குச்

செய்த தொண்டு அளப்பரியது. அது நாடக வுலகிற்கு மட்டு மின்றி நாட்டுக்கும் நன்மையைத்தந்தது.

நாடகத்தைத் தொழிலாகக் கொள்ளாத "அமைச்சூர்" நாடகவுலகில் புதுமை தோற்றுவித்த பெருமை எவ்வாறு நமது "நாடகப் பேராசிரியர்" ராவ்பகதூர் சம்பந்த முதலியாரவர் களுக்கு உரிமையுடையதோ, அதே போன்று தொழிலாளர் நாடகவுலகில் மறுமலர்ச்சியுண்டாக்கிய பெருமை இப்பெரியா ரைச் சேர்ந்ததாகும்.

இப்பெரியாரின் பெயர் உங்கள் செவிகளில் விழாதிருக்க லாம். ஆனால், இவர்கள் தமிழகத்திற்குச் செய்த நற்றொண் டின் பயனை உங்களில் ஒவ்வொருவரும் அடைந்திருப்பீர்க ளென்று உறுதியாய்க் கூற முடியும்.

நாவலாசிரியர் திரு. ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள் தமது புத்தகங்களில் மறைத்து வைத்திருந்த புதையல்களை யெல்லாம் தோண்டித் துருவியெடுத்து தமிழ் நாடகவுலகிற்கு அளித்தவர் இப்பெரியார் தான்.

சாவித்திரி, வள்ளி திருமணம், பவளக்கொடி, அல்லி அர்ஜ ஜுனா, நல்லதங்காள், சதாரம்........இன்னோன்ன பலபெயர் களையே கேட்டும் பார்த்தும் சலிப்புற்றிருந்த மக்கள், இராஜாம் பாள், இராஜேந்திரா, சந்திரகாந்தா, மோகன சுந்தரம், ஆனந்த கிருஷ்ணன் என்னும் பல புதிய பெயர்களைக் கேட்கவும், பார்க் கவும் செய்தவர் இப்பெரியாரே யாவார்.

ராஜாம்பாளின் மூலம் காதலின் வலிமையையும், ராஜேந்திர னின் மூலம் வரதட்சணையின் அலங்கோலத்தையும், சந்திரகாந்தா வின் மூலம் பண்டாரச் சன்னதிகளின் திருவிளையாடல்களையும், மோகன சுந்தரத்தின் மூலம் பொருந்தா மணத்தின் போக்கை யும் மக்களுக்கு நாடக வாயிலாக எடுத்துக்காட்டிய இப்பெரி யாருக்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது.

நாடகத்தின் வாயிலாக இவரை அறிய முடியாத நண்பர் களுக்குக் கூறுகிறேன். "சுவாமிகாள்! சுவாமிகாள்!!" என்று

தமிழ்நாடு முழுதும் சிலகாலம் அமளிப்பட்டதே! ஞாபகமிருக்கிறதா? அந்தப் பகல் வேஷப்பண்டார சன்னதிகளை, ரகவாரியாக ரம்பைகளைத் தேடிப்பிடித்த அந்த மடத்தடிகளை முதன் முதலாக நாடமேடையில் கொண்டுவந்து நிறுத்தியவர் இவர் தான்.

வடுவூர் துரைசாமி ஐயங்காரவர்களின் அபூர்வ சிருஷ்டியான "மேனகா"வை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்களென நம்புகிறேன். எங்களாலேயே நாடகமாகவும், பேசும் படமாகவும் உங்களில் பலர் பார்த்திருப்பீர்கள். இதோ வீற்றிருக்கும் நகைச்சுவையரசரை (N. S. K. அவர்களைக் காண்பித்து) திரையுருவில் தமிழர் முன் முதன் முதலாகக் காண்பித்தவள் மேனகா வல்லவா! அவளை நீங்கள் எங்ஙனம் மறக்கமுடியும்? அந்த மேனகாவை நாவல் வடிவிலிருந்து நாடக வடிவாக்கி எங்கள் சபைக்குப் பயிற்றுவித்த பெரியாரும் இவர் தான்.

இப்பெரியாரின் இளம்பருவச் செயல்களைப்பற்றியும், வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும் விரிவாகச் சொல்ல யானறியேன். நமது ராவ்பகதூர் முதலியாரவர்கள் ஒருவேளை அதுபற்றி அதிகமாகத் தெரிந்திருக்க முடியும். ஆசிரியர் முதலியாரவர்கள் ராவ்பகதூர் முதலியாரவர்களின் உயிர்த்தோழராவார்.

முதலியாரவர்களைப்பற்றி நானறிந்ததை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சென்னையில் "மைலாப்பூர்" என்று ஒரு பகுதி பிரசித்தி பெற்று விளங்குவது எல்லோருக்கும் தெரிந்திருக்குமே! "தமிழில் சங்கீதம் இல்லையென்று கூறும் மகாமேதாவிகள் பலர் அங்குதானே வாசம் செய்கிறார்கள்" ஆகவே, அந்தப்பெயரை நாம் மறக்க முடியாதே! இப்பொழுது மைலாப்பூர் என்று வழங்கப்படும் அந்த இடம் சிலகாலத்திற்கு முன் "திருமயிலை" என்று வழங்கப்பட்டு வந்தது. அந்தத் திருமயிலையில் வசித்துவந்த திரு. தணிகாசல முதலியார் என்ற பெருந்தகையாருக்கும், திருமதி பாப்பாத்தி அம்மாள் என்ற குலக்கொடிக்கும் புதல்வராக ஆசிரியர் முதலியாரவர்கள் 1874வது ஆண்டில் பிறந்தார்.

இவர்கள் பிறப்பிலேயே ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம் நடந்தது.

இவர்களுடைய தாயார் பூரண கர்ப்பவதியராயிருக்கும் பொழுது ஒருநாள் சென்னையிலுள்ள "கந்தகோட்டம்" என்னும் கந்தசாமி கோவிலுக்குத் தரிசனம் செய்யச் சென்றிருந்தார்களாம். உட்பிராகாரத்தைச் சுற்றிவரும் பொழுது பிரசவ வேதனை யேற்பட்டு வீடுசெல்ல வியலாத நிலையேற்பட்டதாம். வேறு வழியின்றி, கோவில் நிர்வாகிகள் பிராகாரத்திலேயே பிரசவத்திற்கு வேண்டிய வசதிகள் செய்ய, அவ்விடத்திலேயே ஆசிரியர் பிறந்தாராம்.

கந்தசாமி கோவிலில் பிறந்தமையால் இவர்களுக்குக் கந்தசாமி என்றே பெயரிடப்பட்டது.

> "தந்தை மகற் காற்று நன்றி அவையத்து
> முந்தியிருப்பச் செயல்"

என்ற பொய்யா மொழியை நன்குணர்ந்த இவர்கள் தந்தையார் இவர்களுடைய கல்வி வளர்ச்சியில் மிகவும் சிரத்தை யெடுத்துக் கொண்டார். அதன்பயனுக, 1894ம் ஆண்டில் தமது இருபதாவது வயதில் B. A. பட்டம் பெற்றுர்.

சென்னை அக்கவுண்டெண்ட் ஜெனரல் ஆபீஸில் உத்யோகத்திலமர்ந்தார்.

முதலியாரவர்களை நாடகத்துறைக்கு இழுத்தது நமது நாடகப் பேராசிரியர் அவர்கள் தான். இவர்களால் தோற்றுவிக்கப்பட்ட சென்னை சுகுண விலாச சபையில் முதலியாரவர்கள் அங்கம் வகித்து பெண்வேடதாரியாயிருந்து பெருந் தொண்டாற்றினர். மகாகவி ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களில் முதலியாரவர்கள் மிக அருமையாக நடிப்பா ரென்று அறிஞர் பலர் கூறக்கேட்டிருக்கிறேன்.

இவர்கள் சுகுணவிலாச சபையில் தொண்டாற்றியதன் பயனுக, நமது நாடகப் பேராசிரியரவர்களின் மனோஹரா, இரத்தினவளி, வேதாள உலகம், ஆகிய பல நாடகங்கள் தமிழ் நாடக மேடையில் தோற்றமளித்தன.

நமது பேராசிரியரவர்களின் சுகுணவிலாச சபை இரு ஆசிரியர்களைத் தமிழ் நாட்டிற் களித்தது. ஒருவர் பதிபக்தி, பம்பாய் மெயில், பஞ்சாப் கேசரி, கவர்னர்ஸ் கப்........ என்ற திடுக்கிடும் பெயர்களால் நாடகங்கள் தயாரித்தவரும், இங்கிலாந்துக்குச் சென்று தமிழ் நாடகங்களை நடத்தியவருமாகிய தேசபந்து ஆசிரியர் டி. கே. பாவலர் அவர்கள். மற்றொருவர் முதலியாரவர்கள். இவ்விரு பெரியார்களையும் ஆசிரியர்களாகப் பெறும் பேற்றினை நாங்கள் பெற்றோம்.

ஆசிரியர் பாவலர் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட இரண்டொரு கம்பெனிகளைத் தவிர, தமிழ்நாட்டில் நடைபெற்ற பெரும்பாலான கம்பெனிகளில் நமது நாடகப்பேராசிரியரவர்களின் நாடகங்களைப் பயிற்றுவித்தவர் இவரே யென்றால் அது மிகையாகாது.

சுகுணவிலாச சபையிலிருந்து தொழிலாளர் நாடக உலகிற்கு இவரை இழுத்தது ஸ்திரீபார்ட் சுந்தரராவ் அவர்களுடைய கம்பெனிதான். அங்கு சிலகாலம் இருந்த பின் பிரசித்தி பெற்ற திருமதி பாலாமணி அம்மையார் கம்பெனியில் இவர் ஆசிரிய ஸ்தானம் வகித்தார். அந்த சமயம் 1906-வது ஆண்டில், ஐந்தாவது ஜார்ஜ் சக்கிரவர்த்தி வேல்ஸ் இளவரசராயிருந்த காலையில், சென்னைக்கு விஜயம் செய்திருந்தார். அவர்களது முன்னிலையில் நமது முதலியாரவர்கள் நாடகத்தைச் சிறப்புற நடத்திக் காண்பித்து, அவர்களால் நற்சாட்சிப் பத்திரமும், தங்கப் பதக்கமும் பரிசாகப் பெற்றார்.

அதன்பின் ஆஞ்சநேயர் கோவிந்தசாமி நாயக்கர் அவர்கள் கம்பெனியில் ஆசிரியராக விருந்து மைசூர் சென்று மகாராஜா அவர்கள் முன்னிலையில் நாடகங்களைத் திறம்பட நடத்திப் பரிசில் பெற்றார்.

பிறகு திரு. P. S. வேலுநாயரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சென்னைக்கு வந்து "மனோஹரா" முதலிய நாடகங்களை அவர்களுக்குப் பயிற்றுவித்தார்.

சிலகாலம் ஸ்பெஷல் நடிகர்களாகப் பெயர் பெற்று விளங்கிய திரு. பைரவசுந்தரம் பிள்ளை அவர்களையும், மற்றும் பல

பெரிய நடிகர்களையும் சென்னைக்குக் கூட்டிவந்து புதிய நாடகங் களைக் கற்பித்துச் சிறப்புற நடத்தினார்.

பாய்ஸ் கம்பெனிக்கு இவரைக் கொண்டுவந்தவர் திரு. ஜெகனாதையர் அவர்களாகும். அவர்களது "மதுரை பாலமீன ரஞ்சனி சங்கீத சபையில்" முதலியாரவர்கள் சிலகாலம் ஆசிரி யராயிருந்துள்ளார்.

1920-ம் ஆண்டில் சென்னை "ஹாட் அண்டு கம்பெனி" யாருடன் கூட்டுறவு கொண்டு "ஸ்ரீ குமார லட்சுமி விலாச சபா" என்ற பெயருடன் ஒரு பாலர் கம்பெனியைத் தோற்று வித்துச் சிலகாலம் நடத்திவந்தார்.

அதன் பின் மதுரை திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர் களின் "ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில்" ஆசிரியரானார்.

பிறகு 1925-ம் ஆண்டில் எங்கள் ஸ்ரீ பாலஷண்முகானந்த சபைக்கு வந்து சேர்ந்தார்.

எங்கள் கம்பெனியில் ஆசிரியராயிருந்த போது எட்டைய புரம் சமஸ்தானதிபதிகள் இவரது திறமையை வியந்து பெரும் பரிசுகள் ஈந்தனர்.

அதன்பின் பிரபல நடிகையாகிய திருமதி B. இராஜாம்பாள் அம்மையார் நடத்திவந்த கம்பெனியில் சிலகாலம் ஆசிரியரா யிருந்தார்.

"ராமானுகூல சபா" என்னும் பெயர் கொண்ட ஓர் சபைக்கு ஆசிரியராகி சிங்கப்பூர், பினங்கு முதலிய இடங்களுக் குச் சென்று புகழ்பெற்றார்.

ரங்கூன் ஹரிகிருஷ்ண பிள்ளையவர்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட "மெட்ராஸ் டிரமாடிக் ட்ரூப்" என்னும் நாடக சபையை பர்மாவில் நடத்திச் சிறப்புற்றார்.

அதன் பின் மதுரை நாகலிங்கம் செட்டியாரவர்கள் கம் பெனியில் சிலகாலம் ஆசிரியராயிருந்தார்.

அதன் பின் பழனியப்பச் செட்டியாரவர்கள் கம்பெனியின் மூலம் கொழும்புக்குச் சென்றூர். கடைசியாக லெட்சுமி சார தாக் கம்பெனியிலும், மதராஸ் பாய்ஸ் கம்பெனியிலும் ஆசிரிய ராக இருந்தார். பொதுவாகத் தமிழ் நாட்டில் நடைபெற்ற எல்லாக் கம்பெனிகளிலும் நமது ஆசிரியர் பங்கெடுத்துக் கொண் டார் என்று கூறுவது பொருந்தும். விரிவுரை வேண்டியதில்லை.

பல நாடக சபைகளில் இவர்கள் ஆசிரிய ஸ்தானம் வகித் தாலும், நீண்டகாலம் இருந்து தொண்டாற்றியதும், ஏராள மான நாடகங்களைப் பயிற்றுவித்ததும் இரு சபைகளுக்குத்தான். ஒன்று மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி, மற்ருென்று எங் கள் நாடகசபை.

இன்று தமிழ்ப் பேசும் படவுலகில் முன்னணியில் நிற்கும் நடிகர்களிற் பெரும்பாலோர் இவ்விரு கம்பெனிகளிலு மிருந்தே தோன்றியுள்ளார்க ளென்பது ஆசிரியர் முதலியாரவர்களுக்குப் பெருமை யளிப்பதாகும்.

தோழர்கள் நகைமுகக் கிருஷ்ணன், காளி N, ரத்தினம், K. P. கேசவன், K. K. பெருமாள், K. P. காமாட்சி, P. U. சின்னப்பா, M. V. மணி, S. V. சகஸ்ரநாமம், M. G. ராமச்சந்திரன், மற்றும் பல எண்ணிறந்த நடிகர்கள் இன்று பொதுமக்களிடையே பெற்றுள்ள நன்மதிப்புக் கெல்லாம் அவரவர்கள் சொந்தத் திறமையோ, முயற்சியோ காரண மென்ருலும், அத்தனை சுடர் விளக்குகளுக்கும் தூண்டுகோலா யிருந்தவர் இப்பெரியாரே யென்பதில் சிறிதும் ஐயமில்லை.

நடிப்பின் முக்யத்வத்தை இப்பெரியாரால் தான் நாங்கள் நன்குணர்ந்தோம். நடித்துக் காட்டிப் பயிற்றுவிப்பதில் சினிமா வுலகில் திரு. P. K. ராஜா சாண்டோ அவர்களையும், நாடகவுல கில் இப்பெரியாரையுமே நாங்கள் உயர்ந்தவர்களாகக் கருது கின்றோம்.

முதலியாரவர்கள் பயிற்சியளிக்கும் போது நடிகன் சலிப் புறுவானேயன்றி ஆசிரியர் முதலியாரவர்கள் சிறிதும் சலிப் படைய மாட்டார்.

ஒரு நடிகன் கீழே விழுவது இயற்கையாயிருக்க வேண்டுமென்பதற்காக ஆசிரியரவர்கள் ஐம்பது முறையானாலும் வெட்டுண்ட மரம்போல் விழுந்தே காண்பிப்பார்.

நாங்கள் மேடையிலிருந்து நடித்துக் கொண்டிருப்போம். எங்கள் ஆசிரியர் பக்கப்படுதாவில் நின்று கொண்டு எங்களைப் பார்த்தபடி நடித்துக் கொண்டிருப்பார்.

அழவேண்டிய கட்டங்களில் நாங்கள் அழுவதுபோல் பாவனை செய்வோம்; எங்கள் ஆசிரியர் உள்ளே நின்றபடி தேம்பித் தேம்பி அழுவார். அத்தனை நடிப்புணர்ச்சி! அத்தனை ஆர்வம் அவருக்கு.

ஆசிரியரவர்களின் ஆர்வ மிகுதியினால் சில சமயங்களில் முன் வரிசையிலிருப்பவர்களுக்கு எங்கள் குரலோடு ஆசிரியர் குரலும் கலந்து கேட்கும். சிற்சில சமயங்களில் கையிலிருக்கும் நாடகப் புத்தகத்தில் பாதிகூட வெளியே தெரிவதுண்டு. அவ்வளவுதூரம் தன்னை மறந்து நடிப்பில் ஈடுபட்டு விடுவார்.

நாடகத்தை ஒத்திக்கை பார்ப்பதென்றால் இப்போதைய நடிகர்களுக்கு வேப்பங்காய் மாதிரி. நேராக மேடையிலேயே நடிப்பதில்தான் பலருக்கு ஆர்வம். ஆனால், அது சாத்யப்படுவதில்லை. ஒத்திக்கையில் அலட்சிய மனப்பான்மை கொள்ளும் நடிக மணிகள்தான் மேடையில் வந்து குளறி வழிவது இன்றும் வழக்கமாயிருந்து வருகிறது. இந்த வகையில் ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர். எவ்வாறு தமது மனதில் கற்பனை செய்திருப்பாரோ, அந்த அளவுக்கு நடிகர்கள் ஒத்திக்கையிலேயே நடித்துக்காட்டும் வரை எத்தனை நாட்களானாலும் நாடகத்தை நடத்த அனுமதிக்க மாட்டார்.

கற்பனையாக ஒரு நாடகத்தை எழுதுவதைவிட நானூறு, ஐநூறு பக்கங்கள் கொண்ட பெரிய நாவல்களை நாடகங்களாக்குவது எவ்வளவு கஷ்டமான வேலையென்பது அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். அத்துறையில் பூரண வெற்றி பெற்றவர் நமது ஆசிரியரவர்கள்.

நாடக நடிகர்கள் சினிமாவில் நடிக்கத் தகுதியற்றவர்களென்பது ஒரு சில பிரகஸ்பதிகளின் கூக்குரல். அதுபற்றி "நாடகமும் சினிமாவும்" என்ற தலைப்பில் பேசும் எங்கள் "நகை முக வரசு" நன்றாகக் கூறக்கூடும். ஆகவே அதுபற்றி நான் கூற விரும்பவில்லை.

நாடக ஆசிரியர்கள் சினிமாவுக்கு சம்பாஷணைகள் எழுத முடியாதென்பதும் அதே போன்ற கூக்குரல்தான். எங்கள் ஆசிரியர் முதலியாரவர்கள் 1934-ம் ஆண்டில் சினிமாத் துறையில் பிரவேசித்து கோவை மனோரமா பிலிம்ஸாரால் தயாரிக்கப்பட்ட "சதிலீலாவதி"க்கு சம்பாஷணைகள் எழுதிக் கொடுத்து டைரக்டர் எல்லிஸ் R. டங்கனுக்கு உதவியாயிருந்து அதிலும் தமது நுண்ணறிவை வெளிக்காட்டியுள்ளார்.

அதைப் பின்பற்றி, சந்திரமோகனா, பக்த துளசிதாஸ், மாயாமச்சேந்திரா முதலிய படங்களுக்கு சம்பாஷணைகள் எழுதியிருக்கிறார்.

நாடகங்களுக்கு விளம்பரங்கள் தயாரிப்பதில் நமது முதலியாரவர்களின் மூளை மிக மிக அபூர்வமாக வேலை செய்யும்.

ஆங்கிலத்தில் "மனோஹரன்" நாடகத்திற்கு நோட்டீஸ் வரைவார், நடுவில் கவிதையொன்று காணப்படும். அதில் ஒரு புறத்திலுள்ள கடைசி எழுத்துக்களைக் குறுக்கே படித்தால் "ஷண்முகம்" என்றிருக்கும் மற்றொரு புறத்திலுள்ள எழுத்துக்களை அதேபோல் படித்தால் "மனோஹரன்" என்றிருக்கும்.

நாடக முடிவில் சிகரெட் பெட்டியொன்று பொதுஜனங்களுக்கு வழங்கப்படும். இலவசமாகச் சிகரெட் கிடைப்பதையெண்ணிச், சிலர் ஆவலோடு திறந்து பார்ப்பார்கள். உள்ளே சிகரெட்டுப்போல் சுருள் காகிதங்கள் காணப்படும். பிரித்துப் பார்த்தால் ஒவ்வொன்றும் மறுநாளைய நாடகத்தின் காட்சிகளைப்பற்றிய வர்ணனையாயிருக்கும்.

மற்றொரு நாள் அதேபோல் சீட்டுக்கட்டு வழங்கப்படும், திறந்து பார்ப்பார்கள். உள்ளே முப்பத்திரெண்டு கார்டுகளி

ருக்கும். அவற்றில் நாடகத்தின் காட்சிகளைப் பற்றியும், நடிகர் களைப்பற்றியும் வர்ணித்திருக்கும்.

திடீரென்று ஒருநாள் ஊரிலுள்ள ஜனங்கள் வீட்டிற் கெல்லாம் "தந்திப்யூன்" வந்து தந்தி கொடுத்து கையெழுத்து வாங்கிப் போவார். எல்லோருக்கும் ஒரே தந்திதான். ஒரே வாக்கியம் தான். அன்று நடைபெறும் எங்கள் நாடகத்திற்கு வரும்படி அவசரத் தந்தி.........

இப்படியே வித விதமாக புதிது புதிதாக ஆசிரியரவர்கள் அபாரக் கற்பனை செய்வார்.

ஆசிரியரவர்கள் தமிழ் நாட்டுக்குத் தமது செல்வமாக ஒரு நன்மகவை யளித்துள்ளார். முதலியாரவர்களை நீங்கள் அறிந்தி ராவிட்டாலும் அவரது புதல்வரை நன்கறிவீர்கள்.

"இவன் றந்தை என் னோற்றான் கொல்!" என்னுஞ் சொல் லுக்கு இலக்கியமாக விளங்கும் அவர்தான் இனிய தன்மையும், எளிய குணமும் படைத்த தோழர் M. K. ராதா

சதிலீலாவதி, சந்திரமோகனா, துளசிதாஸ், மாயா மச் சேந்திரா, வனமோகினி முதலிய பல படங்களில் நடித்தவரும், தற்போது "தாசி அபரஞ்சி"யில் நடிப்பவருமாகிய நடிகமணி M. K. ராதா தான் ஆசிரியரவர்களின் ஒரே புதல்வர்.

முதலியாரவர்கள் என்பால் அளவற்ற அன்புகொண்டவர். "நான் சொல்லிக் கொடுப்பதை என்னிஷ்டப்படி நடித்துக் காண்பிப்பவன் ஷண்முகம் ஒருவன் தான்" என்று தமது புதல் வரிடம் அடிக்கடி கூறுவார். மரணத் தருவாயில் கூட "ஷண்மு கத்தைப் பார்க்க விரும்புகிறேன்" என்று கூறிக்கொண்டிருந்த தாக தோழர் M. K. ராதா சொன்னார்.

1939-ல் நாங்கள் திருவண்ணாமலையில் நடித்துக் கொண் டிருந்த சமயம் ஆசிரியரவர்கள் சென்னையில் தமது இல்லத்தில் காலஞ்சென்றதாகத் தந்தி கிடைத்தது. நான் உடனே புறப் பட்டுச் சென்றேனாயினும் உயிரற்ற உடலையும் காண இயலாது போயிற்று.

1939 மார்ச்சுமீ 8-உ புதன்கிழமை தமது 67-வது வயதில் ஆசிரியரவர்களின் ஆவி பிரிந்தது.

இது அகால மரணமெனக் கூறமுடியாது. இந்தியர்களின் சராசரி வயதைக் கணக்கிட்டால் ஆசிரியரவர்கள் இவ்வுலகில் அதிககாலம் வாழ்ந்துள்ளாரென்றே கூறவேண்டும். ஆனால், எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் உயிர்பிரிந்தால் நாம் துக்கப்படாமலிருக்க முடிவதில்லை. "இன்னும் சிலகாலம் வாழந்திருந்தால் நன்றாயிருக்கும்" என்று சொல்லாமலிருப்பது மில்லை. அது இயற்கை.

எத்தனையோ மனிதர்கள் பிறக்கிறார்கள்; வாழ்ந்து மடிகிறார்கள். இது சகஜம். அவர்களில் மடிந்தபின் மனத்தால் நினைக்கப்படுபவர் சிலருண்டு. மனத்தால் நினைப்பதோடன்றி உள்ளத்தில் உறைவிடம் பெறுவோர் வெகு சிலர். உள்ளத்தில் மட்டுமில்லாமல் ஓவியத்திலும், இலக்கியத்திலும் இடம் பெறுபவர் மிகச் சிறிய தொகையினர். அவர்களில் ஒருவர் நமது ஆசிரியர், முதலியார் அவர்கள்.

தமிழ் நாடக மறுமலர்ச்சியைப் பற்றிய சரித்திரம் வரையப்படும் பொழுது முதலியாரவர்களின் திருப்பெயர் முன்வந்து நிற்கு மென்பதில் ஐயமில்லை.

இத்தகைய பெரியார் காட்டிய வழியைப் பின்பற்றுவதே நாடகவுலகம் அவருக்குச் செய்யும் மரியாதையாகும். தமது வாழ்க்கை முழுதும் நாட்டுக்கு நலந்தரும் சமூக நாடகங்களையே தயாரித்த இப்பெரியாருக்கு, அதைப்பற்றியே கனவு கண்டு கொண்டிருந்த இப்பெருந்தகையாருக்குச் சிறப்பளிக்கும் முறையில் நல்ல சமூக நாடகங்கள் பலவற்றைத் தோற்றுவித்து, நாடகக்கலையை வளர்ப்பதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும். ஆசிரியர் கந்தசாமி முதலியாரவர்களின் பெயர் தமிழகம் உள்ளளவும் குன்றாது நின்று நிலவுக! போஜன சமயத்தில் பொறுமையோடிருந்து எனது சிற்றுரையைக் கேட்ட உங்களுக்கு நன்றியோடு கூடிய வணக்கத்தைச் செலுத்திக் கொண்டு முடித்துக் கொள்ளுகின்றேன்.

★

சித்திரக் கலை வாழ்க!



A. Thangavelu,
Artist

**VELU PHOTO WORKS,**

ERODE.

A. Speciality
Highly Finished
Life Like oil Paintings
Enlargers
Colours guaranteed for
Hunred Years.

உயர்தரமான வர்ணப்
படங்கள் எழுதுபவர்கள்
எமது ஸ்டுடியோவில் எழுதப்
படும் படங்கள் 100 வருஷ
மாயினும் கலர் மாரும
லிருக்கின்றன.

ஒரு முறை எமது ஸ்டுடியோ
விற்கு விஜயம் செய்யுங்கள்.

---

சுதேசியமே நமது ஜீவ தர்மம்! | பாரதி நாமம் வாழ்க!! | அதைப் போற்றுவதே மக்களின் கடமை!!!

# பாரதி விலாஸ்

## ★ சாய அச்சுத் தொழிற்சாலை ★

## 71 வளையல்காரத் தெரு,

## ஈரோடு.

எங்கள் சாய அச்சுத் தொழிற்சாலையில் கைதேர்ந்த வேலையாட்களைக்கொண்டு தற்கால நவீன முறையில் பலவகையான கலர்களில் அச்சு வேலைகளும், சால்வைகளும், சீட்டி தினுசுகளும், டேபிள் துணிகளும், கியாரண்டியான கலர்களில் அச்சடித்து குறித்த காலத்தில் கொடுக்கப்படும். வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

புரொப்ரைட்டர்கள்:

பாரதி விலாஸ்
சாய அச்சுத் தொழிற்சாலை
ஈரோடு

**R. C. கிருஷ்ணன்**
**C. அம்பாயிரம்**

:: கரூர் விலை ::

# ஜவஹர் விலாஸ்

அருணாசல ஆசாரி தெரு,

★ சேலம் ★

எங்கள் ஸ்டோரில் கைத்தறியினால் நெசவு செய்யப்பட்ட 10½, 20, 30, 40, 100, நெ. நூல்களினால் சொந்தத் தறியில் தயார் செய்யப்பட்ட வேஷ்டி, துண்டுமடிகள், கியாரண்டி கலர் ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டிகளும், பிரிண்ட் சீட்டி ரகங்களும் கலர் உத்தரவாதத்துடன் எல்லா விதமான சுதேசி ஜவுளிகளும், கிடைக்கும்.

* ஒரு முறை எங்கள் ஸ்டோருக்கு விஜயம் செய்யுங்கள்

**S. P. R. நாதன் பீஸ்களை உபயோகியுங்கள்**

வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் கொடுக்கப்படும்

★

S. P. K. S.
பிரதர்ஸ்
தலைமை ஆபீஸ்:
ஈரோடு.

# நாடகமும் அதன் பயனும்

நாடக கேசரி, நாடக கலாநிதி, நாடகக் கலையரசு

(நவாப் டி. எஸ். இராஜமாணிக்கம் பிள்ளை)



ஓம் ஆதிசக்தி, கலாதேவி, நமக்கும், நம் நாட்டிற்கும்
நல்லருள் பாலிப்பாளாக.

அறிவிற் சிறந்த தலைவரவர்களே!
அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

நவரஸங்களும், பாவங்களும், பொருந்தத் திறம்பட நடித்துக்காட்டப்படுவதே நாடகமாம்.

அரிய பெரிய நூல்களைப் படிப்பதற்கு அவகாசம் இல்லாதவர்களுக்கும், படிக்கத் தெரியாதவர்களுக்கும் நல்லறிவு புகட்டவே நாடகம் ஏற்பட்டது.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுள், இயலும், இசையும், படித்தாலும், கேட்டாலும் மாத்திரமே இன்பம் தரும். நாடகமோ, அந்த இரண்டு இன்பங்களோடு காண்பதற்கும் இன்பம் தரும்.

அன்பர்களே! உலகில்; மனிதனுய்ப் பிறந்தவன், நான்கு பயன்களையடைய வேண்டும். அவை 1. அறம், 2. பொருள், 3. இன்பம், 4. வீடு, என்பன. இவற்றுள் நான்காவதாகிய வீட்டையடைவதற்கு, மற்ற மூன்றையும் உபயோகிக்க வேண்டும். அவைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. அந்த மூன்றையும், நாடகம் எவ்வாறு தருகிறது என்பதைப் பார்ப்போம்.

"பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை" என்று சிறப்பித்துக் கூறப்பட்ட பொருளையடைவதற்கு இந்நாடகம் பெரிதும் உதவுகிறது.

நாடகத்தினுல், நடிகனுக்கு இன்பம் பெருகுகிறது என்பது கண்கூடு. அதிகம் சொல்வானேன்? இன்பவுணர்ச்சி இல்லையானுல், நாமும் இரவில் கண்விழித்து, முகத்தில் சாயம் பூசிக் கொள்ள மாட்டோம். அன்பர்களும், காசைக் கொடுத்துக் கண்விழித்திருக்க மாட்டார்கள்.

"இனி நான்காவதாகிய வீட்டையடைவதற்கு, நாடகம் எவ்வாறு உதவுகிறது?" என்ருல், நாடகத்தினுல் பொருள் கிடைக்கிறது. கிடைக்கும் பொருளைத் தருமத்திற்குச் செலவு செய்கிருேம். இதனுல், மனத்தில் இன்பம் ஏற்படுகிறது. இவ்வாறு, பலகாலும் நிகழுமானுல், மனம் சுத்தமடையும். சித்த சுத்தியடைந்த மனிதன் சற்குருவை யடைந்து, நல்ல உபதேசங்களைப் பெறுகிருன். இவ்வுபதேசங்களைச் சிந்தித்துச் சிந்தித்து அனுபவத்தில் கொண்டுவருகிறவன் வீட்டின்பத்தை யடைவான். வேறு வகையாகப் பார்ப்போம்.

உயர்ந்த வேடங்களைத் தரித்து, மெய்ம்மறந்து நடிக்கின்றவர்களுடைய உள்ளங்களில், மேற்படி பாத்திரங்களின் உயர்ந்த நற்குணங்கள் படிவது இயற்கை. இந்தக் குணங்கள், நாளடைவில் மிகுவதால், அந்த நடிகர்கள், தெய்வீகத் தன்மையை யடைகின்றனர். ஆக், இந்த இரண்டு விதங்களாலும், நாடகம் வீட்டையடைய உதவுகிறது என்பது நன்கு விளங்கும்.

நாடக ஆசிரியர்களும், நாடகத்தைப் பார்க்கிறவர்களுங் கூட இந்த இன்ப நிலையை அடைகின்றனர்!! நாடகத்தின் மூலம்

பேசவேண்டிய முறை, பழக வேண்டிய வகை, ஆகிய உலக விவகாரங்களேயும் நன்கு அறியலாம்.

மழையில்லாமல் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில், "சத்திய அரிச்சந்திர" நாடகத்தை நடத்தியதால், மழைபெய்து, நாடு செழித்ததாய்ப் பெரியோர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். இதனுல், நாடகத்துக்குத் தெய்விக சக்தி உண்டென்று தெரிகிறது.

நம் நாட்டில் நல்வழி புகட்டும் நூல்களே மூன்றுவகையாகப் பிரித்திருக்கிருர்கள். அவை (1) வேதங்கள் (2) புராணங்கள் (3) நாடகம் முதலிய காவியங்கள்.

இவைகளில், முதலாவதான வேதம் அரசனேப் போல் கட்டளேயிட்டு, நல்ல காரியங்களேச் செய்ய ஏவுகிறது.

இரண்டாவதான புராணங்கள், ஆருயிர் நண்பனேப் போல் நயமொழிகளால், கதைகளின் மூலம், நல்ல செயல்களேச் செய்யத் தூண்டுகின்றன.

நாடகங்களோ வெனில், அழகும், கற்பும், அமுதமொழியும், அமைந்த மனேவி கணவனேத் திருத்துவது போல், கெட்ட ஒழுக்க முள்ளவர்களேயும் நல்லொழுக்க முள்ளவராக்குகின்றன.

நாடக ஆசிரியர்களுக்கும், நாடகத்தால் பல பயன்கள் கிடைக்கின்றன. பழங்காலத்தில் அவர்களுக்கு, அரசர் சன்மானம் செய்தனர். இக்காலத்தில், அரச சன்மானம் இல்லாது போனுலும், அவர்கள் நாடகம் நடத்துவோரிட மிருந்து, "ராயல்டி" என்ற உரிமைக் கட்டணத்தைப் பெறுகின்றனர்.

'கிருஷ்ண மிசிரர்' என்ற பெரியார், தம் சீடர்களுக்கு வேதாந்த பாடத்தைப் போதித்து வந்தார். வேதாந்த பாடமென்ருல், அது மிகவும் கஷ்டமான தென்பது யாவருக்கும் தெரியும். ஆதலால், அந்தப் பாட போதனே, அவர்களுக்குச் செவிடன் காதில் ஊதிய சங்கைப் போல், பயனற்றுப் போகவே, வேதாந்தக் கருத்துக்களே யுள்ளடக்கிக் கதையாயமைத்துப் "பிரபோத சந்திரோதயம்" என்னும் நாடகமாயெழுதித் தம் மாண

வர்களுக்குப் போதித்து வெற்றிபெற்றூர். எனவே, போதிப்ப தற்கரிய விஷயங்களையும், சுலபமாய்ப் புகட்டுவதில், நாடகத் திற்கிணை வேறில்லை யென்பது நன்கு புலப்படுகிறது.

நாடகத்தைப் பார்க்கிற ரஸிகர்களுக்கும், இதுவரை கூறி யுள்ளவைகளால் பல நன்மைக ளேற்படுவதோடு, வேறு அநேக நன்மைகளும் விளைகின்றன.

நாள் முழுவதும், மூளையை வருத்திக் கொண்டும், உடம்பை வருத்திக்கொண்டும், உழைத்த உழைப்பாளிகளுக்கு ஓய்வு அவசியமானது. அந்த ஓய்வை இன்பமயமாகக் கழிப்பதற்கா கவே, அவர்கள் நாடகத்திற்கு வருகிறூர்கள். பொழுது போக் குக்காக வந்த விடத்தில், பொழுது போக்குடன் கலந்தே அவர் களறிவுக்கு நல்ல விருந்தும் கிடைக்கிறது. புராண நாடகங்களைக் காண்பதன் மூலம், அன்னை, தந்தை, குரு, முதலியோரிடம் பக் தியும், சமூக நாடகங்களைக் காண்பதன் மூலம் நாட்டின் நன் மைக்கு வேண்டிய சீர்திருத்தக் கொள்கைகளும், அவர்களிடம் வளர்ச்சியடைகின்றன.

கோயில்களில், முற்காலத்தில், திருவிழாக் காலங்களில் ஏராளமான ஜனங்கள் கூடுவார்கள். அவர்களை நல்வழிப்படுத் தும் நாடகங்கள் அங்கு நடிக்கப் பெற்றன.

இதற்காகவே, பெரிய கோயில்களிலெல்லாம் நாடகசாலை மண்டபங்கள் இருந்தன. இப்பொழுதும் பல கோயில்களில், அவையிருப்பதைப் பார்க்கலாம். தற்சமயம் நாடகத்தின் தத்து வத்தை யுணராத ஒரு சிலரால் குறைகூறப்படும் நாடகத்திற்குத் திருக்கோயில்களில் இடங் கிடைக்க வேண்டுமாயின், நாடகத் தினல், நாட்டிற்குக் கிடைத்த பயன்களைக் கணக்கிட்டுக் கூற முடியுமோ?

பல ஆசிரியர்கள் எழுதிய பல நாடகங்களாலும், தமிழ்ப் புத்தகக் கணக்கு அதிகமாகி, தமிழ்மொழி வளர்ந்திருக்கிறது. பலவூர்களில் நந்தமிழன்னைக்கு இழுக்கு நேரும் வகையில், "கொடுந்தமிழ்" பேசப்படுகிறது. அதைத் திருத்திச் செந்தமி ழாக்கும் முறையில், நாடகம் நன்கு துணை செய்கிறது.

நமது பண்டைய நாகரிகச் சிறப்பினை எந்நாட்டவரும் அறியுமாறு செய்வது ஒப்பற்ற நாடகந்தான். "ஒரு நாட்டின் சிறப்பையறிய அந்நாட்டின் நாடகத்தைப் பார்" என்று பெரியோர் கூறுவர்.

நூற்றுக்கணக்கான பொது மேடைகளில், ஆயிரக்கணக்கான மணிநேரங்கள் பேசி, ஜனங்களைச் சீர்திருத்துவதை விட ஓர் இரவில், ஒரு நாடகத்தில் மூன்று மணிநேரம், செலவிடுவதன் மூலம், அவர்களை விரைவில் சீர்திருத்த முடியும்" என்பது சிறந்த அறிவாளிகளின் அபிப்ராயம்.

சுவாமி சுத்தானந்த பாரதியாரவர்கள், "பாட்டும் பரதமும் பண்புள்ள நாடகமும் நாட்டிற்கு நல்ல பயன்" என்றும்,

> "நல்ல நாடகங்கள் ஒரு சமுதாயத்தை உயர்த்தும். நாகரிகத்தை முன்னேற்றும். இரு விகார வுலகைக் கண்முன்னே காட்டும். புலன்களின் வழியே அறிவைப் புகட்டும். சிறந்த கல்விப் பயனை அளிக்கும். அடிமைத்தனம், காமம், வெகுளி, மயக்கம், சிறுமை. பொறாமை. ஆணவம், வஞ்சகம், குடி, களவு. சூது, ஆகிய தீமைகளின் கொடுமையைக் கண்முன் காட்டும். வாய்மை, தூய்மை, அன்பு, அருள், அறம், வரம், தெய்வபக்தி. ஆகிய நல்ல இயல்புகளை ஊக்கும். உலகின் முக்குணப் போராட்டங்களை மேடைமேல், திரை முன்னே காட்சிப் படலங்களாக விளக்கும். நாடகம் என்பது நடிக்கும் வேதம், இறையன்பு. நாட்டன்பு, சமுதாயச் சீர்திருத்தம், இலக்கியப் பயிற்சி, "காவியம், ஓவியம், பாட்டு, நடனம், ஆகிய கலைவளர்ச்சி," சன்மார்க்க உணர்ச்சி, இவையெல்லாம், திறமையுள்ள பாத்திரர் நடிக்கும் நாடகத்தால் உண்டாகும். ஒரு பொதுநல இயக்கத்தைப் பொதுஜனங்களிடையே பரப்பி, வெற்றிபெறச் செய்வதற்கு நாடகம் சிறந்த சாதனமாகும்"

என்றும், அருளியிருக்கிறார்.

அன்பர்களே! பஞ்சம், வறுமை, பசிப்பிணி, முதலிய கொடுமைகள் நிறைந்த இவ்வுலக நெருக்கடியில் தமிழ் நாடகக் கலையை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு இம்மாதிரி மகா நாட்டைக் கூட்டுவது சாமானிய காரிய மன்று, செய்வதற்கு மிகவும் கஷ்டமான இந்தக் காரியத்தைச் செய்து, என்னையும்

இதில் கலந்து கொள்ளும்படி செய்த பெரியோர்களெல்லோருக்கும், ஸ்ரீ பராசக்திக்கும் என் நமஸ்காரங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியோர்களே!

இதுவரை கூறியபடி, தெய்வீக சக்தி நிறைந்த நம் தமிழ் நாடகக் கலையை, மாசற்ற கலையை, ராமகிருஷ்ண பரமஹம்ஸர் போன்றோர் நடித்துக் காட்டிய நற்கலையை, உலகம் போற்றும் உத்தமர் மஹாத்மாவுக்குச் சத்திய வழிகாட்டிய கலையை, கல்வியறிவில்லாதவர்களுக்குக் கல்வி புகட்டும் கலையை, பாமரர் முதல் பண்டிதர் வரை, குழந்தை முதல் கிழவர் வரை, போற்றிப் புகழும் கலையை, காலதேச வர்த்தமான மறிந்து கடனாற்றும் கலையை, தானும் பயனுற்றுப் பிறருக்கும் பயனைக் கொடுக்கும் பண்புள்ள கலையை, தீண்டாமையை ஒழிக்கும் கலையை, ஜாதி பேதம் போக்கும் கலையை, தானதர்ம நற்காரியங்களுக்கு, லக்ஷக்கணக்காகப் பொருளைக் கொடுக்கும் லக்ஷ்மீ கடாக்ஷம் நிறைந்த கலையை, பஞ்சமா பாதகங்களைப் போக்கி நல்லறிவைப் புகட்டும் கலையை, நம் தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்யும் கலையை, நாட்டின் எல்லாத் தீமைகளையும் போக்கும் கலையை, பல பெரியோர்களை நினைவூட்டும் கலையை, தாய்நாட்டின் பெருமையை உயர்த்தும் தவக்கலையை, நன்கு உலகுக்குப் பயன் படுத்த வேண்டுமானால், அரசாங்கத்தாரும், பொதுமக்களும், நடிகர்களும் ஒத்துழைத்து இவ்வரும் பெரும் நாடகக்கலை, தன் பழம் பெருஞ் சிறப்புகளிலிருந்து என்றுங் குன்றாது வளர்ந்தோங்கிவர எல்லாம் வல்ல அன்னை ஆதி சக்தி அருள் புரிவாளாக.

நாடகம் செழிக்க நாடு செழிக்கும்!

ஓம் சக்தி.

# இலக்கியமும் சம்பிரதாயமும்

## நாடகத் தமிழ்

★

**திரு. சி. ஆர். மயிலேறு M. A.**
(அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.)

சம்பிரதாயம் வாழ்க்கையில் எல்லாத்துறைகளிலும் அநேக விதங்களில் முக்கியமாயிருக்கிறது. எதிலும் நாளடைவில் சம்பிரதாயம் ஏற்பட்டு, விதிகளையும், சட்டங்களையும் உண்டாக்கி விடுகிறது என்று கூறலாம். இன்று ஒருவன் ஒருதுறையில் புதிதாக ஏதாவது செய்தால் அதைப் பின்பற்றி அவனேயோ, அல்லது வேறு சிலரோ அதேமாதிரி செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஆகவே, தானாகவே பிரத்தியேக முயற்சியின்றி அவர்கள் செய்தவைகளிலிருந்தே, சம்பிரதாயமும் சட்ட திட்டங்களும் ஏற்படுகின்றன. காலக்கிரமத்தில் அவைகளை மீறி, அவைகளுக்கு முரணாக ஒருவராலும் அத்துறையில் ஒன்றும் செய்ய முடியாமல் போய் விடுகிறது. உதாரணமாக கிரீஸ் தேசத்தில், நாடகத் துறையில் முதல் முதலாக ஈஸ்கிலஸ் என்பவரும். ஸாபக்ளீஸ் என்பவரும் தாமாக நாடகங்கள் இயற்றினார்கள். அவைகளை ஆதாரமாகக் கொண்டு அரிஸ்டாடில் என்ற அறிஞர் நாடகமெழுதுவதற்கு சில சட்ட திட்டங்களை ஏற்படுத்தினார், பின்னர் கிரேக்க நாட்டில் அந்த திட்டங்களை கவனியாமல் வேறுவழியில் யாராலும் நாடகங்களே இயற்ற முடியாமல் போய் விட்டது. தானாக, இயற்கையாக ஏற்படும் சம்பிரதாயத்திற்கு கடைசியில் அவ்வளவு வலிமை வந்து விடுகிறது!

ஆனால் சம்பிரதாயத்தினால் பிரயோஜனமே இல்லையென்றோ, இது ஒரு மிகவும் பொல்லாத சம்பிரதாயம் ஆ! பார்த்தீர்களா, சொல்லளவில் கூட அதைக் கண்டிக்கும் பொழுது கூட் அதின்றி முடிவதில்லை! என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. புதிதாக ஒரு துறையில் இறங்கி வேலை செய்வோருக்கு வழக்கம் அல்லது சம்பிரதாயம் மிகவும் முக்கியமானதாயிருக்கிறது. உதாரணமாக இலக்கியத்தையே எடுத்துக் கொள்வோம். ஒருவன் ஒரு காவியம் எழுதத் தொடங்கினால் அவனுக்கு முன் யாராவது

எழுதியிருந்த காவியங்களை பரிசீலனை செய்து பார்த்து காவிய இலக்கணம் யாராவது வகுத்திருந்தால் அதையும் படித்தறிந்து பிறகு அவர்கள் காட்டிய வழியில் தன் வேலையைச் செய்யத் துடங்குகிறுன். இது ஒரு பெரிய உதவி யென்பதை நாம் மறந்து விடலாகாது; இல்லா விட்டால் கண்ணைக்கட்டி காட்டில் விட்ட மாதிரி இருக்கும். சம்பிரதாயமாக அனுசரிக்கப்பட்ட விதிகளைப் பின்பற்றி அவன் எழுதினுல் அது அங்கீகரிப்பதற்கு ஏற்றதாயு மிருக்கும். அதன் சிறப்புகளை நிர்ணயிக்க சம்பிரதாயம் ஒரு சிறந்த அளவுக்கருவியும் ஆகிறது. இவ்வித அளவுக்கருவி யொன்று இல்லா விட்டால் எவ்வாறு ஒரு புதுக் காவியத்தின் அருமை பெருமைகளை அறிய முடியும்? ஆனுல் நாம் மிகவும் ஜாக்கிரதை யாக இல்லா விட்டால் இச்சம்பிரதாய மென்னும் துணை, நம்மை ஆளத்துடங்கி அடிமைகளாக்கிவிடும். விஞ்ஞானத்தை நாம் நமக்கு ஏற்ற ஆளாக வைத்துக் கொண்டால் உற்ற துணையாயிரு ப்பது போலவும்,ஏமாந்தால் நம்மை அழித்து உருக்குலைந்து போக அடிக்கும் ஒரு சாதனமாக இருப்பது போல்! சம்பிரதாயம், சம்பிரதாயம் என்று சொல்லிக்கொண்டு, புதிதாக ஒன்றும் தலையெடுக்க வொட்டாமல் செய்து விடமுடியும். இப்படித்தான் உலகத்தில் அநேகத்துறைகளில் சாதாரணமாய் நடக்கிறது. திறமையையும், சிறப்பையும் அறிந்து பாராட்டுவதற்கு பதில் சம்பிரதாயத்தையும், வழக்கத்தையும் பீடமேற்றி கும்பிடுகிறோம் ஆங்கில இலக்கியத்தில், மார்லோவும், ஷேக்ஸ்பியரும் தோன்றி நாடகங்களை இயற்று முன்பு, செனிகா என்னும் இத்தாலிய தேச நாடகாசிரியர் எழுதிய நாடகங்களைத் தான் எல்லோரும் பின்பற்றித் தங்கள் நாடகங்களை எழுதிக் கொண்டிருந்தார்கள். செனிகாவின் விதிகளை கவனிக்காமலோ மீறியோ ஏதாவது எழுதப்பட்டால்? உடனே அதைப் பண்டிதர்கள் கண்டித்து துவம்சம் செய்து வந்தார்கள். ஆங்கில இலக்கியத்திற்கு நல்ல வேளையாக பண்டிதர்களோ, சம்பிரதாயமோ விஷயங்களைத் தீர்மானிக்க வில்லை; பாமரர்களே, நாடகங்களைக் காண ஆவலாய் வந்து குழுமிய சாதாரண ஜனங்கள் தான் கடைசியில் இதை முடிவு செய்தார்கள்; மார்லோவும் ஷேக்ஸ்பியரும் ஜனங் களுக்கு வேண்டியதைக் கொடுத்தார்கள்; வெற்றி பெற்றார்கள்.

ஆனல் அவர்கள் சம்பிரதாயத்தையும் முழுவதும் கைவிட்டு விடவில்லை. தமிழிலும் சம்பிரதாயம் தன் ஆதிக்கத்தை பூராவும் செலுத்தியிருக்கிறது. ஏன்! இதுவரையில், இருபதாம் நூற்றுண்டு ஆரம்பத்தின் வரையில், பழைய சம்பிரதாயங்கள் தான் தமிழில் வழங்கிவந்திருக்கின்றன. வசன புஸ்தகங்களே கிடைப்பது துர்லபமாயிருந்தது. ஏனெனில் வசன நடையும், வசனத்தில் புஸ்தகங்கள் எழுதுவதும் பழைய தமிழ் சம்பிரதாயமாயிருந்த தில்லை. வைத்தியம், சோதிடம், தத்துவ ஞானம், எல்லாம் செய்யுள் முலமாகவே எழுதப்பட்டு வந்தன. காவியங்கள், புராணங்கள், அந்தாதிகள், சதகங்கள், உலாக்கள், பள்ளுவகையருக்கள் எல்லாவற்றிற்கும் சம்பிரதாயம் தான் ஆதாரமாயிருந்து, வழக்கப்படியே செய்யப்பட்டு வந்தன. ஆகையால் பழைய தமிழ் இலக்கியத்தில் சம்பிரதாயம் மிகவும் முக்கியமான அபிவிருத்தி காரணமாயிருந்திருக்கிறது. ஆனல் இருபதாம் நூற்றுண்டு ஆரம்பித்த பிறகு, ஏன், அதற்கு சிறிதுகாலம் முன்பிருந்தே சிறிது சிறிதாக இந்த சம்பிரதாயங்களெல்லாம் சிதறுண்டு வருகின்றன. எழுத்தாளர்கள் நம்நாட்டிலேயே மற்ற இலக்கியங்களைப் படித்து அறிந்து அனுபவித்து வந்ததாலும், ஆங்கிலப் படிப்பின் காரணமாக தற்கால நவீன ஆங்கில இலக்கியத்தையும் மற்ற மேற்குதேச இலக்கியங்களையும் படித்ததனுல் அவைகளைப் பின்பற்றி எழுதவாரம்பித்தனர். தமிழ் வசன இலக்கியம், சமீபத்தில் தான் வளரத்தொடங்கிற்று. நாவல்கள் சிறுகதைகள், ஹாஸ்யக் கட்டுரைகள். முதலியன வெல்லாம், மேற்கு நாட்டு இலக்கியப்படிப்பின் பயனுய் விளைந்தன. நம் நாட்டு மற்ற இலக்கியங்களிலும் இதே மாறுதல் தான் ஏற்பட்டிருக்கிறது. நம்மை விட இன்னும் அதிகமாக, ஆனல் பழைய சம்பிரதாயங்களே தமிழில் இப்பொழுது இல்லையா என்று கேட்கக்கூடும். பண்டிதர்களிடையும், அவரைப் போன்ற மனப்பான்மை உடையோரிடையும் இன்னும் பழைய கால சம்பிரதாயங்கள் இருக்கின்றன. அவர்கள் இப்பொழுதும் பழைய முறைப்படியே பாடங்களையும் புஸ்தகங்களையும் எழுதி வருகின்றனர். தற்கால நாகரிக தமிழ் எழுத்தாளர்களையும் அவர்கள் எழுதுவதையும் அவர்கள் அங்கீகரிப்பதில்லை. ஆனல் பொது ஜனங்கள் புதுச் சம்பிரதாயங்களில் ஈடுபட்டுப் போயிருப்பதால் புதுமா

திரியான கதைகளும், கட்டுரைகளும் ஏராளமாக வெளிவருகின்றன. ஆம்! இன்னும் கொஞ்ச நாளில், இந்த முறைகளே சம்பிரதாய மானாலும் ஆகலாம் போலிருக்கிறது! சில பண்டிதர்களே இம்முறைகளைக் கையாள ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே தற்கால தமிழைப் பொருத்தமட்டில் பழைய சம்பிரதாயங்கள் முன்னைப் போல் அவ்வளவு ஆதிக்கம் செலுத்தவில்லை யென்றே சொல்லலாம்.

இப்பொழுது நாடகத்தமிழை எடுத்துக் கொள்வோம் இதைப்பற்றிக் கூறியிருப்பவைகளை கூர்ந்து பார்த்தால் ஆச்சரியமாயிருக்கிறது. அவ்வளவு நுணுக்கங்களும். பாகுபாடுகளும் நாம் காண்கிறோம். நாடக முறையில் என்னென்ன செய்ய முடியுமோ, கூடுமோ அவைகளனைத்தையும் கூறியிருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். ஒன்றையும் ஆசிரியரின் கற்பனை சக்திக்கோ சொந்த முயற்சிக்கோ விடவில்லை. கதைப் போக்கு கதை முடிவு, பாத்திரங்கள், நடை, படிப்பினை, பாவங்கள் முற்றிலும் வகுக்கப்பட்டிருந்தன. ஆசிரியன் அவைகளிலிருந்து தனக்கு வேண்டியவற்றை எடுத்து பொறுக்கி, சம்பிரதாயப் பிரகாரம் எழுதவேண்டியது தான் பாக்கி! மிகவும் ஆச்சரியப்படத்தக்க மாதிரியில் அவன் வேலை எளிதாக்கப்பட்டிருந்தது. சங்கீத சாஸ்திரத்தில் எப்படி இன்னின்ன ஸ்வரங்கள் இன்னின்ன மாதிரியில் சேர்ந்தால் இன்னின்ன ராகங்கள் உண்டாகும் என்று மிகவும் நுணுக்கமாக தொகுத்துவைத்திருந்தார்களோ, அதேமாதிரி நாடகத்துறையிலும் செய்திருந்தார்கள். உலகத்தில் எந்த நாட்டில் எந்தமாதிரி பாடினாலும், அதை கர்நாடக சங்கீதத்தில் ஒரு ராகம் என்று கண்டுபிடித்துச் சொல்லி விடலாம். இதேவிதமாக நாடகத்துறையில் எவ்வித புதுமுயற்சி செய்தாலும் அதற்கெல்லாம் இலக்கணம் நம் பழைய நாடகவியல் புஸ்தகங்களில் இருக்கிறது. மேற்குதேச இலக்கியங்களில் தற்காலத்தில் ஓரங்க நாடகங்களென்று மிகவும் பிரசித்தி பெற்றிருக்கின்றன. தற்கால அவசர நாகரிகத்திற் கேற்ற அவசரமாக சந்தோஷிப்பிக்க நாடகமுறை! அதற்கு ஏற்றதாகப் பெயரும் "அங்கம்" என்று கொடுத்திருந்தார்கள். அதைப்பற்றிய முழுவிவரங்களையும் கூறும் போது.

அவலச்சுவைத்தா யங்கமொன்றுடைத்தாய்க்
கவலைகொள்மகளிர் கசிந்துளமழுங்க
வண்மினர்வாய்விடுத் தாற்றுமாண்பிற்றாய்
வாதம்விளைத்து வாய்ப்போர்காட்டி
மக்கள்பாத்திரமா வயங்குறுவதுவே
யங்கமென்ன வறிதல்வேண்டும்.

இப்பொழுது அவர்கள் நாடகத்தைப்பற்றிய சில முக்கியமான இலக்கணங்களைக் கவனிப்போம். நாடகமென்றால் முதலில் கதை ஞாபகத்திற்கு வருகிறது; கதையின்றி நாடகமேது? ஆங்கிலத்தில் இதற்குத்தான் Plot என்று சொல்வார்கள். இந்த நாடகக் கதையை மூன்று விதமாகப் பிரித்திருந்தார்கள். பொய்யுரை, மெய்யுரை, புனைந்துரை. பொய்யுரை என்றால் ஆசிரியன் தானாகவே புதிதாக ஒரு கதையை சிருஷ்டித்து (அது உலகத்தில் முன் ஒருவராலும் எழுதியிருக்கப்படக் கூடாது, நிகழ்ந்திருக்கவுங் கூடாது.) அதை நிஜம் போல் காண்பிப்பது. இவ்வளவு சுலபமாகக் கூறிவிட்டாலும் எவ்வளவு கடினம், இப்படிச் செய்வது. இதைத் தான் Original plot என்று ஆங்கிலத்தில் கூறுவது. உலகம் புகழும் ஆங்கில நாடகாசிரியராகிய Shakespeare இந்த வம்புத்தண்டாவுக்குப் போகவே இல்லை. சொந்தக்கதையாய் ஒன்றுகூடச் செய்யவே இல்லை! மெய்யுரை என்பது உலகத்தில் உண்மையாய் நடந்திருப்பதை எல்லோரும் அறிந்ததை, தெளிவாய் எடுத்துரைப்பது. அதாவது சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சியைத் தேர்ந்தெடுத்து நாடகப்படுத்துவது இதை historical plot என்று கூறுவார்கள். புனைந்துரை. என்றால் உலகத்தில் நடந்ததையோ நடந்ததாகக் கேட்டதையோ ஆதாரமாக வைத்துக் கொண்டு அதனுடன் சிறிது ஆசிரியன் தன் சொந்த சரக்கையும் சேர்த்து எழுதுவது! Mixed plot என்பதை எவ்வளவு அழகாய் சித்திரித்திருக்கிறார் கவனியுங்கள்! இம்மூன்று முறைகளையுந்தவிர வேறு எவ்விதத்தில் கதையை சிருஷ்டிக்க முடியும்? அப்படி ஏதாவது இருந்தால்.

உள்ளோன் றலைவனுவுள்ள துரைத்தலு
மில்லோன் றலைவனு வில்ல திசைத்தலு
முள்ளோன் றலைவனு வில்ல துரைத்தலு
மில்லோன் றலைவனு வுள்ள தியம்பலும்
பெருமைசால் யோனிப் பெயரினவாகும்

இதனுள் தற்கால "Realistic drama" "Fantasy" எல்லாம் அடங்கியிருக்கின்றன வென்பதைக் காணலாம்.

இதேமாதிரி நூற்பொருள் அறம், பொருள், இன்பம் வீடென்றும், நாடகத்தினுள்ளும் சுவைபொருள் இவை எவ்வளவு மேலோங்கி யிருக்கின்றனவோ அவைகளுக்குத் தகுந்த மாதிரி அதை பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என நான்கு ஜாதியாகப் பிரித்திருந்தார்கள்! இந்த ஜாதி பாகுபாடு நாடகங்களிலும் விடவில்லை போலிருக்கிறது! இவைமட்டுமா? சந்தி யென்று அறுபத்திநான்கு பிரிவுகள் இருந்தன. (சந்தியாவது நாடகத்திற்காக ஆசிரியன் எடுத்த கதையில் ஆரம்பித்த விஷயங்கள் நடுவில் வரும் விஷயங்களுடன் பொருந்தி, வளர்ந்து முதிர்ச்சி பெறுவது). ஆங்கிலத்தில் plot development என்று சொல்வார்கள். எந்தக்கதை வேண்டுமானாலும் இந்த அறுபத்தி நான்கினுள் பொறுக்கிக் கொள்ளலாம்! அதேமாதிரி எதுதான் புதிதாய் எழுதினாலும், இந்த அறுபத்தி நான்குக்குள் அது இருக்கும்! பின் சுவை பாகுபாடுகளென்ன! அந்த நவரசத்தின் வெளியில் போக முடியுமா? உவகை, பெருமிதம், நகை, சமம், வெகுளி, வியப்பு, இழிப்பு, அவலம், அச்சம் இவைகளுள் அடங்காத சுவை எது? பிறகு நிலை அதாவது சுவையின் நிலை ஆறென்றும், பாதம் ஐந்தென்றும், அங்கக் கிரியைகள் பதினாறென்றும் பொருத்தம் மூன்றென்றும், வரிப்பாட்டு பன்னிரண்டென்றும் இன்னும் எவ்வளவு நுணுக்கங்களோ, அவ்வளவையும் தேர்ந்தெடுத்து எழுதி, அவைகளுக் கெல்லாம் இலக்கணமும் சம்பூர்ணமாக வகுத்திருந்தார்கள். இனி கதாநாயக நாயகிகள் எவ்வளவு விதத்தில் சித்தரிக்கப்படலாம் என்கிறீர்கள்? சரி! இதோ பாருங்கள். தலைவர்கள் நான்குவகை தீரோதாத்தன், தீரகாந்தன், தீரோதத்தன், தீரலலிதன் இவனன்றி உபதலைவன் வகை உபநாயகன், பீடமர்ந்த நாயகன் தலைவனுடன் எப்பொழுதும் வரும் நண்பன் விதூஷகன் அல்லது விகடன்! பின் தலைவியரைப் பார்ப்போம். அவர்களும் நான்குவகை சுகுணை, சாந்தை, அரக்கி. காமினி. அவர்கள் நலன்கள் அல்லது குணங்கள் இருபத்தெட்டு, மிகவும் சாவகாசமாக யோசித்து, பெண் பார்த்து மணம்செய்து கொள்பவரைக் கேட்டாலுங் கூட இவ்வளவு குணங்கள் ஒரு

பெண்ணுக்கு உண்டா என்று ஆச்சரியப்படுவார்கள்! நாடகத்திற்குள் நாடகம் "Play within play" என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, Hamlet-இல் முக்கிய அம்சம்; அதுவும் முற்காலத்திலே யோசிக்கப்பட்டிருக்கிறது; பெயர் "உண்ணுடகம்" என்றுர்கள். உள்நாடகம் பத்து அங்கம் கொண்ட பெரிய நாடகங்களுக்கு, "மாநாடகம்" என்றுர்கள்; மார்லோவின் "டாம்பூர்லேன்" பத்து அங்கம் கொண்டது. ஒரு மாநாடகமாகும்! மூன்று நாடகம் ஒன்றன்பின் ஒன்றுய் ஒரு கதையை விளக்கினுல் அதற்கு பெயர் "மூந்நாடகம்" என்றுர்கள். ஆங்கிலத்தில் "Triloty" என்று சொல்வார்கள். Shakespeare எழுதிய Henry II-ம் Sophocles-இன் Qedipus-ம் இதற்கு உதாரணங்கள்! இவைகளுக்கு இலக்கணம் நம் நாட்டில் பழைய காலத்திலேயே வகுத்திருந்தார்கள். நாடக முடிவு இரு வகை நற்பொருளிறுதி (Comedy) தீப்பொருளிறுதி (tragedy) சாதாரணமாய் தீப்பொருளிறுதியுள்ள நாடகங்கள் எழுதப்படவில்லையென்றுலும் அவைகளையும் யோசித்து வைத்திருந்தார்களென்று தெரிகிறதல்லவா? சிலப்பதிகாரத்தின் முடிவு இந்த இறுதியையன்றோ நிரூபிக்கின்றது. வளர்த்துவானேன். இதேபோல் விருத்திகள் நான்கெனவும், கூற்றுவகைகளும் நான்கென்றும், கூத்து ஏழுவகையென்றும், ஒன்றையும் பாக்கிவிடாமல் சொல்லியிருந்தார்கள்.

ஆகையால் நாடகாசிரியனுக்கு நாடகம் எழுதுவதற்கெல்லாம் தயாராய் வைத்திருந்தார்கள்; இவைகளிலிருந்து தனக்கு வேண்டியவைகளைப் பொறுக்கி எடுத்துச் சேர்க்க வேண்டியதுதான் அவன் வேலையாயிருந்தது. இதன் சௌகரியத்தை நாம் மறந்துவிடலாது. புதிதாக ஒரு கதையையோ, நாடகத்தையோ எழுத விரும்புபவர் விஷயம், பாத்திரம், எழுதும் முறை இவை தெரியாமல் தவிப்பதைப் பார்த்தால் இதன் உபயோகம் நன்றுய் விளங்கும். ஆனுல் இதிலிருக்கப்பட்ட தீங்கையும் கவனிக்கவேண்டும். என்னதான் இச்சம்பிரதாயங்களைப் பின்பற்றி ஒரு நாடகாசிரியன் ஒரு நூல் இயற்றினுலும் அதில், தன் சொந்த உணர்ச்சி, உத்வேகம் இவையன்றி, 'சப்' பென்று இருக்கும். எப்பொழுதாவது ஒரு நாட-

கம் மிகவும் நன்ருகச் சோபித்தால் அதற்குக் காரணம், ஆசிரியனின் மனே உத்சாகமும், உணர்ச்சியும் கெட்டிக்காரத்தனமுமேயன்றி, வெறும் சம்பிரதாயங்கள் மட்டுமெல்ல.

இனி நாம் கழிந்த நாற்பது ஐம்பது ஆண்டுகளில் வெளியாயிருக்கிற தமிழ் நாடகங்களைக் கவனிக்கலாம். அவைகளில் பழைய சம்பிரதாயங்கள் எம்மட்டு கையாளப்பட்டு வந்திருக்கின்றன என்பதையும் கவனிக்கலாம். மற்ற எல்லாத் துறைகளிலும் போலவே நாடகத் துறையிலும் ஆங்கிலப் படிப்பும் ஆங்கில நாகரிகமும் அதிகமாக ஆக, பழைய காலத்து பழக்க வழக்கங்கள் சிதறுண்டு போயின. ஆங்கில ஆசிரியர்களின் நாடகங்களை கலாசாலைகளிலும் சுயமாகவும் படித்ததின் பயனுக என் அந்நாடகங்களைப் பின்பற்றித் தமிழிலேயும் எழுதக் கூடாது என்று எழுத்தாளர்களின் மனதில் தோன்றியது இயற்கைதான். ஆகவே Shakespeare-ன் நாடகங்களைத் தமிழில் மொழி பெயர்க்கவும், தழுவி எழுதவும் ஆரம்பித்தார்கள். அவர் எழுதிய முக்கியமான நாடகங்கள் தமிழில் வெளிவந்திருக்கின்றன. Hamlet என்னும் பிரசித்தி பெற்ற நாடகம் தமிழில் 1917-ம் வருஷத்தில் கே. வேங்கட்டராமய்யரென்பவராலும் அதற்கு முன் 1908-ம் வருஷத்தில் ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியாராலும் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டது. Othallo வை அ. மாதவைய்யாவும், பி. எஸ். துரைசாமி அய்யங்கார் என்பவரும் தமிழ்ப்படுத்தி யிருக்கிருர்கள். இதேமாதிரி King Lear-ஐ "மங்கையர் பகட்டு" என்றும், Macbeth-ஐ மகபதி என்றும், Romeo Juliet-ஐ பாம்யனும் ஜொலியையும் என்றும் வெளியிட்டிருக்கிறார்கள். Shakespeare-ன் தமிழ்ப்படுத்தப்பட்ட மற்ற சில நாடகங்களாவன: Comedy of Errors, Cymbcline, As You Like it, Midsummer Night Dream, Merchant of Venice, இவையன்றி வேறு சில நாடகங்களை காலஞ்சென்ற டி. என். சேஷாசலம் என்றவர் தமது பத்திரிகையாகிய "கலாநிலையம் என்பதில் மொழிபெயர்த்துவந்தார். அவருடைய எண்ணம் பாக்கியிருந்த எல்லா Shakespeare நாடகங்களையுமே அவ்வாறு மொழிபெயர்த்து தமிழருக்கு அளிக்கவேண்டுமென்பது. ஆனுல் அதற்குள் அவர் நோய்வாய்ப்பட்டிறந்தது தமிழ்நாட்டின் துர

திர்ஷ்டமே தான். இவர் Sheriden என்னும் ஆங்கில ஆசிரியர் எழுதிய Pizarro என்னும் நாடகத்தை தமிழ்ப்படுத்தி முதல் நூலில் உள்ள பெயர்களேயே பாத்திரங்களுக்கு வைத்து தென் னிந்தியாவில் அநேக இடங்களில் அதை நடித்தும் காண்பித்தார். முதலில் அந்த முறை சிறிது புதிதாயிருந்தாலும், பிறகு நன்று யிருந்தது. இவையன்றி Motiere என்று சொல்லப்பட்ட French ஆசிரியரின் சில ஹாஸ்ய நாடகங்களும் தமிழில் வெளிவந்திருக்கின்றன. Milton எழுதிய Comus எனும் கதை யைத் தழுவி குணமாலிகை என்ற ஒரு நாடகமு மிருக்கிறது. Mrs. Henry Lood எழுதிய East Lynne என்னும் நாவலைத் தழுவி எழுதப்பட்ட சபலா என்னும் நாடகமும் இருக்கிறது. மேலும் இப்பொழுது Ibsen எனும் நார்வே தேசத்து நாடகா சிரியரின் சில நாடகங்கள் வெளிவரத் துடங்கியிருக்கின்றன. முன்னாட்களில் Shakespeare எப்படித் தலைசிறந்து விளங்கினு ரோ அம்மாதிரி இக்காலத்து நாடக உலகில் Ibsen பெயர் உலவு கிறது. அநேக ஒற்றையங்க நாடகங்களும் இப்பொழுது வெளி வருகின்றன. இவைமேல் நாட்டு ஒற்றையங்க நாடகங்களைப் பின்பற்றியோ, தழுவியோ, எழுதப்பட்டவை யாயும் இல்லாவிட் டால், அவைகள் எழுதப்பட்ட மாதிரியிலிருக்கின்றன. இச்சிறு நாடகங்களை பத்திரிகைப் படிப்போரும் ரேடியோ கேட்போரும் மிகவும் ரசிக்கிறுர்கள். இவ்வெல்லா நாடகங்களிலும், நம் பழைய தமிழ் நாடக சம்பிரதாயங்கள் சிறிதும் இல்லையென்றே கூற லாம். துதிகள், அவையடக்கம், பாட்டுக்கள், விருத்தங்கள், தலை வன் தலைவி வகைகள், பேச்சு மாதிரிகள் இவையொன்றும் இவைகளில் காண முடியாது. முற்காலத்து நாடகங்களெல்லாம் செய்யுள் முறையிலேயே இயற்றப்பட்டு வந்ததென அறிகிறேம். ஆனுல் இந்நாடகங்கள் எல்லாம் வசன நடையிலேயே இயற் றப்பட்டிருக்கின்றன. இவ்வசன நடையும் செந்தமிழின்றி, ஜனங்கள் சாதாரணமாய் தினசரி வாழ்க்கையில் கையாளும் நடையையே பின்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. பண்டிதரே யன்றி பாமரரும் படித்து இன்புறுமாறு இவ்வாறு செய்யப்பட் டிருக்கிறது. மேலும், தினசரி வாழ்க்கையில் நடக்கும் சம்ப வங்களேயே தற்காலத்து நாடகங்கள் சித்தரிப்பதால் பொது ஜனங்கள் இவைகளேப் பெரிதும் விரும்புகிறுர்கள்.

இவையன்றி, தமிழில் பழைய சம்ஸ்கிருத ஆசிரியர்களால் எழுதிவைக்கப்பட்ட நாடகங்களும் வெளிவந்திருக்கின்றன. காளிதாஸரின் "சாகுந்தலம்" விக்கிரமோர்வசியம், மாளவிகாக்கினி மித்ரமும் இவையன்றி வேணிசம்ஹாரம், மிருச்சகடி என்ற பெயர் பெற்ற நாடகங்களெல்லாம் தமிழில் வெளிவந்திருக்கின்றன. இவையெல்லாம் மூல நூலைப் பின்பற்றியே பாட்டு, விருத்தம், துதி, சூத்திரதாரன், நடி, இவைகளைப் புகுத்தியே எழுதப்பட்டிருக்கின்றன. நடையும் உயர்ந்ததாய் அநேகமாய் செய்யுளிலேயே இருக்கிறது. ஆகவே பண்டிதர்களிடையே மிகவும் போற்றப்பட்டாலும், பாமரர்களால் அறிந்து, அனுபவிக்கக் கூடாதவைகளா யிருக்கின்றன.

மேலும், நாடகமும், பிறகு சமீபத்தில் சினிமாவும் முன்னேற்றமடைந்த பிறகு பழைய புராணக்கதைகளும் பக்தர்களின் சரித்திரங்களும் ஏராளமாக நாடகப்படுத்தப்பட்டிருக்கின்றன. வசன நடையில் அநேக பாட்டுக்களும், விருத்தங்களும் சேர்க்கப்பட்டு எழுதப்பட்டிருக்கின்றன. பழையகாலத்தில் கர்நாடக சங்கீத முறையில் மெட்டுக்களமைந்த பாட்டுக்களுடனிருந்தால், இப்பொழுது வட இந்திய மெட்டுக்களிலேயே பெரும்பாலும் பாட்டுக்கள் அமைக்கப்படுகின்றன. இவையன்றி சமூக நாடகங்களென்னும் Social play-ம் சிற்சில சரித்திர சம்பந்தமான நாடகங்களும் வெளிவந்திருக்கின்றன, ஆனால் அதிகமில்லை. சொந்தக் கற்பனையைக் கொண்டு சிருஷ்டித்த சில நாடகங்களும் இருக்கின்றன.

இந்த நாடகங்களின் இலக்கியச் சிறப்பு மிகவும் குறைவு என்று சொல்லவேண்டிய அவசியமில்லை. அவைகள் அவசரத்திற்குத் தகுந்தாற் போல் மேடையில் நடிக்கவோ திரையில் நடிக்கவோ, அவசரமாகச் செய்யப்பட்டதால் உன்னத இலக்கியச் சுவைகளை அவைகளில் எதிர்பார்ப்பதும் பிரயோசனம் இல்லை. மேலும், வியாபார நிமித்தமாக நடத்தப்படும் நாடகக் கம்பெனிகளிலும் சினிமாக் கம்பெனிகளிலும் நாடகங்களை கலையாகக் கருதி, இலக்கியச் சுவைகளுடன் எழுதப்படுவது மேல்நாடுகளிலும் துர்லபம். சினிமாவின் போட்டியால் இப்பொழுது வரவர நாடகங்கள் எழுதப்படுவதோ நடிக்கப்படுவதோ அபூர்வமாய்

விட்டது. இங்கிலேயில் ரேடியோ வந்தது நாடகத்திற்கு மிகவும் உபகாரமாயிருக்கிறது. பெரிய நாடகங்களும், சிறிய நாடகங்களும் நல்ல முறைகளில் எழுதப்பட்டு நன்ருக நடிக்கப்படுகின்றன. ஜனங்களும் இவைகளே ரசித்துப் பாராட்டுகிருர்கள். எழுத்தாளர்களும் புதுப்புது கற்பனேகளே சிருஷ்டித்துக் கொடுக்கிருர்கள். ஆகவே நாடகத்திற்கு ஓர் எதிர்பாராத விதத்தில் உதவி கிடைத்திருக்கிறது. இந்த உதவியை நல்லவழிகளில் உபயோகப்படுத்தினல் நாடகக்கலேயும் நன்ருகச் சிறந்தோங்கும் என்பதில் சந்தேகமில்லே. நாடக ரசிகர்கள் தம்முள் ஆங்காங்கே சபைகளே அமைத்துக் கொண்டு நல்ல இலக்கியச் சுவையுள்ள நாடகங்களேத் தயாரித்து நடித்துக் காட்டுதலும் அவசியம். இயற்றப்படும் நாடகங்கள் தற்கால சமூகத்திற்கும் ஜன மனப்பான்மைக்கும் தகுந்தவாறு பாத்திரங்கள், சம்பாஷணே, கதை முதலியவைகளே அமைத்து எழுதப்பட வேண்டும். பாமர ஜனங்கள் பேசும் தமிழைச் சிறிது ஒழுங்குபடுத்தி உபயோகிக்க வேண்டும். பாத்திரங்களுக்குத் தகுந்த முறையில் நடையையும் மாதிரியையும் மாற்ற வேண்டும். வேறு இலக்கியங்களிலிருந்து எண்ணங்களே எடுத்தால் அவைகளேநம்முடைய சமுதாயத்திற்கும், வழக்கங்களுக்கும் தகுந்தமாதிரியாக மாற்றி அமைத்து எழுதவேண்டும். சில சமயங்களில் சில பொருக்கி எடுத்த நன்ருய்ப்படித்த ஜனங்களுக்கு அந்நிய நாட்டு மொழிபெயர்ப்பையே அதே பெயர்களுடன் வைத்துக்கொண்டு நடித்துக் காண்பிக்கலாம். ஜனங்களே அவை வசீகரித்தால் மேலும் மேலும் அவ்வாறே செய்யலாம். செய்யுள் நடையும் இவ்வாறே பிரத்தியேகமாக அறிவாளிகள் நிறைந்த சபைகளுக்கு வைத்துக்கொள்ள வேண்டும். இப்படியின்றி இப்பொழுது நம் பழைய நாடகச் சம்பிரதாயங்களேச் கையாளத்துடங்கினல் கஷ்டமேற்படும். ஜனங்களின் விருப்பு வெறுப்புத்தான் இப்பொழுது கவனிக்கப்படவேண்டும். மீண்டும் நம் நாடகமானது தனது பழைய நிலேயை புது முறைகளில் அடையுமாறு இறைவனேப் பிரார்த்திப்போம். நமஸ்காரம்!

★




# நவாப் T. S. இராஜமாணிக்கத்தின்
# மதுரை தேவி பால வினோத
## : சங்கித சபா :

**முகாம்: சித்ரா தியேட்டர், திருவனந்தபுரம்.**

ஒப்பற்ற கலா நுட்பங்கள் நிறைந்த உன்னதமான தயாரிப்பு!
கற்பனைச் சிகரத்தின் அற்புத சிருஷ்டி!!
கலாமண்டலத்தின் புதிய ஜோதிகள்!!!

**சக்தி லீலா ★ ஐயப்பன்**

(உரிமையுள்ளவை)
இரண்டு நாடகங்களும்
பூரண வெற்றியுடன் நடைபெற்று வருகின்றன.

— மற்றும் —

**இன்பசாகரன், ஏசுநாதர், பிரபலச்சந்திரா**
**பிரேமகுமாரி**
முதலான எமது உரிமைபெற்ற நாடகங்களும்
**கிருஷ்ண லீலா, ராமதாஸ், இராமாயணம்,**
**ஞான சவுந்தரி**
ஆகிய முக்கிய நாடகங்களும்
பொதுஜனங்களின் பாராட்டுதலைப் பூரணமாகப் பெற்றுள்ளன.
யாவையும் நேரில் காணுங்கள்.
உங்களது ஆதரவே எமது பெரும் செல்வம்.
நாடகக் கலையரசு, நாடக கலாநிதி, நாடக கேசரி
நவாப் T. S. ராஜமாணிக்கம் :: :: உரிமையாளர்.

# நாடகத்தில் பெண்கள்

(திருமதி பி. எஸ். சிவபாக்கியம்)



அவைத்தலைவரவர்களே, பெரியோர்களே! சகோதர, சகோதரிகளே!

பல்கலைத் தெளிவும், உலக அனுபவமும், நாட்டை முன்னேற்றும் ஆற்றலும் நிறைந்த மகா விற்பன்னர்கள் சூழ்ந்த இந்த, மாபெருஞ் சபையில், ஒன்றுமறியாதவளாகிய என்னைப் பொருட்படுத்தி நாடகக் கலையைப்பற்றிப் பேசுவதற்கு, அனுமதித்ததே என் பாக்கியமாகும். என் பெற்றோர்கள், எனக்கு சிவபாக்கியமென்று சூட்டிய திருநாமத்தின் பெரும் பாக்கியத்தை இன்றே பெற்றேன்.

நாடகக் கலையைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் தமிழ் நாடகக்கலையின், தத்துவத்தைக் கடுகளவாவது, தெரிந்து கொள்ள வேண்டுமென்ற பேராசை மட்டும் நிறைய உண்டு. முதலில் இம்மகாநாட்டிற்கு வருவதற்கே அஞ்சினேன். ஆசிரியர் மதுர பாஸ்கரதாஸ் அவர்களும், மதுரை மீனாக்ஷி தேவஸ்தான

V. R. சுந்தரசர்மா அவர்களும் மதுரை முத்தமிழ்க் கலா ,வித்வ ரத்தின, T. K. S. சகோதரர்களில் ஒருவரான திரு. T. K. சண்முகம் அவர்களும் எனக்கு ஊக்கமளித்து இதில் கலந்து கொள்ளும்படி செய்தார்கள். அம்மூவருக்கும், இங்கு நிறைந் துள்ள பெரியோர் யாவருக்கும் எனது மனமார்ந்த வணக்கம் உரித்தாகுக.

உணர்ச்சி ததும்ப, தத்ரூபமாக நடிக்கும் நடிக மக்களால் நாட்டை உயர்த்தவும் தாழ்த்தவும் முடியும் என்பது, அறிஞர்கள் கண்ட அனுபவ முடிவாகும். அத்தகைய பெருமை வாய்ந்த நமது தமிழ் நாடகக் கலையின் இன்றைய நிலையை எண்ணினுல் கவலைக்கும், நகைப்புக்கும் இடமாய் இருக்கின்றது. காரணம் கலைநுட்பமும், உணர்ச்சியும், ஒழுக்கமும் இல்லாத ஓர் சிலர் ஊதியம் ஒன்றைமட்டும் குறியாகக்கொண்டு தமக்குத் தெரிந்தது தெரியாதது எல்லாவற்றையும் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லா மல், உளறிக் கொட்டித், தாமும் அவமானம் அடைவதுடன் உயர்ந்த நாடகக்கலைக்கும், இழிவைத் தேடிவைக்கின்றனர். நமது அருமைத் தமிழ் நாடு செய்த, அருந்தவப் பயனுக, மதுரை முத்தமிழ்க் கலா வித்வரத்தின T. K. சகோதரர்களின் நாடக சபையும், தமிழ் நாடகக்கலை அரசர் நவாப் T. S. ராஜமாணிக் கம் அவர்களின் நாடக சபையும், தமிழ் நாடகக் கலையின் தத்து வத்தைத் தம்மாலியன்ற வரையில் நாட்டில் பரப்பி நற்புகழ் அடைந்து வருகின்றனர். அந்தப் பெருமையில் என்போன்ற வர்க்கும் பங்கு உண்டு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனி, தமிழ் மக்களாகிய நம்மவர் சொந்த ஆஸ்தியாகிய தமிழ் நாடகத்தில், அன்னிய பாஷைக்காரராகிய பலரும் புகுந்து பெரும் பொருள் திரட்டிச் சென்றூர்களே யன்றி, கலை அபிவிருத் திக்கான காரியம் இன்று வரையில், அன்னூர் எவரும் செய்தா ரில்லை. "தன்கையே தனக்குதவி" என்ற பழமொழிப்படி நந் தமிழ் நாடகக் கலையை, நமது தமிழ்ப்பிரமுகர்களே முன்னேற்ற முயன்றிருப்பது போற்றற்குரிய தாகும்.

இனி, உலக, சமுதாயத்திற்கு நல்வழி காட்ட நடிக்கப் பெறும், உத்தம நாடகத்துறையில் என் போன்ற பெண்மணி களும் இடம் பெற வேண்டுவது மிகவும் அவசியமாகும்.

பாடகத்தோடு ஆடகம் ஏறும்
நாடகத்திலும் ஊடும் மடந்தையர்
பீடுபெற்றிருந்தனர் என்பதற்கு,
மாதவி என்ற கோதையின் காதை,
போதிய சான்ருகும்.

சித்திரம், வைத்தியம், சோதிடம், சிற்பம், மந்திரம் முதலிய பிறவற்றிலும், பெண்டிர் பேரறிவு பெற்றிருந்திருக்கின்றனர். ஏந்திழைக்குரிய, இயற்கை நடிப்பை தாஞக வழங்கும் தன்மை பெண்மணிகளுக்கே உரித்தாகும். இதற்கு உதாரண மாக, நமது தமிழ்நாட்டு வீரப் பெண்மணிகளும், கவிதாரத் தின, காரிகைத், தாய்மாரும் செயலில் புரிந்த, அரிய பெரிய ஆற்றல்களே, எடுத்துக் கூறுவதற்கு ஆயிரம் நாவைப்படைத்த ஆதிசேடனுலும் முடியாததாகும். "நாடகத்தில் பெண்கள்" என்றதின் பொருள், தர்மார்த்த காம்ய மோக்ஷத்தை நாடு வோர் அகத்தில் பெண்கள் இல்லேயேல் பயனில்லை யென்பதும் ஒரு சிறந்த பொருளாகும்.

இனி நமது தமிழ் நாட்டில் இயங்கும் எந்தக்காரியங்களுக் கும், இலக்குமி, சரஸ்வதி, என்ற அதி தேவதைகளின் அம்ச மாகிய பராசக்தியே, போதிய சக்தியளிக்க வேண்டியிருப் பதை யாரும் மறுக்க முடியாது. இதைப்பற்றி, நான் அதிக மாகக் கூறுவதைவிட இன்றிரவு T. K. சகோதரர்களின் சபை யார் நடிக்கப்புகும், தமிழ் மூதாட்டி, ஔவையாரின் சரிதை யைக் காணுவதே போதிய சான்ருகும். ஆகவே கலேநுட்பமும், கதாசார உண்மையும், இயற்கை உணர்ச்சியும் கொண்டு, நடிக்கப்போகும் வருங்கால நாடகங்களில் ஆண்களோடு பெண் களும் நடித்து நற்புகழ் பெறுமாறு, இம்மகாநாடு சிறந்த வழி காட்டவேண்டுமெனப் பிரார்த்தனே செய்து கொண்டு என் சிற் றுரையை முடிக்கின்றேன்.

அமிழ்தினு மினிய தமிழ் நாடகக்கலே வாழ்க! வாழ்க!!



ஓம்

நாடகக் கலை வாழ்க !!!

ஆடலுக்கும், பாடலுக்கும் ஆக்கமளித்து
அபிநயக் கலைக்கோர் உயர்வளித்து
நாடகத்தில் திறம்பட அதைநுழைத்து
நடிப்புக்கும், பேச்சுக்கும் இடமளித்து

**கலைதனை வளர்க்கும் நிலைபெறும் அரிய**

# காரைக்குடி

## ஸ்ரீ ராமபால கான விநோத

## சபையாரின்

உன்னத நாடகங்களைக் கண்டு மகிழுங்கள்,

—: முகாம் :—

**முனிசிபல் பப்ளிக் ஹால், திருச்சி.**

## எமது நாடகங்கள்

1. பக்த சாருகதாசர்
2. தாகசாந்தி
3. திருமழிசை ஆழ்வார்
4. எதிர்பார்த்தது
5. குடும்பவாழ்க்கை
6. மோஹினி லீலா

8. வினையின் விளைவு
8. ஏகம்பவாணன்
9. பக்த ஜீவா
10. பகவான் புத்தர்
11. புகழேந்திப் புலவர்
12. ஸெயிண்ட் பிலோமினு

புரோப்ரைட்டர்:-

**வைரம், O. A. AR.**

**அருணசலம் செட்டியார்**

# நாடகமும் சினிமாவும்

நகைச்சுவை மன்னன்

(திரு என். எஸ். கிருஷ்ணன்)

சொற்பொழிவின் சுருக்கம்



தலைவரவர்களே! பெரியோர்களே!! அன்பர்களே!!!

எல்லோரும் சொல்லுகிறார்கள், நாடகக்கலை எங்கேயோ மறைந்து போய் விட்டது; அது இருந்த இடத்தையே காணோம்; முன்பு உச்சாணிக் கொப்பில் இருந்தது, இப்பொழுது பாதாளத்தில் விழுந்து விட்டது என்று.

இந்தப் பேச்சுக்களெல்லாம் வெறும் பொய். உண்மை கலவாத பொய். நாடகக்கலை எங்கும் போய்விட வில்லை. அது முழுக்க முழுக்க நோய் நொடி ஒன்று மில்லாமல் உயிரோடு இருக்கிறது; வளர்ந்து கொண்டும் வருகிறது.

"ஆஹா! அந்தக் காலத்தைப் போல் வருமா! முந்தி அப்படி யெல்லா மிருந்தது, இப்படி யெல்லாமிருந்தது" என்று வீண் புகழ்ச்சி செய்வது உளுத்துப் போன பழைய போக்கு.

நான் சொல்லுகிறேன், பண்டைக்காலத்தில் நாடகக்கலை மாட்டுவண்டி வேகத்தில் இருந்து வந்தது. இப்போது அது விமான வேகத்தில் இருந்து வருகிறது. மாட்டுவண்டி வேகத்திலிருந்து திடீரென்று விமானவேகம் வந்துவிட வில்லை. படிப் படியாகத்தான் வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது.

காளைமாடு பூட்டிய கட்டை வண்டி வேகத்தில் 'தெருக் கூத்து' களும், சைக்கிள் முதலியவற்றின் வேகத்தில் 'ஸ்பெஷல் நாடகங்களும்' மோட்டார் வேகத்தில் முறைப்படி தொழில் நடத்தும் கம்பெனியாரின் நாடகங்களும் முன்னேறித்தான் வந்திருக்கின்றது. அதிலும் நவாப் இராஜமாணிக்கம் அவர்களும் டி. கே. எஸ். சகோதரர்களும் நான் முன்குறித்த விமான வேகத் துக்கே வந்து விட்டார்களென்று கூறலாம்.

நிலைமை இப்படியிருக்கும் போது கொஞ்சம் கூட அஞ்சா மல் சினிமாவந்து நாடகத்தைக் கொன்று விட்டதென்று பழி போடுவது ஞாயமா? நீங்களே சொல்லுங்கள்! இது மிகவும் அபாண்டமான பொய்ப்பழி.

உண்மை யென்ன தெரியுமா? சினிமா வந்ததால் நாடகம் ரொம்பத்தூரம் முன்னேறியிருக்கிறது; ஆணித்தரமாகச் சொல்லு கிறேன். திடீர் திடீரென்று விளக்குகளை அணைப்பதும். காட்சி களை மாற்றுவதும், நடிகர்களை மாற்றுவதும், அந்தரத்தில் செல் வதும் இத்யாதி...........இத்யாதி தந்திரக் காட்சிகளெல்லாம் சினிமாவிலிருந்து தான் திருடப்பட்டது. நானும் பாய்ஸ் கம் பெனி நடிகன் தான். சினிமா வருவதற்கு முன் இந்தத் தந்திர வேலைப்பாடுகளெல்லாம் நாடகத்தில் கிடையாதென்பது எனக்கு

நன்ருய்த் தெரியும். நாடகமும் சினிமாவும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் தான். இரண்டு பேருக்கும் நல்ல வலு விருக்கிறது. ஒருவரை யொருவர் கொல்ல முடியாது. நடிப்பு இருவருக்கும் பொதுச் சொத்து. இதை இருவரில் எவர் வேண்டுமானலும் வாரியெடுத்துக் கொள்ளலாம். அவரவர் திறமையைப் பொறுத்த விஷயம். இது எடுக்க எடுக்கக் குறையாத சொத்து. இதில் சண்டை யென்ன சச்சரவென்ன?

நாடகமும் சினிமாவும் ஒன்றுக் கொன்று பெருந்துணே. சினிமா, நாடகக்கலை வளர்ச்சிக்கு புதிய புதிய யோசனைகளை யும், தந்திரங்களையும், நுணுக்கங்களையும் கொடுத்து உதவுகிறது. அதேபோல் நாடகம் சினிமாத்துறைக்கு புதிய புதிய உயர்ந்த நடிகர்களை உற்பத்தி செய்து கொடுத்து வருகிறது. இரண்டுக் கும் இவ்வளவு நெருங்கிய உறவு இருக்கும் போது ஏன் இல் லாததை யெல்லாம் கற்பனை செய்து சினிமாவைத் திட்ட வேண்டும்?

நாடகக்கலை அபிவிருத்தியடைந்து விட்டதென்பது உண்மை யானல், இந்த மகாநாடு எதற்கு? என்று கேள்வி உண்டாகிற தல்லவா? இதெல்லாம் ஒரு விளம்பரந்தானே. என்னென் னவோ மகாநாடுகள் நடக்கின்றன. ஏன் நாங்கள் மட்டும் ஒரு மகாநாடு நடத்தக்கூடாது?

சரி, அது போகட்டும் ... ... ... ... நான் எடுத்துக் கொண்ட விஷயம் "நாடகமும் சினிமாவும்" என்பதல்லவா? ஆமாம் .... .... .... அதுதான் முன்பே சொல்லிவிட்டேனே. விரிவுரை வேண்டியதில்லை. நாடகமும் சினிமாவும் ஒன்று தான். ஒன்று உண்மை யுருவம், மற்ருென்று நிழல். இதில் எதுவும் சாகவில்லை. சாகப்போவது மில்லை.

இன்றிருக்கும் நிலையிலிருந்து நாடகக் கலை இன்னும் வளர வேண்டுமானல் நடிகர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நல்ல வாழ்க்கை வசதி வேண்டும்.

தன் வாழ்க்கை முழுதும் நாடகத் தொழிலில் உழைத்து விட்டு, கடைசியில் வயிற்றுச் சோற்றுக்கு வாடும்படியான நிலை

யில் நடிகர்கள் இருப்பார்களானல், நாடகக்கலை அபிவிருத்தி யடைய முடியாது.

நடிகனொருவன் ஒரு கம்பெனியிலிருந்து விலகும்போது குறைந்த பட்சம் நூறு ரூபாயாவது அவன் கைவசம் இருக்க வேண்டும். அதற்கென்று 'நடிகர் நிதி' யொன்று திரட்டிவைக்க வேண்டும். மாதம் முப்பது நாடகங்கள் நடத்தும், கம்பெனியார் கள் ஒரு நாடக வருவாயை இந்த நிதிக்குத் தந்தாலென்ன?

முன்பெல்லாம் நடிகர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு வந்தது. அதனல் நடிகர்களுக்கு உற்சாகம் அதிகரித்து வந்தது. இப்போது பரிசுகள் எல்லாம் கம்பெனி முதலாளிகளுக்கே கொடுக்கப்பட்டு வருகிறது. நான் உங்களைக் கேட்டுக்கோள் கிறேன் முதலாளிகளுக்குப் பரிசு கோடுக்காதீர்கள்; நன்ருக நடிக்கும் நடிகர்களுக்குப் பரிசில் வழங்கி ஊக்கமளியுங்கள். அப்புறம் பாருங்கள் நாடக அபிவிருத்தி, நடிப்பு அபிவிருத்தி எப்படி இருக்கிறதென்று?

அழிவு, அபிவிருத்தி எல்லாம் பொதுஜனங்களாகிய உங்கள் கையில் தானிருக்கிறது....முன்னும் அதிகம் பேசிவிட்டார்கள், எனக்குப் பின்னும் பலபேர் பேசப்போகிருர்கள். ஆதலால், நான் இன்னும் பேசிப் பொழுதுபோக்காமல் உட்கார்ந்து கொள்கிறேன். அனைவருக்கும் எனது வணக்கம்.

நடிப்புக்கலை ஓங்குக !



# இன்றைய நாடகம்

## திரு A. R. அருணாசலம்.

(ஸ்ரீராம பால கான விநோத சபா.)



அறிவிலும், ஆற்றலிலும், அன்பிலும் சிறந்த அவைத்தலைவரவர்களே, அன்புமிக்க பெரியோர்களே, தாய்மார்களே, சகோதர சகோதரிகளே வணக்கம்.

இப்பொழுது, இன்றைய ஆரம்பமாகிய தமிழ் நாடு நாடகக் கலை அபிவிருத்தி மகாநாட்டில், எங்களைக் கலந்துகொள்ளுமாறு மகாநாட்டுக் காரியதரிசி T. N. சிவதாணு அவர்களின் அழைப்பிற் கிணங்க 'இன்றைய நாடகம்' என்ற தலைப்பின்கீழ் எங்கள் காரைக்குடி ஸ்ரீராம பால கான விநோத சபாவின் முதலாளி வைரம். அருணாசலம் செட்டியாரவர்கள் பேசுவார்கள் என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால், தடுக்கமுடியாத சில காரணங்களினால் அவர்கள் இம்மகாநாட்டிற்கு வந்து கலந்துகொள்ள முடியவில்லை. ஆயினும், என்னை அவர்களின் பிரதிநிதியாக அனுப்பி, மகாநாட்டிற்குத் தன் நன்றியைத் தெரிவிக்குமாறும் இன்றைய நாடகத்தின் தற்கால நிலையைப்பற்றிச் சில கருத்துக்களை மகாநாட்டில் எடுத்துக்கூறுமாறும், என்னை அனுப்பியிருக்கிறார்கள். இம்மகாநாடு தமிழ் நாடக மண்டலத்தில் ஒழுங்கையும், உறுதியையும், ஒற்றுமையையும் உண்டாக்கும் ஓர்

உயர்ந்த ஸ்தாபனமாக விளங்க வேண்டுமென்பதே அவர்களுடைய பேரவா.

ஆகவே ஸ்ரீ ராம பால கான விநோத சபாவின் மானேஜர் என்ற முறையிலும் முதலாளி அவர்களின் பிரதிநிதி என்ற முறையிலும், இன்றைய நாடகம் என்ற தலைப்பின்கீழ் நான் பேச முன் வந்துள்ளேன். குற்றம் குறைகளிருப்பின் பொறுத்தருள வேண்டுகிறேன்.

நாடகக் கலையோ புனிதமானது. களைத்த சமூகத்திற்கு புத்துயிர் அளிக்க வல்லது தெய்வத் தன்மை வாய்ந்தது. எல்லாம் வல்ல எம்பெருமானே பொன்னம்பலத்தில்நடித்து சிருஷ்டி, ஸ்திதி சம்ஹாராதி, திரௌபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியங்களையும் நடத்திக்கொண்டு வருகின்றார் என வேதங்கள் விளக்கிக் கொண்டிருக்கின்றன. நமது புண்ணிய பூமியில் இந்த நாடகக் கலையானது மிக மிகப் புராதனமானது. வால்மீகியும் வியாசரும் சிருஷ்டித்த ராமாயண பாரத புராண நாடகங்கள் நமது நாட்டின் ஒவ்வொரு கிராமங்களின் மூலை முடுக்குகளிலும் புகுந்து மக்களின் மனதில் பக்தியைப் புகுத்தி விட்டது. மக்கள் பயன் பெறுவதற்காகவும், ஆனந்தமடைவதற்காகவும், பண்டைக் காலத்து அரசர்கள் ஒவ்வொரு ஆலயத் திருவிழாவிலும், அரண்மனைகளிலும் நாடகங்கள் நடைபெறும்படி செய்து நாடகக் கலையை வளர்த்து வந்தனர். தெய்வ பக்தியையோ, தேச பக்தியையோ ராஜபக்தியையோ பிரசாரம் செய்வதற்கு இந்த நாட்டில் இந்நாடகக் கலையே அரசர்களின் கை ஆயுதங்களாக அமைந்திருந்தது. நாட்டின் க்ஷேம லாபங்கள் அனைத்தும் நாடகக் கலையுடன் பிணைக்கப்பட்டிருந்தது என்று சொல்லுதல் மிகையாகாது. நம்முடைய தமிழ் மொழியில் நாடகத்திற்கென்றே தனிச்சிறப்பு ஒன்று உளது. மொழியும் இயல், இசை, நாடகம் என மூன்று விதமாக வகுக்கப்பட்டுள்ளது. இயலும் இசையும் தனித் தனியே வளரத்தக்கதா யிருப்பினும், அவற்றின் அழகு நாடகக் கலையில், அவைகள் சம்பந்தப்படும்பொழுதே வெளித் தோன்றும். சிதறுண்டு கிடக்கும் பழமொழிகளெல்லாம் என்ன? அவைகள் அனைத்தும் மொழியின் பழங்களல்லவா? நாடகக் கலையில் இயல்தமிழில் சிதறிவிழுந்த செதில்களல்லவா? பல வரு

ஷங்களாக தமிழ் சமுகம் அதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அதை வழக்கத்தில் வழங்கி வருகிறது. இந்த நாடகக் கலையில் தாம் தமிழ்ப் புலவர்கள் தங்கள் திறமையைக்கொண்டு உயர்ந்த சம்பாஷணைகளை ஆக்க முடியும். மற்ற இடங்களில் அது முடியாதென்றே கூறலாம். இசையும் அப்படியே. சங்கீத ஞானத்தோடு பொது மக்களின் உள்ளங்களையும் கவருமாறு பல சந்தங்களில் விரிந்து விளங்கிக்கொண்டிருக்கிறது.

இத்தகைய பெருமை வாய்ந்த நமது நாடகக் கலை நாளடைவில் கால பேதத்தால் மெலிந்துபொது மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டமுடியாத நிலையில் வந்து கொண்டிருந்தது. சிறப்புள்ள நாடகக் கலையானது குலத்தொழிலாக மாறியதே ஈனநிலைக்கு வந்ததின் காரணமாகும்.

ஆனல், தமிழ் நாட்டின் ஷேக்ஸ்பியராகிய ராவ் பகதூர் P. சம்பந்த முதலியார் போன்ற பிறவி நடிகர்களாகிய பல்லறிஞர் நாடகக் கலையின் வசையை இசையாக மாற்றினர். அன்று தொடங்கி நாடகக் கலைக்கு புத்துயிர் தோன்றி வளர்ந்து வருகிறது. சில வருடங்களுக்கு முன்பு காலஞ்சென்ற C. கன்னையா அவர்கள் இந்நாடகக் கலையை, பக்திக்கலைதான், முக்தியளிக்க வல்ல கலைதான், உயர்தரமாக நடித்தால் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் நாடகத்திற் சேர்ந்து சிறப்படைந்தது என்று சொல்லும்படியாக உலகத்தில் சென்ற விடமெல்லாம் சிறப்புவாங்கி நாடகக் கலையை வளர்ப்பதற்கு உலகத்திற்கு வழி காட்டியவர் என்ற விஷயம் உலகமறிந்ததே. அதை அனுசரித்து தற்பொழுது நாடக உலகத்தில் நாடக கேசரி, நாடக கலாநிதி, நாடக கலையரசு, நவாப் T. S. ராஜமாணிக்கம் அவர்கள் மதுரை ஸ்ரீ தேவி பால விநோத சங்கீத சபா என்ற ஒன்றினை நிறுவியும், முத்தமிழ் கலா வித்வ ரத்ன டி. கே. எஸ். சகோதரர்கள், மதுரை ஸ்ரீ பால ஷண்முகானந்த சபா என்ற ஒன்றினை நிறுவியும் இவை போன்ற பல சபாக்களை பல அறிஞர்கள் வளர்த்தும் தம் தம் உடல், பொருள், ஆவிகளைத் தத்தம்செய்து இதன் முன்னேற்றத்திற்கு உழைக்க முன் வந்திருக்கின்றனர்.

நிற்க, நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வாணிபமும், வட்டித் தொழிலும் செய்வதில் வல்லவர் என்ற உலக வழக்கு ஒரு

புறமிருக்க, இப்பொழுது எங்கள் சமுகத்தினர் எல்லாத் துறைகளிலும் இறங்க முன் வந்திருக்கின்றனர். அதில் இந்நாடகத் தொழிலில் வெற்றி பெறுவது, ஓர் ஆழ்ந்த கடலில் முத்தை எடுப்பதற்காக மூழ்கி எடுத்துக்கொண்டு வரும்படியான சிரமமுடையது. இருப்பினும் உண்மையாகக் கலையை வளர்க்க விரும்புகிறவர்கள், எப்படி முத்து எடுப்பவன் முத்துச் சிலாபத்தில் தன்னுடைய உயிரைக் கொடுத்தாவது முத்தை எடுக்க முன்வருவானோ அதுபோல் இந்நாடகக் கலையில் பல சிரமங்கள் இருப்பினும் சிரமத்தைக் கவனியாது முத்துப் போன்ற உயர்ந்த கீர்த்தியையும் அழியாப் புகழையும் இக்கலைக்குப் பெற பொதுமக்களால் வைரம் என்று புகழப்படும் வைரம் அருணுசலம் செட்டியாரவர்கள் ஸ்ரீ ராம பால கான விநோத சபா என்ற ஒன்றினை நிறுவி அதன் மூலம் கலைத்தொண்டாற்ற முன்வந்துள்ளார்கள். எங்களுடைய முக்கிய நோக்கம் கலை வளர்ச்சிக்கு உழைப்பதே தவிர பிறிதொன்றுமில்லை.

பழைய நாடகங்களிலிருந்த பற்பல குறைகள் நீக்கப்பெற்று பல திருத்தங்களோடு இன்றைய நாடகங்கள் நடைபெறுகின்றன. நமது நாட்டுப் பிறமொழிகளையோ, மேலை நாட்டுப் பிறமொழிகளையோ உற்று நோக்குவோமாயின் நாம் செல்ல வேண்டிய தூரம் அதிகம் இருக்கிறது என்று தெரியும். இந்நாள் கலைமகளாக விளங்குபவள் ஆங்கிலம் தான் என்று கூறலாம். ஷேக்ஸ்பியர் தான் அவர்களுடைய கம்பர். அந்த நாடகாசிரியரின் திறமையினல்தான் ஆங்கிலம் உலகத்தை யாள்கிறது. ஆங்கிலேயருக்கு வீரத்தையும்,வெற்றியையும் கொடுத்ததுஷேக்ஸ்பியரின் நாடகங்களே என்று கூறுதல் மிகையாகாது. இதை ஒவ்வொரு ஆங்கிலேயரும் அறிந்து அவரை ஒரு தெய்வமாகவே துதிக்கின்றனர். இன்றே இங்கிலாந்தில் பர்னுட்ஷா என்னும் நாடகாசிரியர் உளர். இவருடைய வார்த்தைக்கு உலகமே செவி சாய்க்கிறது. ஏன்? அவர் உள்ளதை உள்ளபடி உள்ளத்திற்கு எடுத்துக் காட்டக்கூடிய நாடகாசிரியர். ஆங்கிலக் கலாசாரம் நமது நாட்டில் வேரூன்றிவிட்டது. நமது கலாசரரத்துடன் ஆங்கிலக் கலாசாரமும் சேர்ந்துகொண்டிருக்கிறது.

ரவீந்திரநாத் தாகூர் என்னும் நாடக ஆசிரியர் வங்க நாடகத்தை கவிதை மயமாக ஆக்கிவிட்டார். ஹிந்தியோ, வெற்றியே

கர்ஜிக்கிறது. மராத்தி, குஜராத்தி, ஆந்திரம் முதலிய மொழிகள் முன்னேறுகின்றன. நாமும் முன்னேறவேண்டிய காலம் வந்து விட்டதல்லவா? அந்த உணர்ச்சியே இந்த மகாநாட்டிற்கு அஸ்திவாரமாகும். அருங்கலா விநோதர்களாகிய நீங்கள் அனைவரும் ஒன்றுகூடியிருக்கும் இந்நாள் நந்நாளானதால் நாடகக் கலை வளர்ச்சிக்கு அத்தியாவசியமாகிய சங்கம், பத்திரிகை, கல்லூரி புத்தக நிலையம் முதலியவைகள் தமிழ்நாட்டில் பரவ வழிகள் வகுக்கப்படவேண்டும். நாடகக்காரர்கள் என்றால் கூத்தாடிகள் என்ற கொடும் சொற்களும், தாழ்மையான எண்ணமும் ஒழிக்கப்படவேண்டும். அவர்களும் கலா வல்லவர்கள், திறமையா யாளர்கள், வழிகாட்டிகள், யாவராலும் மதிக்கப்படவேண்டியவர்கள் என்பதை நிலைநாட்டவேண்டும்.

**"வாழ்க நாடகக் கலை வாழ்க"**
**"வாழ்க நாடக வல்லுனர்கள் வாழ்க"**
**"வாழ்க வையத்து மக்களெல்லாம் வாழ்க" வாழ்கவே.**

# ஆமாம்! :: ::

:: தயாராகிவிட்டது.

## உங்களூர் தியேட்டருக்கு

விரைவில் வருகிறது.

## லியோ ::

## பிலிம்ஸாரின்

அற்புத தமிழ் பேசும் படம்

# ★ பூம்பாவை ★

T. பாலாஜி சிங்
டைரக்‌ஷனில்

நியூடோன்
ஸ்டுடியோவில்
தயாரானது

கதை: கம்பதாசன்

பாட்டு: மதுரை மாரியப்ப சுவாமிகள்

வசனம்:
சோமயாஜுலு

ஆனந்த நடனம்
ஆனந்தவைபவம்
S. நடராஜ் &
A. R. சகுந்தலா
பார்ட்டியின்

நடிகர்கள்.

K. R. ராமசாமி
K. சாரங்கபாணி
K. R. செல்லம்
U. R. ஜீவரத்தினம்
T. K. புஷ்பவல்லி

உயரிய டான்ஸ் மிகவும் விசேஷம்

N. S. கிருஷ்ணன் & T. A. மதுரம் ஜோடிகளின்
காமிக் ஓயாது சிரிக்கும் ஹாஸ்யக் கட்டம்.

விநியோகம்: கந்தன் & கோ, கோயமுத்தூர்.

# கலையின் நிலைமை

திரு சி. என். அண்ணாதுரை எம். ஏ.
('ஆசிரியர். 'திராவிட நாடு')



நாடக அபிமானிகளும், நாடகக் கலையிலே ஈடுபட்டுள்ள தோழர்களும், இசைவாணர்களும், கலாரசிகர்களும் நிரம்பியுள்ள இந்த மகாநாட்டிலே, எனக்குப் பேச ஒரு சந்தர்ப்பம் கிடைத்

ததுபற்றி மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நாடகக் கலையின் முன்னேற்றத்திற்காக இந்த மாநாடு நடைபெறுகிறது. காலை யிலே தலைவர் சர். சண்முகம் அவர்கள் சொற்பொழிவாற்றினார். வேறு பல அன்பர்களும் பேசினர். இயலை வளர்க்கவும், இசை யை வளர்க்கவும் அமைப்புகள் இருக்கின்றன. நாடகக்கலை வளர்ச்சிக்கான அமைப்பும் முயற்சியும் இல்லை. எனவே, எனது நண்பர் தோழர் சிவதாணு, இதற்கான ஓர் தனி மாநாட்டை, முதன்முறையாகக் கூட்டியதுபற்றி நான் அவரைப் பாராட்டுகிறேன்.

நாடகக்கலை முன்னேற்றத்திற்குப் பல காரியங்கள் நடை பெறவேண்டி இருக்கின்றன. முதலிலே, ஊருருக்குத் தியேட் டர் வசதிவேண்டும். இப்போது, எல்லாம் சினிமாக் கொட் டகைகளாகிவிட்டன. நாடகத்திற்கெனத் தனித் தியேட்டர்கள் இல்லை. திருச்சி நகரசபை ஒன்றில் மட்டுமே தனித் தியேட்டர் அமைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல, ஒவ்வொரு நகரசபை யும் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். சர்க்காரும், செல்வவான்களும், நாடகக்கலை அபிவிருத்திக்கு உதவி அளிக்க வேண்டும். இவைகளுக்காகப் பொது மக்கள் முயலவேண்டும்.

பொதுவாக, நாடகக்காரர் என்றால் முன்பெல்லாம் மதிப் புக் கிடையாது. நையாண்டி செய்வார்கள். பொதுமக்களுக்கும், நடிகர்களுக்கும் தொடர்பு இருப்பதில்லை. இப்பொழுது நடிகர் களிடம் நன்மதிப்பும், தொடர்பும் ஏற்பட்டிருக்கிறது. இத் தொடர்பு நீடிக்கவேண்டும், இதனால் தக்க பயனும் ஏற்பட வேண்டும்.

நாடகக் கலையின் மேன்மை பற்றியும், நடிகர்களின் சேவை பற்றியும் காலையிலே பலர் பேசினார்கள், உற்சாகத்தோடு. நான் ஒரு வாரத்திற்கு முன்பு கிராமத்திலே நடைபெற்ற நாடகம் காணச் சென்றேன். ஒரு நடிகத் தோழரைப் பாராட்டிப் பேசி னேன், அவருடைய நடிப்பு எனக்குப் பிடித்ததால். என் பாராட்டுதலுக்கு அவர் பதில் கூறும்போது சொன்னார், “என் னமோ, நாங்கள் நடிகராக இருக்கிறோம், சத்தியமாகச் சொல் கிறேன் எங்கள் பிள்ளைகளை நாங்கள் நடிகராக்கப் போவதில்லை” என்று. ஏன் ஒரு நடிகர் இவ்வாறு கூற வேண்டுமென்று நான்

யோசித்தேன். அவருடைய வேதனையான வாழ்வு அவரை அப்படிக் கூறச் செய்தது என்பதை உணர்ந்தேன். பெரும்பாலான நடிகர்களின், நாடகத் தொழிலாளரின் வாழ்க்கை இப்படித்தான் இருக்கிறது. இவ்வளவு வேதனையுள்ள வாழ்விலே, நடிகர்கள் இருந்துகொண்டிருந்தால் நாடகக்கலை எங்ஙனம் முன்னேறும்? முன்பு பேசிய என் நண்பர் N. S. கிருஷ்ணன் அவர்கள் இதைப்பற்றி அழகுறக் கூறினர். நாடகக்கலை அபிவிருத்தி அடைய வேண்டுமென்றால், நாடகக் கலையின் முக்கிய அம்சமாக விளங்கும் நடிகர்களுக்கு நல்ல சம்பளம், வாழ்க்கை வசதி, முதலியன கிடைக்க வேண்டும். இலாபப் பங்கீடும் தரப்படவேண்டும். இவைகளைச் செய்யப் பெரிய கம்பெனிகள் முன் வருமா, என்பது சந்தேகம். அவைகள் கலை அபிவிருத்தி என்றால், சீனுக்குமேல் சீன், கலர் விளக்குக்குமேல் கலர் விளக்கு அமைப்பது, என்ற முறையிலே வருமானத்தை மேலும் மேலும் நாடக இயந்திரத்திற்கே செலவிடுகிறார்கள். அந்த இயந்திரம் பிரமாண்டமாகி விடுகிறது. அதன் பசியை அடக்கவே அவர்கள் முயலுகிறார்கள். ஆகவே அவர்கள் நடிகர்களின், நாடகத் தொழிலாளரின் வாழ்க்கை அபிவிருத்திக்கான வழிவகை செய்ய முன்வருவதில்லை. அவர்களின் வரவு செலவுக் கணக்குப் புத்தகம், இத்தகைய கலை அபி விருத்திக்குத் தூண்டுவதில்லை. பங்குதாரர்கள் கொண்ட ஒரு லிமிடெட் கம்பெனி அமைக்கப்பட வேண்டும். அதிலே சீர்திருத்த நாடகங்கள் நடத்தப்பட வேண்டும். அதன் வருவாயை நாடகத் தொழிலாளருக்கு (போனசாக) இலாபப் பங்கீடாகத் தரப்பட வேண்டும். அப்போதுதான் திருப்தியான மனமுடைய நடிகர்கள் இருப்பார்கள், நடிப்பு நேர்த்தியாக இருக்கும், நாடகக் கலையும் வளரும். வேதனை நிரம்பிய வாழ்க்கையிலே உள்ள வித்வான் பாடுகிற காம்போதிகூட முகாரியாகத்தானே இருக்கும்! அதுபோலத்தான், நடிகருக்கும் நிம்மதி வேண்டும், வாழ்க்கையிலே. நிச்சயம்வேண்டும் தொழிலிலே. எத்தனையோ நல்ல நடிகர்கள், குரல் கெட்டுவிட்டதாலோ, கம்பெனிச் சட்ட திட்டங்களை மீறிவிட்டதாலோ, நடிகராக இருந்த நிலைபோய், நடுவீதிகளில் திண்டாடக் காண்கிறேன். பத்து வருடங்களுக்கு முன்பு பிரபல நடிகராக இருந்துவிட்டு, இன்று பிழைக்கும் வழியுமற்றுள்ள மாஜி நடிகர்களையும் பார்க்கிறேன். மீசையைத் தட

வியபடி, நானுந்தான் இராஜபார்ட்டாக இருந்தேன் என்று கூறிக்கொள்வதைவிட அவர்களுக்கு வேறோர் சுவை இல்லை. இப்படி நடிகர்களின் வாழ்வு நொடித்துப் போகிறதென்ருல், எப்படிப் படித்தவர்களும் பண்புள்ளவர்களும், நாடகத் தொழிலிலே ஈடுபடமுடியும். "என் மகனை நடிகனுக்க மாட்டேன்" என்று என் நடிகத்தோழரொருவர் கூறினுர் என்று சொன்னேனே, அதன் காரணம் இதுதான். ஆகவே, நாடகக்கலை அபிவிருத்தியிலே அக்கரை கொண்டவர்கள், முதலிலே, முக்கியமாகக் கவனிக்கவேண்டியது, நடிகர்களின் நாடகத் தொழிலாளரின் நலத்தைத்தான்—அது நடைபெற்ருல்தான் நாடகக்கலை முன்னேறும்.

சர்க்காரும் பொதுமக்களும், நாடகக் கலைக்கு உதவிசெய்ய வேண்டுமென்று நான் சொன்னேன். அந்த உதவியை நாடகக் கலையினர் பெறவேண்டுமென்ருல், அதற்கு ஈடாக அவர்கள் பயனுள்ள காரியத்தைச் செய்யவேண்டும். அப்போதுதான் அந்த உதவி கிடைக்கும். இன்று நடத்தப்படும் நாடகங்கள் பெரிதும் புராணங்கள். இவைகளைக் காண்பதால் மக்களுக்கு என்ன பயன் உண்டு? மூடப் பழக்க வழக்கங்கள் வளரத் தானே இந்த நாடகங்கள் பயன்படுகின்றன. அறிவு வளர்ச்சிக்கான நாடகங்களை நடத்தினுல், நான் முற்கூறியபடி, நாடகக் காரர்களை, நாமும், சர்க்காரும், செல்வவான்களும், ஆதரிக்க வேண்டியதுதான். ஆகவே, சமூக சீர்திருத்த நாடகங்களையே, பெரிதும் நாடகக்காரர்கள் நடத்தவேண்டும். அதுதான் கலை அபிவிருத்தி. இந்த உணர்ச்சி எங்கும் பரவியிருக்கிறது, நாடகக் கம்பெனிகாரர்களிடம் கூட. காலையிலே நான், நவாப் T. S. இராஜமாணிக்கம் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தேன். அவர் நடத்திவரும் "ஐயப்பன்" என்ற நாடகத்தைப்பற்றி அவர் குறிப்பிட்டுவிட்டு, "அதுபுராணமாக இருந்தபோதிலும், நான் அதிலே, எவ்வளவோ மாறுதல்கள் புகுத்தி, கூடுமானவரையில் சீர்திருத்தம் செய்திருக்கிறேன்" என்று சொன்ஞர். கூடுமான வரையிலே சீர்திருத்தம் செய்திருக்கிறேன், என்று என் நண்பர் நவாப் இராஜமாணிக்கம் கூறிடக் காரணம் என்ன? நாடு சீர் திருத்த நாடகங்களைக் காணவிரும்புகிறது, என்பதை அவர் உணர்ந்திருக்கிருர், அதற்கேற்றபடி நாடகக்கலையைத் திருத்தி

அமைக்க முயலுகிறார் என்பதுதான் அதன் பொருள். இந்த உணர்ச்சி பரவியே தீரும். கூடிய சீக்கிரத்தில் புராண நாடகங்களை நடத்தமுடியாத அளவு, மக்களிடையே, சீர்திருத்த ஆர்வம் பிறக்கத்தான் போகிறது. புராண நாடகங்களை நடக்கமுடியாதபடி செய்யமுடியும். அது சுலபம். பொது மக்கள் இனிச், சீர்திருத்த நாடகம் நடத்தினால் அதிக வருவாய் கிடைக்கவில்லை என்று கம்பெனிகள் சொல்வதற்கில்லாத முறையிலே, சீர்திருத்த நாடகங்களை ஆதரிக்கவேண்டுகிறேன். சர். சண்முகம் கூறினார், எந்தநாடகத்திலே பார்த்தாலும் நாரதர் வந்து வந்து போகிறார்! இத்தகைய புராண நாடகங்களைப் பார்க்கத்தான் பிடிக்கவில்லை. சீர்திருத்தக் கருத்துக்கொண்ட நாடகங்கள் ஆயிரக்கணக்கிலே தயாரிக்கலாம், என்று. சீர்திருத்த விஷயத்திலே மூன்று வகையினர். ஒரு சாரார், சீர்திருத்தமே கூடாது என்பவர்கள், இவர்கள் நமதுபூஜைக்குரியவர்கள்! இரண்டாவது சாரார், சீர்திருத்தம்வேண்டும, ஆனால் செய்ய முடியவில்லையே என்பார்கள், இவர்கள் நமது அனுதாபத்துக் குரியவர்கள், மூன்றாவது சாரார், சீர்திருத்தம்வேண்டும் ஆகவே அதைச் செய்யவேண்டும் என்பார்கள், இவர்கள் நம்மவர்கள். இந்த மாநாட்டிலே முதல்ரகம் இருக்கமுடியாது என்று நம்புகிறேன். ஒருவரிருவர் இருப்பினும், நாளையதினம் வேண்டுமானால், அந்தரங்கத்திலே இருப்பவராகக் காட்டிக்கொள்வார்களேயொழிய, இன்று இங்குள்ள உணர்ச்சியைக் கண்டுகொண்டிருக்கும் நேரத்திலே சீர்திருத்தம் வேண்டாம் என்று கூறமாட்டார்கள். சீர்திருத்த ஆர்வம் இன்று எங்கும் நிரம்ப இருக்கிறது. இதனை நாடகக்காரர்கள் உணரவேண்டும். மேலும் மேலும் புராண நாடகங்களை நடத்திவருவது நாட்டுக்குப் பயனளிக்காது. மூடப் பழக்கவழக்கங்களை ஒழிக்கவேண்டும் என்று சர். ஷண்முகம் கூறினார். எந்த மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்கவேண்டுமென்று, கலாரசிகர்கள் விரும்புவதாகக் கூறுகிறார்களோ, எந்த ஜாதி வித்தியாசத்தைப் போக்கவேண்டுமென்று கலாவாணர்கள் விரும்புவதாகச் சொல்கிறார்களோ, அந்த மூடப்பழக்கவழக்கமும் ஜாதிவித்தியாசமும் ஆகிய பல கேடுகள், புராண நாடகங்களால், மக்களிடை புகுத்தப்படுகின்றன. ஆகையினால்தான் அத்தகைய நாடகங்கள் கூடாது என்று கூறுகிறோம்.

இராமாயணம், பாரதம், பெரியபுராணம் போன்றவைகள் புளுகுகள்தான், என்றாலும் அவைகளிலே கலை இருக்கிறது, என்று கூறிவிட்டு, அவைகளைக் கொளுத்தினால், மூடப்பழக்க வழக்கங்களைப் போக்கடிக்க முடியாது என்று சர் சண்முகம் காலையிலே பேசினார். கலை விஷயமாக, எனக்கும் என்னைச்சார்ந்தவர்களுக்கும் உள்ள அபிப்பிராயத்திற்கும், தலைவர் சர் சண்முகம் அவர்களின் அபிப்பிராயத்திற்கும், பேதம் இருக்கிறது. இதுகுறித்து எனக்குச் சந்தேகம் இருந்தது. காலையிலே அவருடைய பேச்சைக்கேட்டபிறகு, அபிப்பிராய பேதமிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. இராமாயணம், பெரியபுராணம் ஆகியவைகள் புளுகுகள், அவை மக்களின் மனதைப் பாழ்செய்கின்றன, ஒரு இனத்தை ஒருஇனம் ஆதிக்கம் செய்ய வேலை செய்கின்றன, என்பதற்காக, அவைகளை மக்கள்வெறுக்க வேண்டும், கண்டிக்கவேண்டும், என்பதைக்காட்ட, ஒரு கண்டனக் குறியாகவே, அவைகளைக் கொளுத்த வேண்டுமென்று நாங்கள் கூறுகிறோமேயன்றி, அவைகளைக் கொளுத்திவிடுவதாலேயே மூடப்பழக்க வழக்கம் போய்விடும் என்று நாங்கள் சொன்னதில்லை, அவ்வளவு பைத்தியக்காரர்களல்ல நாங்கள். இப்புராணங்கள், ஒரு இனத்தின் உயர்வுக்கு ஆதரவாக இருக்கிறதென்பதற்காக, அவைகளை மக்கள் கண்டிக்கிறார்கள் என்பதைக் காட்டவே, தீயிலே போடச்சொல்கிறோம். யாரோ ஒருவன், ஒருபடை எடுப்பின்போது படிப்பகம் ஒன்றைக் கொளுத்தினான். அது போல இது, என்று சர் சண்முகம் கூறினார். அவரால் பயிற்றுவிக்கப்பட்ட நாங்கள் அத்தகைய ஈனத்தனமான காரியமாக இதனைக் கருதுவோமா என்று அவரைக்கேட்கிறேன். மற்றொன்று கூறுகிறேன், அவருக்கும் கலாரசிகருக்கும். கண்டனத்தின் அறிகுறியாக நாங்கள் மேற்படி ஏடுகளைத் தீயிலிடும்போது, நிறுத்தப்பா! 63-ம் பக்கத்திலே, அழகான ஒரு வர்ணனை இருக்கிறது, ஆற்றின் வருணனை, அதிலே அருமையான கலை இருக்கிறது" என்று கலாரசிகர்கள் கூறட்டும், அந்த ஏட்டைக் கிழித்தெடுத்துக் கொள்வோம். "93-ம் பக்கத்தைக் கொளுத்தாதே, அதிலே மக்களுடைய வஞ்சக எண்ணத்துக்கும் கானாறுக்கும் உவமை, அழகாகக் கூறப்பட்டிருக்கிறது, அது அபூர்வமானகலை" என்று கூறட்டும், அந்

தப் பகுதியைக் கொளுத்தாது விடுவோம், ஆபாசம் நிறைந்த அறிவுக்குப் பொருந்தாத, இனச்செருக்கை வளர்க்கிற மற்றப் பகுதிகளைக் கொளுத்துவோம், கலாரசிகர்கள் இதற்குச் சம்மதிக்கின்றனரா என்றுகேட்கிறேன். எந்தப்புராணத்திலும் மூடப் பழக்கவழக்கங்களை வளர்க்கும் பகுதிகளும் உள்ளன. அது போலவே கலையழகுள்ள பகுதியும் இருக்கின்றன என்று சர். சண்முகம் கூறினர். அவர்போன்ற பேரறிவாளர்களால், இந்தப் பாகுபாடு தெரிந்துகொள்ள முடியும். பாமரரால் முடியாது. இங்கோ 100-க்கு 90 பேருக்குமேல் தற்குறி. கலாரசிகர்கள் இப்புராண இதிகாசங்களினின்றும், கலையழகுப்பகுதிகளை எடுத்துத் தொகுத்து வெளியிடட்டும், நாங்கள் அதனைவரவேற்கிறோம். இக்காரியத்தைச் செய்ய இதுவே சரியான சந்தர்ப்பம். எனக்குங்கூட, நமது சண்முகம் கம்பெனியார் நடத்தும் புராண நாடகங்களிலே கூடச்சில ரசங்கள் தென்படுகின்றது. அவர்களின் கந்தலீலா நாடகத்திலே, திருத்தணிகைமலைக் காட்சி காட்டப்படுகிறது. கோயில் புரோகிதர், "இந்தப் பாழாப்போன சாமி கீழே இருக்கக்கூடாதா? மேலேபோய் உட்கார்ந்து கொண்டு என் உயிரை வாங்குகிறது" என்று கூறுகிறார் சலிப்போடு. இது சுயமரியாதைப் பிரசாரத்துக்காக அவர்கள் புகுத்தவில்லை. வெறும் நகைச்சுவைக்காகவோ, அல்லது கோயில் அர்ச்சகர்களின் சுபாவம் இப்படித்தான் இருக்குமென்று பொதுமக்கள் கருதுகிறார்கள் என்பதை விளக்கவோ இதனைப் புகுத்தியிருக்கிறார்கள். கந்தலீலா எனும் புராணநாடகத்திலே, எனக்குச் சுவைதரும்பாகம் இதுதான். இதுபோலவே தோழர் பகவதி, இராவணனாகவோ, இரணியனாகவோ, சூரபதுமனாகவோ, கம்சனாகவோ, நடிக்கும்போதெல்லாம், என்கண்களுக்கு ஒரு திராவிட வீரன்போலவே காணப்படுகிறார். பேச்சு, நடை, நடிப்பு, முடுக்கு முதலியன, அப்படித்தான் என்கண்களுக்குத் தெரிகிறது. சர். சண்முகமும் எப்படிப் புராணங்களிலும், சில நற்சுவையுள்ள பகுதியைக் காண்கிறாரோ அதுபோலவே நானும், புராண நாடகங்களிலும் சில சுவைகள் காண்கிறேன். ஆனால் நாடகத்தைக் காண்பது, நானும் சர். சண்முகமும் மட்டுந்தானா? மக்கள் காண்கின்றனர், அவர்களால் இப்பாகுபாட்டை உணர முடிகிறதா? ஆபாசக்கருத்துகளைக் கொள்ளாமல் இருக்கமுடிகிறதா? நமது முதலாளிசாயபு இருக்கிறார், அவர் இராமாயண

நாடகத்தைப் பார்த்தானதும், ராமா! ராமா! என்று பஜிக்கமாட்டார், அவருக்கு, அல்லாதான் தெய்வம், கொரானே வேதம். எனவே இராமாயண நாடகம் பார்ப்பதால், இராமனைத் தெய்வமென்று கொள்ளும், மனப்பான்மை அவருக்கு ஏற்படாது. நமது டேவிட், கந்தலீலா பார்த்தானதும், கந்தனே கடவுள் என்று கூறமாட்டார். அவருக்கும் கடவுள்வேறு, மதம்வேறு. எனவே முஸ்லீமோ கிருஸ்தவரோ, இப்புராண நாடகங்களைக் கண்டால் அவ்வளவுகேடு இல்லை, நம்மவர்கள் நிலை அப்படியல்ல. புராணங்களிலே வரும் கடவுள்கள் எல்லாம் தங்கள் கடவுள்கள் என்றல்லவா கருதிக்கொண்டு, அந்த நாடகங்களைப் பார்க்கின்றனர். இதனால், அவர்கள் மனந்தானே பாழாகிறது. ஆகவேதான் இப்புராணநாடகம் சமூக அபிவிருத்திக்குக் கேடுசெய்கிறது என்று கூறுகிறோம். சிலப்பதிகாரத்தின் சுவையை உணர, அந்தநூல் தோன்றிய காலமாகிய 2000 ஆண்டுகளுக்கு முன் பிறந்த கண்ணையும் மனதையும், கொண்டு பார்க்கவேண்டும் என்று சர். சண்முகம் கூறினர். அத்தகைய கண்ணையும் மனதையும் பெறநான் அசக்தனாக இருக்கிறேன். இனி இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு உலகம் எப்படி இருக்கும் என்ற சிந்தனையும், கண்ணும் கொள்ளவேண்டு மென்றால் எனக்கு விருப்பமிருக்குமே யொழிய, 2000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப்பற்றிய அக்கரை இராது. அந்தக் கண்ணையும் மனதையும் கொண்டு பார்த்துச் சிலப்பதிகார முறைப்படி, இக்காலத்திலே, கண்ணகியை விட்டு மாதவிமனைக்குச் சென்றால், கண்ணகி கோவிலனைச் சும்மாவிட்டாலும், மாதவியைச் சும்மாவிடமாட்டாள். பழங்காலக் கதையின் கருத்துகள் பல இன்று ஏற்றவையாகா என்பதை எடுத்துக்காட்டவே அதனைக்கூறுகிறேன். இந்த நிலைக்குத் தமிழ்நாட்டிலே இன்று ஆயிரக்கணக்கான வாலிபர்கள் வந்திருக்கிறார்கள் என்பதைச் சர். சண்முகம் அவர்கட்குக்கூற விரும்புகிறேன். சீர்திருத்த விஷயமாக நான்கொண்டுள்ள அபிப்பிராயம், சர். சண்முகம் அவர்கள் முன்னுளில் செய்த சொற்பொழிவுகளைக் கேட்டதால் ஏற்பட்டவை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பொதுவாகவே கலை விஷயமாக நாங்கள் கொண்டுள்ள கருத்து இதுதான், கலை மக்கள் உள்ளத்திற்குக்களிப்பூட்டும் கருவியாக இருப்பின், அதனிடம் எங்களுக்கு ஆட்சேபனை கிடையாது. ஆனல், கலை ஒரு

இனம் மற்றோர் இனத்தை அடக்கியாள உபயோகமாகும் வலை யாக இருக்கிறது, எனவே அந்தவலையின் பின்னால் எத்தனை பெரிய சக்தி இருந்தாலும், ஒன்று வலையைச் சின்னாபின்னப் படுத்துவது, அல்லது அந்த முயற்சியிலே, நாங்கள் சின்னாபின் னமானாலும் கவலையில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம், இதற்காகத் தங்களை அர்ப்பணம் செய்ய ஆயிரக்கணக்கான வாலிபர்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள், என்பதைத் தலைவருக்குத் தெரிவிக்கிறேன். எலும்பு பெண்ணுருவான அருட் கதைகளைப்பற்றிப் பாடியும் ஆடியும் வந்ததுபோதும், நமது பெண்மக்கள் எலும்புருவானது தவிர பலன் எதுவுமில்லை. இனிப் பெண்கள் எலும்புருவாகும் பரிதாப வாழ்வைச் சித்தரிக்கும் நாடகங்களை நடத்துங்கள். கண்ணைப் பெயர்த்தெடுத்து அப்பிய கண்ணப்பர் கதையை ஆடியதுபோதும், இனிக்கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்பவன், ஊரிலே கொள்ளையடிக்கும் விஷ யத்தை விளக்கும் நாடகத்தை நடத்திக்காட்டுங்கள். வாழ்க்கை யைச் சித்தரித்துக் காட்டுங்கள். ஏழையின் கண்ணீர், விதவை யின் துயரம், மதத்தாகரின் மமதை ஆகியவற்றை விளக்கும் அறிவுவளர்ச்சி நாடகங்களை நடத்துங்கள்.

சர். சண்முகம் அவர்கள் காலையிலே கூறிய சில கருத்து களை மறுத்து நான்பேசுவதால், நான் அவரைத்தாக்கிப் பேசு கிறேன் என்று நீங்கள் யாரும் எண்ணிவிட வேண்டாம் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர் அப்படிக் கருதமாட் டார் ஆகையால்; அவரைக் கேட்டுக் கொள்ளவில்லை.

நாடகக்காரருக்கு, நாட்டுமக்களிடையே ஏற்படும் பல திறப்பட்ட மாறுபாடான கருத்துகளால் தொல்லை பல உண்டா வது எனக்குத் தெரியும். சில நாடகங்களிலே, கதாநாயகன் வேடதாரி காங்கிரஸ் அபிமானியாகவும், ஆர்மோனியக்காரர் ஜஸ்டிஸ்காரராகவும், கதாநாயகி சுயமரியாதை உணர்ச்சி கொண் டவராகவும் இருப்பதுண்டு. அந்த நாடகங்களிலே சச்சரவு சக ஜம். சில ஊர்களிலே, காங்கிரஸ் பாட்டுப்பாடச் சொல்வார் கள், சில இடங்களிலே சுயமரியாதைப் பாடல்களைப் பாடச் சொல்வார்கள். இத்தகைய தொல்லை, பெரிய கம்பெனிகளுக்கு ஏற்படுவதில்லை. காட்சிமேல் காட்சி விதவிதமாக மனமள

வென்று வந்துகொண்டே இருப்பதால், பொதுமக்களுக்கு, இந்தத் தொல்லே கொடுக்கநேரம் இருப்பதில்லே. இந்தப்பாது காப்பினுலேயே, பெரிய கம்பெனிகள் இத்தகைய தொல்லே யைப் பெறுவதில்லே. பெரும்பாலான நாடகக்காரருக்கு நான் சொன்ன தொல்லே ஏற்படுவதுண்டு. நாட்டு மக்களின் மனப்போக்கு எப்படி மாறுகிறது என்பதை நடிகத் தோழர்கள் உணர்ந்தால் தான் இவ்விதத் தொல்லலகளின்றித் தொழில் நடத்த முடியும். பொதுமக்களும் இனி, நாடு சீர்திருத்த நாடகங்கவளயே காண விரும்புகிறது, என்பதை நாடகக்காரர்கள் உணரும்படி செய்யவேண்டும், செய்ய ஆரம்பிப்பார்கள் என்று நம்புகிறேன். விரைவிலே, எங்கும் சீர்திருத்த நாடகங்கள் நடத்தும் ஆர்வம் வளர்ந்து, அதன்மூலம் நாடகக்கலேயும் வளரும் என்று நம்புகிறேன். சீர்திருத்தக் கருத்துகளேப் புராண நாடகங்களில்கூடச் சிலர் புகுத்திக் காட்டுகிருர்கள், தமக்கிருக்கும் சீர்திருத்த ஆர்வத்தினுல். இந்தத்துறையிலே, நமது நண்பர் N. S. கிருஷ்ணன் அவர்கள் திறமையாக வேலேசெய்து வருகிருர். ஒரு படத்தில்-மாணிக்கவாசகர்-என்று நினேக்கிறேன். அவர் ஒரு கணக்கப் பிள்ளேயாக நடிக்கிருர். கையிலேவைத்துக் கொண்டிருக்கும் பேனுவைக்காட்டி ஒருவரிடம் கூறுகிருர், "ஏய்! கையிலே இருப்பது என்ன தெரியுமா? பேனு! தர்ப்பையில்லே!!" என்று கூறுகிருர். எவ்வளவு ஆழ்ந்த கருத்துப்பாருங்கள். கலாவாணர்கள் கூடிய இந்த மன்றத்திலே பேச, எனக்கோர் சந்தர்ப்பங் கிடைத்ததுபற்றி என்மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு அளித்த மகாநாட்டு நிர்வாகிகளுக்கு என்வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

# நடிகர் வாழ்க்கை

திரு K. D. சந்தானம்.
(ஸ்ரீ மங்கள பால கான சபா)



மகாநாட்டின் தலைவர் அவர்களுக்கும், பிரதிநிதிகளாக விஜயம் செய்திருக்கும் நண்பர்களுக்கும், இங்கு குழுமியுள்ள பெரியோர்களுக்கும் எனது தாழ்மையான வணக்கம்.

பெரியோர்களே! தாய்மார்களே!

நம் தமிழ் நாட்டின் தனிப்பெரும் செல்வங்களில் ஒன்ருக இருந்து, இடைக்காலத்தில் மிகவும் சீர்கேடுற்ற தமிழ் நாடகக் கலைக்கு, இன்று முதல் புது யுகம் ஆரம்பமாகிறது. நாடகக் கலையானது எப்படியோ இதுவரை தன்னை மறைத்திருந்த பழி பாவங்களாகிய மேகத் திரைகளையகற்றி, புதிய பொலிவுடன் வெளித்தோன்றி, தமிழ் நாட்டின் அறிஞர்களையும், உயர்குடிப் பிறப்பாளர்களையும் தனது புதுமையைக் கண்டு பூரிக்கும்படி செய்துவிட்டது என்பதற்கு, இதோ, இந்த மகாநாட்டிற்குத் தலைமை வகித்திருக்கும் திருவாளர் ஸர். ஆர். கே. ஷண்முகம்

செட்டியார் அவர்களே போதிய சான்ருகும். இம்மகா நாட்டிற் கலந்துகொள்ளவேண்டும் என்ற ஆவலினுல், தம்முடைய சொந்த அலுவல்களேயும், பிரயாணச் சிரமத்தையும் கருதாமல் பல ஊர்களிலிருந்தும் விஜயம் செய்திருக்கும் பிரதிநிதிகளேயும், அவ்வாறே, மகாநாட்டைச் சிறப்பிக்கும் பொருட்டு விஜயம் செய்திருக்கும் உங்களேயும் ஒருங்கே காணும்போது, இனிமேல் உண்மையிலேயே, நாடகக்கலே அவசியம் அபிவிருத்தியடையும் என்ற திடநம்பிக்கை ஏற்படுகிறது.

இந்த மகாநாட்டைக் கூட்டிவைப்பதில், அரிய முயற்சியும், தளராத ஊக்கமும் கொண்டு, நம் அனைவரையும் ஏக காலத்தில் ஒரே இடத்தில் சந்திக்கும்படி செய்த, மதுரை ஸ்ரீ பால ஷண்முகானந்த சபையின் உரிமையாளர்களாகிய, "முத்தமிழ் கலா வித்வ ரத்ன" டி. கே. எஸ். சகோதரர்களின் சீரிய நோக்கம் பாராட்டத்தக்கதாகும்.

பெரியோர்களே! இன்றைய கூட்டத்தில் 'நடிகரின் வாழ்க்கை' என்பதைப்பற்றி நான் பேசவேண்டுமென்பது நமது தலேவர் அவர்களின் விருப்பம். நடிகரின் வாழ்க்கையைப் பற்றிக் கூறவேண்டுமாயின், என்னுடைய சொற்ப அனுபவத்தைக் கொண்டு கூறுவது மிகவும் கடினமென்றே கருதுகிறேன். எனினும், தலேவர் அவர்களின் விருப்பத்திற் கிணங்க முக்கியமான இரண்டொரு விஷயங்களே மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

தற்கால நடிகரின் வாழ்க்கையைக் குறித்து சிந்தனே செய்யும்பொழுது, மகிழ்ச்சிக்குரியதும், வருந்தத்தக்கதுமான பல விஷயங்கள் நினேவிற்கு வருகின்றன. நமது நாட்டில், இலக்கியம், காவியம் இவைகளேப் போலவே நாடகமும் மனித வளர்ச்சிக்கு அவசியமாகிவிட்டது. ஊன்றிக் கவனிப்போமாயின், நாடகம், ஒரு வகையில் இலக்கியத்தைவிட அதிக பிரயோசனமுள்ளதாகவே கருதப்படும். ஏனெனில், நூலறிவும், நுண்ணறிவும் வாய்க்கப்பெற்ற ஒரு சிலர்தான் இலக்கிய ரஸனேயில் ஈடுபட்டு இன்பந்துய்க்க முடியும். நாடகமோ, எழுத்தறிவிலார்க்கும், ஏனேயோருக்கும், ஒருங்கே இன்பம் பயக்கவல்லது.

"ஆயிரம் மேடைப் பிரசங்கங்களினால் ஏற்படும் பலனை, ஒரு நாளிரவு நாடகத்தின் மூலம் மக்களிடமிருந்து எதிர்பார்க்கலாம்" என்பது அறிஞர்களால் ஒப்பமுடிந்த உண்மை.

இத்தகைய, அரிய, சமூகத்திற்கு அவஸியமான நாடகக் கலைக்கு ஜீவநாடியாக உள்ளது 'நடிப்பு.' அந்த நடிப்புக் கலையின் உச்ச ஸ்தானத்தை அடைவதையே வாழ்க்கையின் லக்ஷிய மாகக் கொண்டு சிறந்த தொண்டு புரியும் கலைஞனே 'நடிகன்.'

நடிகனைப்பற்றி இதுவரை சமூகம் என்ன நினைத்திருந்த போதிலும் சரி, நண்பர்களே! நான் சொல்லுகிறேன், நடிகன் என்றால், வாசித்து முடிந்ததும் குப்பையில் எறியும் 'செய்திதாள்' அல்ல; வாழ்விற்கு முரண்பாடான விஷயங்களைக் கூறும் 'ஏட்டுச் சுரைக்காய்' அல்ல; நடிகன் என்றால், 'சமுதாயப் புரட்சியாளன்,' தன்னுடைய உணர்ச்சி நிறைந்த நடிப்பினாலும், ஜீவன் மிகுந்த வாக்கு வன்மையினாலும், மனித சமூகத்தின் சீர் கேடுகளைச் சித்தரித்துக் காட்டி, செவ்விய வழியில் திருத்தச் செய்யும் கர்ம வீரன்—கலை, கற்பனையாகிய இரு மூச்சுகளைக் கொண்டு பிராணாயாமம் செய்து, சமுதாயமென்னும் உடலின் மூலாதாரத்தில் ஒடுங்கிக் கிடக்கும் "அறிவு" ஆகிய குண்டலி சக்தியைப் படம் எடுத்தாடச் செய்யும் ஆத்ம யோகி. நானும் ஒரு நடிகனாதல்பற்றி இவ்வாறு பெருமைபடக் கூறுகிறேனே என்று நீங்கள் எண்ணுவீர்களாயின், நான் அதற்கு ஒரு சிறிதும் பொறுப்பாளி யல்ல. நடிகரைப்பற்றிய இந்த அபிப்பிராயம் என்னுடையதல்ல; இன்று உலக மக்களால் யார் யார் அறிவாளிகளாகக் கருதப்படுகிறார்களோ, அவர்களுடையது. பற்பல சமயங்களில், அவர்கள் எழுத்தின் மூலமாகவும், பிரசங்க மூலமாகவும் வெளியிடப்பட்டவை.

நடிகன், மற்றவகைக் கலைஞனுக்கு எவ்விதத்திலும் தாழ்ந்தவனல்ல, மனித சமூகத்தில் நடிகனுக்கும் தனி மதிப்பையடைவதற்கு அருகதை உண்டு. கவிதா ரத்தினங்கள், இலக்கிய கர்த்தர்கள், ஓவியப் புலவர்கள், கல்லையும், செம்பையும் கவி சொல்லச் செய்யும் சிற்பிகள், இன்னிசை முழக்கும் இசைவாணர்கள்—இவர்கள் அத்தனை பேருடனும் சமமாகக் கலந்து உறவாடி, நாட்டின் அறிவு வளர்ச்சிக்கும், நாகரீகப் பண்பிற்கும் உதவி புரியும் ஆற்றல் நடிகனுக்கும் இருக்கிறது.

கலையைத் தொழிலாகக் கொண்டுள்ள நடிகன், பிரதிதின மும் தியாக வேள்வி செய்கிறுன்.

ஆனல் அவனுடைய தியாகம் குடத்திலிட்ட விளக்காக இருக்கிறது. அறிவு உலகில் சஞ்சரிக்கும் ஒரு சிலரைத் தவிர, அவனுடைய தியாகத்தின் மேன்மையை உணரும் சக்தி அநேக ரிடத்திலில்லை. ஒரு விஷயத்தை எடுத்துக் கொள்வோம்—நீங்கள் நாடகம் பார்க்க வருகிறீர்கள். எதன் பொருட்டு? வாழ்க்கைத் தொல்லையை மறந்து, சிலமணி நேரமாவது ஆனந்தமாகப் பொழுது போக்குவதற்கு—பகல் முழுதும் இயந்திரத்தோடு போராடி அலுத்து சலித்த மனிதன், சிறிது நேரமாவது தன் னுணர்வு பெற்று இன்பம் துய்ப்பதற்கு. அவ்வாறு ஆவலுடன் வரும் உங்களை மகிழ்விக்கவேண்டிய பொறுப்பும், கடமையும் நடிகனுடையது. நீங்கள் நாடக சாலையில் நிறைந்துவிட்டீர்கள் என்பதை உங்களுடைய ஆரவாரத்தின் மூலம் நடிகன் அறிந்து கொண்டதும், அன்றைய வாழ்க்கையில் அவனுக்கு ஏற்பட்ட சிரமத்தையோ துக்கத்தையோ சிறிதும் பொருட்படுத்தாமல், உங்களை மகிழ்விக்கவேண்டும் என்ற ஆர்வத்தினல் உந்தப்பட்டு மேடைக்கு வந்துவிடுகிறுன். தன்னையே அறவே மறந்து, தான் நடிக்கவேண்டிய கதா பாத்திரத்திற் கேற்றவாறு தன்னை மாற் றிக் கொள்வதோடு, நாடகம் பார்க்கும் உங்கள் அனைவருடைய கவனத்தையும் தன்பால் திருப்பிவிடுகிறுன். நீங்கள் எதை உத் தேசித்து வந்தீர்களோ, அந்த ஆனந்தத்தை உங்களுக்கு அளிப் பதில் முயற்சி எடுத்துக்கொள்வதுடன், நாடகமூலமாக, வாழ்க் கையின் ரகஸியத்தையும் வெளிப்படையாக உங்களுக்குச் சித் தரித்துக் காட்டுகிறுன். இதுதான் ஒரு சிறந்த நடிகனின் லக்ஷிய மாக இருக்கமுடியும். அவ்வாறின்றி, தன்னுடைய சிரம துக்க தாபங்களைப் பெரிதாக எண்ணி, நடிக்கும் உணர்வை யிழந்து, கடமைக்காக, மேடைமேல் வந்து, பதுமைபோல் நிற்கும் நடிக ஞல் உங்களை மகிழ்விக்க இயலுமா? தன்னை மறந்து, பிறரை ஆனந்தப்படுத்துவதிலே லயித்துப் போகும் நடிகனுடைய இந்த லக்ஷியத்தைத் தான், நான் முன்பு தியாகம் என்று கூறினேன். இத்தகைய சிறந்த தொண்டு புரிந்துவரும் நடிகனின் தற்கால வாழ்வின் நிலமை குறிப்பிடக்கூடிய அளவிற்குத் திருப்திகரமாக இல்லை யென்பது நிச்சயம். அதற்குக் காரணம் பல உண்டு.

நாடகம் இன்று புதுமலர்ச்சியுடன் புகழ்பெற்று வருகிறது என்ருலும், இந்த யுத்தத்தின் காரணமாக ஒருபுறம் பாதிக்கப்படுகிறதென்பதை ஒருவரும் மறக்க முடியாது. வாழ்வின் தேவைக்குரிய பொருள்களும், நாடகத்தை அழகுபெற நடத்துவதற்கு வேண்டிய சாமான்களும், யுத்தத்தினுல் ஒன்றுக்குப் பத்தாக விலையேறிவிட்டது. ஆனல், நாடகம் பார்ப்பதற்காக, ரஸிகர்களாகிய நீங்கள் கொடுக்கும் பிரவேசக் கட்டணம் அன்றும் இன்றும் ஒன்றே தான். ஆகவே, நடிகர்களின் வாழ்க்கைச் செலவை சரிசெய்யவேண்டி, வருமானக் குறைவை உத்தேசித்து அவர்களுடைய வேலை நாட்களை அதிகப்படுத்தவேண்டிய அவஸியமேற்பட்டிருக்கிறது. அதாவது வாரத்திற்கு மூன்று நாடகங்கள் நடத்தியது போக, குறைந்தபக்ஷம் மாதத்திற்கு 25 நாடகங்களாவது நடத்தவேண்டிய நிலைமை உண்டாய்விட்டது. இதனை நன்கு ஆலோசித்து, ரஸிகர்களாகிய நீங்கள் நாடகத்திற்கு பூரண ஆதரவையும் அளிக்கவேண்டியது உங்களுடைய கடமையாகும். நீங்கள் நடிகர்களுக்கு அளிக்கும், ஆதரவும், உற்சாகமும் சமூகத்தின் மேம்பாட்டிற்கு உதவிபுரிவதாகும். தமிழ் நாட்டின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும், நாடகக்கலையை மீண்டும் மறைந்துபோகாமல் காப்பாற்றும் பெருமை உங்களுடையதாகும்.

**நடிகர்களுக்கு ஒரு வார்த்தை:—**

இந்த சந்தர்ப்பத்திலேயே என்னுடைய சகோதர நடிகர்களுக்கும் ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். ஒரு காலத்தில் நாடகத்தின்மீது பொது ஜனங்களுக்கு வெறுப்பு உண்டாவதற்கு, நடிகர்களுடைய பழக்க வழக்கங்களே காரணமாக இருந்தது என்பதை நாம் அதற்குள் மறந்துவிடவில்லை. ஆனல் இன்றைய நிலைமை 100-க்கு 100 மாறுதலடைந்து விட்டது. பொது ஜனங்களிடத்தில், நடிகர்களுக்கு நல்ல கௌரவம் இருக்கிறது. இதனை இன்னம் அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும்—ஸ்திரமாக்கிக் கொள்ளவேண்டும். நடிகர்கள், கல்வி, பரிசுத்தம், நல்லொழுக்கம், முதலியவற்றில் மேலும் கவனம் செலுத்துவதின் மூலம் தன் மதிப்பைப் பெருக்கிக் கொள்ள இயலும்

நம்முடைய நடிகர்களில் பலர், நாடகத்திற்கு வேண்டிய பாடத்தை மட்டும் நெட்டுரு செய்துவிட்டு, முகப்பூச்சு பூசிக்

கொண்டு, மேடையில் வந்து ஒப்புவிப்பதுடன் தம்முடைய கடமை தீர்ந்துவிடுவதாக எண்ணுகிறார்கள். இப்படிச் செய்வனல் மட்டும் ஒரு நடிகன் உயர்நிலைக்கு வந்துவிடமுடியாது என்பது தான் என் அபிப்பிராயம்.

கலை உள்ளம் படைத்த நடிகன், தினசரி வாழ்க்கையில், சோம்பலின்மை, தூயஒழுக்கம், பரிசுத்தம் முதலியவைகளைக் கட்டாயம் அனுசரிக்கவேண்டும். தன்னுடைய, உடை, உணவு, முதலியவற்றில் கவனம் செலுத்துவதுடன், முடிந்தமட்டில் 'பிரமச்சரியத்தை' அநுஷ்டித்தல் இன்றியமையாததாகும். இது நான் சொல்வதல்ல; இன்று மகாநாட்டில், கொடியேற்றுவிழாவிற்குத் தலைமை வகித்த, நமது நாடகப் பேராசிரியர், ராவ் பஹதூர் P. சம்பந்த முதலியார் அவர்கள், தம்முடைய முதிர்ந்த அநுபவத்தின் வாயிலாக, நடிகர்களுக்காக எழுதியிருக்கும் தம்முடைய நூலில், மிகத்தெளிவாக எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். உலகத்திற்கு, உண்மையை விளக்கி நடித்துக்காட்டப் புகும் நடிகன் முதலில் தன்னுடைய வாழ்க்கையில் உண்மையைக் கொள்ளல் அவஸியமன்றோ? ஒழுக்கமும், உண்மையும் நிறைந்துள்ள நடிகனுக்குத்தான் ஆத்ம சுத்தி உண்டாகும். ஆத்ம சுத்தி உண்டாயின், அங்கு 'கலை' ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் "உள்ளத்தின் உண்மை ஒளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்பது பாரதியாரின் கருத்து.

நடிகன்—கலைஞன், சதாவும் கலையுடன் சம்பந்தப்பட்டு தன் வாழ்க்கையை நடத்துகிறான். கலையைத் தொழிலாக மேற்கொண்டு தொண்டாற்றுகிறான். இரவிலும், பகலிலும் கலாதேவியுடன் கலந்து உறவாடுகிறான். அத்தகைய நடிகனுடைய உள்ளும், புறமும் ஒன்றுபட்டு, ஆத்மசுத்தியுடன் பூஜித்தால்தான் கலாதேவியின் கருணைக்குப் பாத்திரமாக முடியும். நடிகர்கள், நாடகத்திற்குரிய பாடங்களைத் தவிர, உலக விஷயங்களையும் ஓரளவு பயின்றிருத்தல் வேண்டும். ஒழிந்த நேரங்களில், வீண் பொழுது போக்குவதைவிட, இலக்கியம், பொருளாதாரம், சமூகம், அரசியல் இவை போன்ற விஷயங்களை விளக்கிக் கூறும் அறிஞர்களின் நூல்களை வாங்கி வாசிக்கலாம். அத்துடன் தினசரிப் பத்திரிகைகளையும்—வாராந்திர, மாதாந்திரப் பத்திரிகைகளை

யும் படிப்பதனுல், அவ்வப்போது உலக நிலையில் ஏற்படும் மாறுதல்களையும், இலக்கியத் துறையில் ஏற்படும் புதுமைகளையும் அறிந்துகொள்ள உதவியாக இருக்கும். உலக விஷயங்களைப் பற்றி நமக்கென்ன என்றிருப்பது தவறு. மற்றவர்களைவிட நமக்கு உலக நிகழ்ச்சிகள் அவசியம் தெரிந்திருக்க வேண்டும். "உலகமோ நாடக மேடை." இந்த அகண்ட உலகமாகிய நாடக மேடையில் நடைபெறும் சம்பவங்கள் அவ்வளவையும், நாடகம் என்னும் பூதக் கண்ணுடியின் மூலம், தம்முடைய சிறிய நாடக உலகத்திலே, நாடகத்திற்குள், நாடகமாக சித்தரித்துக் காட்ட வேண்டிய பொறுப்பும், கடமையும் நடிகர்களுக்கு இருக்கிறது. ஆகையால், இடைவிடா முயற்சியுடன், கல்வியை அபிவிருத்தி செய்துகொள்வதில் கவனம் செலுத்தல் வேண்டும். கல்வியின் பால் பண்பட்ட உள்ளத்திலே தான் கற்பனைக்கு இடம் உண்டு. நிகழ்கால உலகம், முன்போல், வண்ணங்களை முழநீளம் பாடிவிட்டால் வாயாரப் புகழாது—வசனத்தை நெட்டுருப்போட்டு ஒப்புவித்துவிட்டால் மட்டும் "சபாஷ்" என்று சொல்லிவிடாது. நடிப்பில் உணர்ச்சியும், வாக்கில் கற்பனையும் உடைய நடிகனுக்குத்தான், ரஸிக உலகம் மரியாதையளிக்கும் என்பது வெளிப்படை.

**மற்றென்று:—**

நடிகர்கள் அடிக்கடி ஒரு கம்பெனியிலிருந்து மற்றொரு கம்பெனிக்கு இடம் மாறிக்கொண்டே யிருப்பது ஒருபெரிய குறைபாடாகும். வழக்கமாக நடைபெற்றுவரும் இதனை, நாடகத்திற்கு ஒரு சாபக்கேடு என்றுகூடச் சொல்லலாம். இப்படி நடிகர்கள் அடிக்கடி இடமாற்றம் செய்துகொண்டிருப்பதால், கம்பெனியை நிர்வாகம் செய்கிறவர்களைக்காட்டிலும், நடிகர்களுக்குத்தான் அதிக நஷ்டம் ஏற்படுகிறது. இதை என்னுடைய அநுபவத்திலிருந்தே கூறுகிறேன். ஒரு நடிகர், ஒரு கம்பெனியில் இரண்டு வருஷங்களோ, அதற்கு மேற்பட்ட காலமாகவோ இருந்து, நன்கு அநுபவம் பெற்று, புகழுடன் நடித்துக்கொண்டிருக்கும்போது, ஏதேனும் ஒரு விஷயத்தில் மனஸ்தாபம் ஏற்பட்டு, அந்தக் கம்பெனியிலிருந்து விலகிவிட்டால், மீண்டும் அவர் வேறொரு கம்பெனியில் சேர்ந்து நடிப்பதற்கும், அங்குள்ளவர்களுடைய குணுனுபவங்களுக்கேற்ற

வாறு, தம்மை மாற்றிக்கொள்வதற்கும் இடையில் பல நாட்கள் சென்றுவிடும். இந்த இடைக்காலத்தில், ஞாயமாக அவருக்கு ஏற்படவேண்டிய புகழும், ஊதியமும் தானகவே தேங்கி நிற்பதும் சாத்தியமே. இப்படி அடிக்கடி நேரிடுமாயின் அந்த நடிகரின் வாழ்க்கை யாதாகும்? இந்த விஷயத்தை என் தோழர்கள் நன்கு சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நடிகர்களுக்கு, கம்பெனியில் தேவைக்குப் போதுமான ஊதியம் கிடைக்காமல் இருக்கலாம்; அன்றி, உரிமை விஷயங்களில் குறை ஏற்படலாம்; எதுவாயினும், கம்பெனியில் இருந்தே குறைகளை நிவர்த்திசெய்து கொள்வதுதான் உசிதம். நடிகர்களுடைய கோரிக்கை ஞாயமானதாயின், அதற்காக அவர்கள் போராடுவதும் ஞாயந்தான். இதனை எவரும் மறுக்க முடியாது. இன்று, உலக முழுவதும், உரிமைக்கும், தேவைக்குந்தானே போராடுகிறது?

கம்பெனி என்பது நம்முடைய குடும்பம்—நடிகர்களுடைய உழைப்பின் அஸ்திவாரத்தில் கட்டப்பட்டிருக்கும் கலா மந்திரம். இதில் அபிப்பிராய பேதம் ஏற்படலாம்; சிறு சிறு மனஸ்தாபங்கள் உண்டாவது இயற்கையே. சாதாரணமாக, நம்முடைய குடும்பத்திலே, நம்மைவிட முதிர்ந்தவர்களோ, அன்றி இளையவர்களோ, நம்மைக் கேவலமாக நடத்தினல், நாம் உடனே குடும்பத்தை விட்டு வெளிப்பட்டு விடுவோமா? எது நேரினும், நாம் அந்தக் குடும்பத்தில் பிறந்தோம், பிறருக்குள்ள உரிமை அதில் நமக்கும் இருக்கிறது என்ற எண்ணத்துடன், அவர்களுடன் நாம் ஞாயவாதம் செய்வதில்லையா? அவ்வாறே, கம்பெனியையும் நினைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அடிக்கடி பிரிந்துபோகும் பழக்கத்தைக்கொண்டுள்ள நடிகருக்கு, நாடக உலகத்தில் மட்டுமல்ல, வெளியுலகத்திலும் மதிப்பு மிகவும் குறைந்து விடுகிறதென்று நான் நிச்சயமாகக் கூறுகிறேன்.

கம்பெனி நிர்வாகஸ்தர்களும், தாங்கள் ஒரு பெரிய குடும்பத்தின் தலைவர் என்ற பொறுப்புடன், பொறுமையாகவும், கண்ணியமாகவும், நடிகர்களை, அன்புடன் பாதுகாக்கவேண்டும். நடிகர்களுடைய குறைபாடுகளை அடிக்கடி, காலத்திற்கேற்றவாறு, சாத்தியமான வரையில் தீர்க்க முயற்சிக்க வேண்டியது அவசியம்.

அடிக்கடி நடிகர்கள் பிரிந்துபோவதாலும்—பிரிந்துபோகும்படி செய்வதாலும், நாடகக் கலை அபிவிருத்திக்கு இடையூறு ஏற்படுகிறதென்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆதலால் ஒற்றுமையை வளர்க்கவும், கட்டுப்பாடுடன் கலைக்குத் தொண்டு புரியவும் முயற்சி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக என்னுடைய நடிக சகோதரர்களுக்கு நான் கூற விரும்புவது இதுதான்:— 'நடிகன்' என்றால், சந்தையில் மலிந்து கிடக்கும் சரக்கல்ல. அவன் 'சமுதாயத்திற்கு ஒரு அரிய பொக்கிஷம்'! இந்த உயர்ந்த மனப்பான்மையுடன் நாம் கலையை வளர்க்க முயலவேண்டும். ஒரு நடிகன்தான் இறந்தபின்பும் குறைந்த பட்சம் அரை நூற்றாண்டாவது உயிரோடிருக்கவேண்டும். இதுவே என் பேராவல். இந்த ஆவலைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில், நாடகக் கலையின் அபிவிருத்திக்காக கூட்டப்பட்டிருக்கும் இந்த மகாநாட்டில், நாடகக் கலை அபிவிருத்திக்கும், நடிகர்களின் வாழ்க்கை முன்னேற்றிற்கும், ஆவனவற்றை ஆலோசித்து, உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்ப்பதுடன், மீண்டும் உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, என் சிற்றுரையை முடிக்கிறேன்.

**கலை வாழ்க! கலை வளர்க்கும் கலைஞன் வாழ்க!!**

பல நற்சாக்ஷிப் பத்திரங்கள்
சொல்லுவது இதுதான்.

புத்தம் புதிய
வெண்ணெயை உருக்கி வார்த்த

LOTUS BRAND GHEE

mangalam & Co.
COIMBATORE.

எங்கள் கம்பெனியின்

:: முதல்தரமான நெய் ::

மங்களம் & கோ நெய்மண்டி, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்.

# நாடகக்கலை

(திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம்)



உலகத்தின் பழமையான நாடுகளில் தமிழ்நாடு ஒன்றே நாடகக்கலையைத் தோற்றிய நாடாகும். நாடகக்கலை தோன்றிய காலத்தை வரையறுத்துக்கூற முடியவேயில்லை. "முத்தமிழ்" என்று கூறிய காலம் 5000 ஆண்டுகளுக்குப் பிற்பட்டதல்ல. அதற்கு முன்னதாகவே நாடகக்கலை இருந்திருக்கிறது என்பது ஒன்றிரண்டு மூன்று என எண்ணிச் சொல்லியிருப்பதிலேயே நன்கு விளங்குகிறது.

நாடகக் கலைபற்றிய பெருநூல்கள் நமது நாட்டில் இருந்திருக்கின்றன. இன்றைக்கும் சிலப்பதிகாரம் உருவோடும் உயி

ரோடும் இருந்துகொண்டிருக்கிறது. பழங்காலத்திய நாடக நூல்களின் பெயர்களையும், குறிப்புகளையும் இந்நூலில் இன்றைக்கும் காணலாம். இந்நூலில் இன்னும் பல பெயர் தெரியாத நாடக நூல்களின் கருத்துக்களை மேற்கோள்களாகக் கையாளப் பெற்றிருக்கிறது. இந்நூலைப் படித்துப் பிறகு நடிக்கும் நடிப் புலவர்களின் நடிப்பிலே ஒரு புதிய உயிரின் ஒளி வீசுவதை இன்றும், வெகு எளிதில் காணலாம்.

இயலும், இசையும், நாடகமும் எனத் தமிழை மூன்றாக வகுத்த முன்னோர்கள் பேரறிவாளிகளாகத் தோன்றுகின்றனர். "நூற்பயன் வீடடைதல்" என்று கூறுகிற இலக்கண முறைப் படி கூறுவதானால், "மக்கட் பயன் செயலாற்றல்" எனக் கூற லாம். செயலாற்றலை எண்ணம், துணிவு, செயல் என மூன்று வகைப்படுத்திக் கூறியவர்கள் இன்றைய உளநூற் புலவர்க ளாவார்கள். இவற்றையே நமது முன்னோர்கள் எண்ணி, முத் தமிழாக முறைபடுத்திக் கூறியுள்ளார்கள் எனக் கூறலாம்.

இயற்றமிழ் எண்ணத்தை ஊட்டி, இசைத்தமிழ் உள்ளத்தை உருக்கி, நாடகத் தமிழ் நடத்திக்காட்டி, மக்களை நல்வழிப்படுத்து கிறது என்பது எனது கருத்து. இம் முத்தமிழையும் தமிழ் மன்னர்கள் தங்கள் அரசுக் கட்டிலில் வைத்து பாதுகாத்து வளர்த்து வந்தார்கள். அம் மன்னர்களின் ஆட்சி மறையத் தொடங்கியதும் இம் முத்தமிழும் மறையத் தொடங்கின. கார ணம், அடுத்துக் காப்பாற்றும் வலிமையும், திறமையும் உள்ள மக்கள் கைவிட்டு விட்டதேயாகும்.

என்றாலும், இந்த 600 ஆண்டுகளாக, இம் முத்தமிழும் வளர்ச்சியிற் குன்றியதே தவிர அழிந்து போய்விடவில்லை. இந்த 600 ஆண்டும் வறுமைவாய்ப்பட்ட புலவர்கள் மண் சட்டியா லும், கந்தைத் துணியினாலும் மூடி, செல்லரித்த பனை ஓலைகளில் வைத்து பாதுகாத்து வளர்த்து வந்த இயற்றமிழை இன்றைய இளை ஞர்களிடம் ஒப்புவித்துவிட்டார்கள். வயிற்றுக் கொடுமையின் கார ணமாக சமூகத்தால் ஒதுக்கித் தள்ளப்பெற்றுள்ள ஏழைச் சகோதரிகள் தங்கள் நலம் போயினும்கைவிடாமல் பாதுகாத்து வளர்த்துவந்த இசைத் தமிழை இன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரிடம் ஒப்புவித்து விட்டார்கள். கூத்தாடிகள் எனப் புறக்கணிக்கப்பெற்று வந்த

அறிவும், திறமையும் வாய்ந்த ஏழைக் குடும்பங்கள், இன்றுவரை நாடகத் தமிழை சாகவிடாமல் வளர்த்து காப்பாற்றி வந்து இன்று சர். R. K. சண்முகம் அவர்கள் தலைமையில் ஒப்புக் கொடுத்துவிட்டார்கள்.

இந்த 600 ஆண்டுகளாக தலைமுறை, தலைமுறையாய் இம் முத்தமிழையும் போற்றி வளர்த்து காப்பாற்றி வந்த இம் மூவர்களையும் இளைப்பாறச் செய்யவேண்டியது இன்று உயிர்வாழும் தமிழ்ப் பெருமக்களின் முதற் கடமையாகும்.

எனது நாடு தமிழ்நாடு, எனது மொழி தமிழ்மொழி, ஆகவே, நான் தமிழன் என்று நெஞ்சு நிமிர்ந்து கூறும் தகுதியும், வாய்ப்பும் உள்ள தமிழ் மக்கள் ஒவ்வொருவரும், எண்ணத்தாலும், துணிவாலும், செயலாலும், சொல்லாலும், பொருளாலும், உலகுக்குயிர் வழங்கியதும், ஓங்குபெரும் புகழ்பெற்றதும், ஒப்புயர்வு கூற முடியாததுமாகிய நமது அரும் பெரும் முத்தமிழைப் போற்றி வளர்க்கத் தொண்டுசெய்ய வேண்டுமென்பதும், அதன் மூலம் தமிழை முன்னைய உயர்நிலையில் வைத்து ஆட்சி புரியச்செய்து நாமும் பிறரும் நல்வாழ்வு வாழவேண்டு மென்பதும் எனது ஆசை.

கோயமுத்தூரில்

## குப்புராஜ்

ஷராப் கடையில்

**தோஷமற்ற உயரிய பூரிப்புள்ள வைரங்கள்**
**அழகிய வேலைப்பாடமைந்த பவுன் நகைகள்**
**நவீன முறையில் தயாரிக்கப்படும்**
**வெள்ளிச் சாமான்கள்.**

•

சரசமான விலையில் உங்கள் அபிலாஷையை
பூர்த்திசெய்யும் உறுதி வாய்ந்தது.

குப்புராஜ்
பெரியகடை வீதி, கோயமுத்தூர்.

## எஸ். எல். அன் கோ

(ஏஜண்டு:—"தினமணி")

**கல்லுக்கட்டி :: :: காரைக்குடி**

- சக்தி, கலைமகள், தமிழ்ப்பண்ணை, நவயுகம், ஆசியஜோதி, அல்லயன்ஸ், மற்றும் எல்லாப் புதிய தமிழ் நூல்களும்,
- பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களும்,
- ஸ்டேஷனரி சாமான்களும், எங்களிடம் கிடைக்கும்.
- படங்களுக்கு கண்ணாடி சட்டம் உறுதியாகச் செய்து கொடுக்கப்படும்.

ஒருமுறை வந்து பாருங்கள்

# நடிகர்களின் கடமை

(நடிகர் எம். எம். சிதம்பரநாதன்)

**தோழர்களே!**

நாடகம் என்பது என்ன? மனித வாழ்வுக்கு அவசியமான அன்பு, சத்தியம், தூய்மை, கற்பு, வீரம் முதலான அரிய விஷயங்கள் உள்ள சரித்திரங்களையும், கதைகளையும் காலத்திற்கேற்ற புதுமையான முறையில் இயல், இசை, திரை, உடை முதலான சாதனங்களைக் கொண்டு நடித்துக் காட்டுதலே நாடகம் ஆகும். உதாரணமாக ஒரு தேசத்துக்கு வேண்டியது வீரம் என்றால் வீரம் நிறைந்த நாடகங்கள் நடிக்கப்படல் வேண்டும். அது போலவே மற்றவையும் நடிக்கப்படல் வேண்டும்.

நாடகத் தொழில் ஒரு சிறந்த பிரசாரத் தொழிலாக இருப்பதால் அதை உலகிலிருந்து எந்தக்காலத்திலும் எவராலும் பிரித்துவிட முடியாது. நம் நாட்டைப் பொறுத்தவரை நாடகம் என்பது சிறந்த பிரசாரத் தொழிலாகயிருந்து வந்திருக்கிறது. ஆகையால்தான், சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் செய்த ஒரு பிரசங்கத்தில், "இந்தியாவிலே நாடகம் என்பது ஒரு பரிசுத்தமான விஷயம். நாடகமும் சங்கீதமுமே மதமாகக் கருதப்படுகின்றது. காதற்பாட்டாயினும் சரியே, வேறாயினும் சரியே ஒருவனுடைய ஆன்மா முழுதும் அதில் லயித்துவிடுமானால், உடனே அவன் மோக்ஷமடைகிறான். பிரம்ம நிஷ்டையினால் ஒருவன் எந்த லக்ஷியத்தை அடைய முடியுமோ அதே லக்ஷியத்திற்கு நாடகம் அவனை இட்டுச் செல்கிறது." எனக் கூறியுள்ளார்.

**முற்கால நாடகம்**

முற்காலத்தில் நடந்து வந்த நாடகங்கள், ஆஸ்ரமங்களிலும், மடங்களிலும் மறைந்து கிடந்த வேதசாஸ்திரங்களின் உண்மைகளையும், நம் நாட்டு வேதாந்திகள், வீரர்கள், அறிஞர்கள், கற்புக் கரசிகள் முதலானவர்களின் மங்கள குணநுபவங்களையும், மக்களுக்கு எளிதில் போதித்து வந்தன. அதனால் சரித்திரப் பிரசித்தி பெற்ற அசோகன், சீலாதித்தன், போஜன், சிவாஜி, சேர, சோழ,

பாண்டியர்கள் முதலான மன்னர்கள் நாடகக் கலையை வளர்ப்பதில் ஊக்கம் காட்டி வந்தார்களென்பது மறுக்க முடியாத உண்மை, காளிதாஸ், பவபூதி, அருணசலக்கவி, சுந்தரம் பிள்ளை ஆகிய ஆசிரியர்களின் நாடக நூல்களைப் பார்த்தாலே அந்நாளில் இந்நாடகத் தொழில் கண்ணியமாய் நடந்துவந்திருக்கிறதென்பதை எவரும் எளிதில் தெரிந்துகொள்ளலாம். சுருங்கச்சொன்ஞல் முற்கால நாடகங்களினுல் நாட்டுக்கு விளைந்த நலன்கள் கொஞ்சமல்ல. அது, மனித சமூகத்திற்குச் சிறந்த வழிகாட்டியாயிருந்ததென்றே சொல்லலாம். இத்துணை சிறப்பான முறையில் முற்கால நாடகங்கள் நடந்திராவிட்டால், நம் முன்னேர்கள் இந்த நாடகத் தொழிலைக் குழிதோண்டிப் புதைத்திருப்பார்களென்பதில் சந்தேகமில்லை.

## மேல் நாடும், நாடகமும்

இன்று நாடகக் கலையை நல்லமுறையில் வளர்க்கும் பெருமை ஐரோப்பாக் கண்டத்திற்கே உரியது. இங்கிலாந்திலுள்ள பிரிட்டிஷ் டிராமா லீக், அயர்லாந்திலுள்ள ஆபி தியேட்டர், ஜெர்மன் சுதந்திர நாடக மன்றம், ரஷ்யப் பொதுஜன நாடகசாலை முதலானவைகள் உலகுக்கே பெருந்தொண்டு செய்து வருகின்றன. ஆழ்ந்த கருத்துக்களைப் போதிக்கும் கதைகள் ரஷ்யாவிலும், காட்சிகளைத் தயாரிக்கும் அபார சக்தி ஜெர்மனியிலும் மலிந்து கிடப்பதாக ஹரிந்திரநாத் சட்டோபாத்யாய தன் நாடக ஆராய்ச்சியில் கூறியுள்ளார். எனவே, மேல்நாட்டு நாடகங்கள் அந்நாட்டின் நன்மைக்கேற்றவாறு நடந்து வருகிறதென்பதில் சந்தேகமில்லை.

## தமிழ் நாட்டின் தற்கால நாடகம்

தமிழ் நாட்டின் தற்கால நாடகத் தொழிலை நினைக்கும் தமிழ் மகன் எவனும் கண்ணீர் சிந்தி வருந்தாமல் இருக்கமாட்டான். அந்தோ! தமிழனின் துரதிஷ்டந்தான் என்னே! நாடகத் தோழர்களே! சுவற்றைக் கெடுக்கும் சுவரொட்டி விளம்பரங்கள், ஊரை மயக்கும் ஆப்டோன் பிளாக் நோட்டீசுகள், பஞ்சாலைகள்போல் கட்டப்பட்ட நாடக சாலைகள், பரமபதம் போன்ற படுதாக்கள், கண்ணில் கண்ணடியுடனும், கையில் கத்தியுடனும் காட்சியளிக்

கும் ராஜ பார்ட்டுகள், கையில் விசிறியுடன் அல்லது கைக்குட்டையுடன் காக்ஷிதரும் ஸ்திரீ பார்ட்டுகள், காமச் சுவையைக் கிளப்பி ஜன சமூகத்தைக் கெடுக்கும் ஆபாசப் பாடல்கள், ஆணுக்கும் பெண்ணுக்கும் நடக்கும் அசங்கியமான சம்பாஷணைகள்; காணத்தகாத செய்கைகள்; இத்தனையும் போதாதென்று நாடக நிகழ்ச்சிக்கிடை இடையே சினிமா நக்ஷத்திரங்கள் என்போர் செய்யும் லீலா விநோதங்கள்! இவை தானே தற்கால நாடகம்.

தோழர்களே! ஒரு தேகத்தைப் பல கோடி புழுக்கள் மொய்ப்பது போல இன்று நாடகத் தொழிலாகிய தேகத்தை நடிகர்களாகிய நாம் மொய்த்துக் கொண்டிருக்கிறோம். தற்கால நாடகத் தொழிலால் நமக்கோ நாட்டிற்கோ ஏதேனும் பயனுண்டோ? தற்காலம் நாடு விரும்புவது என்ன? ஆனால், நாம் நடிக்கும் நாடகங்கள் போதிப்பவை என்ன? நடிகர்களாகிய நமக்கு நாட்டைப்பற்றியும், சமூகத்தைப்பற்றியும் கவலையுண்டா? நாட்டைப்பற்றிக் கவலையில்லாத நாம், நாட்டுக்குகந்த முறையில் எப்படி நாடகம் நடிக்க முடியும்? நாட்டுக்கு நல்வழி காட்டும் ஒரு சிறந்த தொழிலை ஒன்றுமறியாத நாம் கட்டியழுவதில் பயன் யாது? நாடகம் நடித்தல் என்பது திண்ணை வேதாந்தமல்ல. அது ஒரு பெருங் காரியம். தமிழ்த் தாயின் மானத்திற்கு ஊறு விளைக்கும் தற்கால நாடகங்களை நாடகக் கலை என்று கூறுவதா? அல்லது நாடகத்தின் பேரால் நடைபெறும் அக்ரமம் என்று கூறுவதா? ஏதாகிலும் ஒரு சரித்திரத்தை விளம்பரம் செய்துவிட்டு நடிகர்களென்போர் எதைக்கொண்டாவது ஜனசமூகத்திற்கு ஆவேசத்தை யுண்டுபண்ணிப் பொருள் வேட்டையாடுவதே நாடகக் கலை என்றால், அத்தகைய கலையும், அதைக் கையாளும் நாமும் நாட்டிலிருப்பதைக் காட்டிலும் இல்லாமலிருப்பதே மேலல்லவா? தமிழ் நடிகர்களே! சென்றது செல்லட்டும்.

தோழர்களே! நாம் அறிந்தோ அறியாமலோ நம்மில் பலரைச் சில துன்பங்கள் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. அத்துன்பங்களில் (1) விபசாரம், (2) குடி, (3) ஆடம்பரம். இக்குறைகளால் நாம் நாடகக்கலையின் உயர்வை மறந்து, நமது கடமையைச் செய்யச் சக்தியற்றவர்களாய் இருந்து வருகிறோம். மேற்

சொன்ன குறைபாடுகளை அகற்றவும், நாடகக் கலையை உண்மையான வழியில் வளர்க்கவும், இந்த நாடகக் கலை அபிவிருத்தி மகா நாடு நமக்கு நல்ல உதவி செய்யுமென்று நம்புகிறேன்.

**நமது கடமை**

இந்த மகாநாட்டில் தயா தாக்ஷண்யமற்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அறிஞர்களும், அநுபவஸ்தர்களும் தங்கள் உள்ளத்தில் உள்ளவைகளை ஒளியாமல் கூறவேண்டும். நாம் முயற்சித்தால் ஆகாதது ஒன்றில்லை.

இதற்கு முன்னும் இதேபோல் இரண்டொரு நாடகமகாநாடுகள் மதுரையிலும் சென்னையிலும் நடைபெற்று, மகாநாடு முடிந்த பிறகு அதைப்பற்றின சிந்தனையே இல்லாமல் போனது போல் இனியும் இராமல், இந்த நாடகக் கலை அபிவிருத்தி மகாநாட்டில் நிறைவேறும் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டு வருவதற்குத் தொடர்ந்து வேலை செய்யவேண்டுமென நடிகர்களையும், ரஸிகர்களையும் கேட்டுக்கொண்டு எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

★

## வாழ்த்து

அக்கலையும் இக்கலையும் ஆய்ந்தறிவார் நாடகத்தை
எக்கலையும் கூடும் இயல்பென்பார்—முக்கலையாம்
செந்தமிழில் நாடகங்கள் சீர்பெற் றுயர்ந்திடவே
வந்தமகா நாடுநிதம் வாழி.

— திரு ச. து. சுப்பிரமணிய யோகி.

# நாடகக்கலை வளர்ச்சி

(பூவாளூர். அ. பொன்னம்பலனார்)



பேரன்புடைய தலைவர் அவர்களே! நாடகக்கலை அபிவிருத்தி மகாநாட்டு வரவேற்புக் கழகத் தோழர்களே! பிரதிநிதிகளே!

இம்மகாநாட்டில் வந்து சொற்பொழிவாற்றுமாறு அன்புடன் செயலாளர் திரு. சிவதாணு அவர்கள் எனக்கு அழைப்பு அனுப்பினார்கள். நானும் வருவதாக அன்புடன் ஒப்புக்கொண்டேன். ஆனால், இம்மகாநாடு நடைபெறுமென்றும், மகாநாடே குழப்பத்தில் முடியுமென்றும், தலைவர்கள் மகாநாட்டுக்கு வரவே மாட்டார்களென்றும் வதந்திகள் பரவிற்று.

ஈரோடு ரயில்வே ஸ்டேஷனில் நான் வந்திறங்கியவுடன், ஒரு நண்பர் மகாநாடு கலவரம் ஏற்பட்டுக் குழப்பத்துடன் கலைந்துவிட்டது என்றும் கூறினார். என்ன குழப்பம்? யார் குழப்பம் செய்தார்கள்? எதற்காக குழப்பம் என்று கேட்டேன். அவர் தக்க பதில் கூறவில்லை. சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் கூடும் நாடகக்கலை அபிவிருத்தி மகாநாடு

என் கலவரத்தில் முடியவேண்டும்? என்ற கவலையோடு வந்தேன். ஆனல் இங்கு மகாநாடு சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது.

## தோழர்களே!

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழை வளர்த்த தமிழ் நாட்டில், இன்று முத்தமிழ் வளர்க்கும் முயற்சிகள் பெரிதும் குன்றிவிட்டது. இசை என்ருல் தெலுங்கு கீர்த்தனம், ஹிந்துஸ்தானி மெட்டு, தான் என்ற உணர்ச்சி மக்களிடையே பரவத் தொடங்கி விட்டது. இயல்—என்ருல் புராண—இதிகாசங்களை எழுதி மக்கள் அறிவைக் கெடுக்கும் மூட பக்தியை வளர்ப்பதென்று நம் நாட்டுப் புலவர்கள் கருதி, பழைய புராணங்கட்கு விரிவுரை, பதவுரை எழுதிக்கொண்டிருப்பதோடு அமைந்தார்கள். நாடகம் என்ருல், "அரிச்சந்திர மயானகாண்டம்" "நல்ல தங்காள் நாடகம்" "குலேபகாவலி" "சதாரம்" "தாராசசாங்கம்" போன்ற மக்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படாததும், அறிவுக்குப் பொருத்தமற்றதுமானவைகளையும், நாடகக்கலை வளர்ப்பதாகக் கருதி வந்தார்கள். கொஞ்ச காலத்திற்கு முன், நாடகம் என்ருல் கூத்தாடிகள், குடிகாரர்கள், விபசாரிகள் என்று இழிவாக நடிகர்களையும், நடிகப் பெண்மணிகளையும் பேசப்பட்டதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். மெய்யாகவே சில நாடகங்களில் ஆண்கள், பெண்கள் வேடம் தாங்கி வந்து நடிக்கும் பேசும் கீழ்தரமானமுறைகளை நானே பார்த்தும் வெறுப்படைந்துமிருக்கிறேன். பொது மக்களும் வெறுத்து வந்தார்கள். ஆனல் கன்னையா நாடகக் கம்பெனி, "முத்தமிழ் கலா வித்வ ரத்தினம்" டி. கே. எஸ். சகோதரர்கள் நடத்தும் M. S. B. S. சபா, நவாப் ராஜமாணிக்கம் அவர்கள் நடத்தும் ஸ்ரீ தேவி பால விநோத சங்கீத சபா, தோழர் பொன்னுச்சாமி பிள்ளை அவர்களுடைய மதுரை ஸ்ரீ மங்கள பால கான சபா ஆகியவைகள் நம் நாட்டில் நல்ல முறையில் நாடகத்துறையை சீர்திருத்தி, ஒருவாறு நாடகத்தின் மூலம் மக்கட்கு சமூக சீர்திருத்தம், ஒழுக்கம், அறிவு, தொழிலாளர்கள் முன்னேற்றம், சுதந்திரம், வீரம், நாட்டுப்பற்று, தமிழ்மொழிப் பற்று ஆகியவைகளை நன்ருக பொது மக்கள் விரும்பும் வகையில் நாடகக்கலையை வளர்த்து வந்திருக்கின்றன. என்ருலும், நமது நாட்டில் நடை

பெறும் எல்லா நாடகக் கம்பெனிகளிலும், மத நம்பிக்கை, புராண நம்பிக்கை, கடவுள் பக்தி, இந்திர லோகம், சிவ லோகம், வைகுண்டம் ஆகிய மூவுலகிலும் நாரதர் சஞ்சாரம் முதலியவைகளை அதிகம் நடத்தினுல் தான் பொது மக்களைத் திருப்தி செய்யலாம் என்று கருதியும், புராண நாடகங்களையே நடித்தும் காட்டப்படுகின்றது. சினிமாப்பட முதலாளிகளும், மக்கட்கு மூட நம்பிக்கை வளர்ப்பதில், பொருள், லாபம், சேர்ப்பதில் தான் அதிகம் கவலை எடுத்துக்கொள்கிருர்கள். நாடகக் கலை வளர்ச்சி பெறவேண்டும். ஆனுல், மக்கட்கு இப்பொழுதிருக்கும் மூட நம்பிக்கையை இனியும் அதிகம் வளர்க்கும் முறையில் நாடகக் கலை வளர்ச்சி பெறக்கூடாது. தற்காலம் மக்கட்குத் தேவையானவற்றை வலியுறுத்தும் முறையில் மக்கள் சமூக ஒற்றுமை, வீரம், மான உணர்ச்சி, அறிவு விளக்கம், சமூக சீர்திருத்தம் ஆகியவைகளையே பெரிதும் நாடகக் கலை வளர்ச்சியில் கருத்துடையோர் கைக்கொள்ளல் வேண்டும். பொது மக்களும், அறிவு வளர்ச்சியிலும், புதுமைக் கருத்துகளிலும் மறுமலர்ச்சி கொள்ளல் வேண்டும். நாடகக் கம்பெனி சொந்தக்காரர்கள் தொழில் காரணமாகவும், பொருளீட்டுதல் காரணமாகவும், ஓரளவுதான் நாடகக்கலை வளர்ச்சியி லீடுபடக்கூடும். புராணக் கதைகளை அடியோடு நிறுத்திவிட முடியவில்லை. ஓரளவுதான் எங்களால் சீர்திருத்தம், சமூகத்தொண்டு, மொழித்தொண்டு செய்யக்கூடும் என்றிருக்கும் நாடகக் கம்பெனியார்களை நாம் குறைகூறுவதினுல் பயனில்லை. நாடகத்தை இவ்விதம் தான் நடத்தவேண்டும். மதம், கடவுள், புராணம், நம்பிக்கையை வளர்க்கும் கதைகளை இனி நடத்தக்கூடாது என்றெல்லாம் நாம் உத்திரவுபோட முடியாது. இதில் அரசியலாரும், பொதுமக்களும் ஒன்ருக ஒத்த கருத்துடையவராகக் கூடினுல், ரஷ்யாவைப் போல் நம் நாட்டிலும், நாடகத்தில் அறிவு மணம் வீசும்படி செய்யலாம். தெலுங்கு நாட்டிலும், வடநாட்டிலும் நாடகம், சினிமாப் படங்களில் சமூக சீர்திருத்தத்தை அதிகம் விரும்பி பணியாற்றிவரக் காண்கின்ருேம்.

நம் நாட்டிலோ! முத்தமிழ் வளர்த்த தமிழகத்திலோ!! முச்சங்கமிருந்த தமிழகத்திலோ!!! பழமையிலே மோகம் மூட நம்பிக்கையிலே காதல். மதச்சேற்றிலே மயக்கம். புராணக்குப்

பையிலேதான் மோகம். கடவுள் அவதாரக் கதைகளிலே - லீலை களிலே குருட்டு பக்தி நிறைந்து கிடக்கிறது. இதை அறிவு வளர்ச்சிப் பிரசாரத்தினாலேயே அகற்றலாம். நமது தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் எம். ஏ., நடித்துவரும் "சந்திரோதயம்" "இரண்யன்" போன்ற நாடகங்களை இனி யும் பல தொடர்ந்து எழுதி மக்கட்கு நாடகத்தின் மூலம் நடித்துக் காட்டலாம். நாடகத் துறையில் புகுந்து மக்கட்கு பணியாற்றுவது பெரும்பயன் தரும். 5, 6, பெரிய மகாநாடு களைக் கூட்டி சொற்பொழிகள் நிகழ்த்துவதில் ஏற்படும் பலனைக் காட்டிலும் ஒரு நாடகத்தின் மூலம் மக்கட்கு அறிவு வளர்ச்சியைப் பெருக்கி ஊக்கம் அளிக்க முடிகிறது. பொது மக்கட்குப் பணியாற்றி வரும் சமூக சீர்திருத்தத்திலும் அறிவு வளர்ச்சியிலும் அதிகம் நாட்டமுள்ள நமது அருமைத் தலைவர் கள் சர் ஆர். கே. சண்முகம் செட்டியார், பெரியார் ஈ. வே. ராமசாமி, அண்ணாத்துரை, சௌந்திரபாண்டியன் போன்றவர் களும் நாடகத்துறையி லீடுபட்டு நடித்து மக்கட்கு நல்லறிவு புகட்டி வரலாம். "திராவிட நடிகர் கழகங்கள்" போன்ற பல கழகங்கள் நம் நாட்டில் நிறுவிப் பணியாற்ற வேண்டும். நம் நாட்டில் இங்கிலீஷ் சினிமாப் படங்களைப் பார்க்கிறோம். கல்வி கைத்தொழில், விஞ்ஞானம், சுகாதாரம், தொழிற் சாலை, யுத்தப் பொருள் உற்பத்தி, போர் நடவடிக்கை, காதல் நாகரீகம் ஆண் பெண் சமத்துவம், வீரம் முதலியவைகளை படம் எடுத்துக்காட்டி வருகிறார்கள். மக்களும் மகிழ்ந்து பார்க்க விரும்புகிறார்கள். எனவே, நம் நாட்டில் நாடகக் கலையும் சினிமாப் படக்கலையும் வளர்ச்சி பெற நமது நாட்டு அறிஞர்கள் முன்வர வேண்டும். பொது மக்களும் பொருளுடைய பலரும் இம்முயற்சிக்குத் துணைபுரிய வேண்டும். இந்நாடகக்கலை அபிவிருத்தி மகாநாட் டில் கலந்து கொண்டிருக்கும் நடிகர்களும் நடிகப் பெண்மணி களும், நாடகக் கம்பெனி சொந்தக் காரர்களும் நாடகக்கலை வளர்ச்சி பெற்று எங்கும் அறிவு மணம் வீசும்படி பணியாற்ற வேண்டுகிறேன்.

★

# நடிப்புக் கலையால் இன்பம்

(திரு. A. K. இராமலிங்கம், சிலோன்)

அன்பர்களே!

உலகத்தில் இந்நடிப்புக்கலையே முதலில் தோன்றியதென்று சொல்லலாம். எக்காரியத்தையும் ஒருவரைப் பார்த்து மற்றொருவர் செய்யும்போது நடிப்புத் தோன்றுகிறது. மனக்கருத்தை மொழிகளால் தெரிவிக்க முடியாத ஆதிகாலத்தில் முகக் குறிப்புக்களாலும், கை அசைவுகளாலும், ஒருவருக்கொருவர் தம் கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். பின்பு, மொழி பேசத் தெரிந்து கொண்ட காலத்திலும் முற்கூறிய முகக்குறிப்பும் அசைவுகளும் நிகழ்ந்துகொண்டேயிருந்தன.

நண்பர் ஒருவர் நமக்குக் கடிதம் எழுதினுல் அவருடைய கருத்தைக் கடிதத்தால் அறிய முடியும்; ஆயினும், நண்பர் நேரே வந்து தம் கருத்தை மெய்ப்பாட்டுடன் சொல்லும்போது முந்தியதிலும் கூடிய விளக்கத்தையும் இன்பத்தையும் அடைகிறோம்.

இதேபோல் நல்ல வரலாறு, அல்லது கதை ஒன்றைப் படித்து அறிவதிலும் அதை நாடகத்தில் பார்த்தால் பூரண விளக்கத்தையும் இன்பத்தையும் பெறலாம்.

இயலிசை நாடகமென்ற முத்தமிழில் இயலும் இசையும் விரவிய நாடகத் தமிழே சிறந்தது. நாடகம் என்னும் சொல்லுக்கு 'ஒழுங்கான விளையாட்டு' என்று பொருள். "நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து" என்ற மாணிக்கவாசகர் வாக்கில் நாடகம் என்னும் சொல் விளையாட்டு என்ற பொருளில் வருகிறது. அக்காலம் தொட்டு இக்காலம் வரையும் நாடகம் மூன்று வகையாக மனிதருக்குப் பயன் அளித்து வந்திருக்கிறது.

பார்ப்பவரை மகிழ்விப்ப தொன்று; கருத்தை மனத்தில் பதியச் செய்வது இரண்டு; கருத்துக்கள் செயற்பட்டு உருவாவது மூன்று.

நடிப்பில் இரண்டு வகைகள் உண்டு. (1) கருத்துக்களை நடித்தல், (2) கதைகளை நடித்தல். கருத்துக்களை நடித்தற்கு நாட்டியமென்றும், கதைகளை நடித்தற்கு நாடகமென்றும் பெயர். சங்க காலத்தில் இவ்விரண்டும் சேர்ந்து கூத்து என்று வழங்கியது. நாடகத்தில் நடிப்புச் சுவையோடு கதைச் சுவையும் அடங்கி இருத்தலால் அது எல்லோருக்கும் இன்பத்தைக் கொடுத்தது.

இயல் இசை போலன்றி, நாடகம் கற்றோருக்கும் மற்றோருக்கும் இன்பம் கொடுக்கும் தன்மையது.

நாடகக்கலையைப் பயின்று வளர்த்தற்கு அக்காலத்தில் ஒரு வகுப்பார் இருந்தனர். அவர்கள் நாடக மாந்தர் என்றே அழைக்கப்பட்டனர். கூத்தர், பொருநர் என்போர் அவ்வகையைச் சேர்ந்தவர். அவர்கள் ஏனையோரை மகிழ்விக்கும் கைங்கரியத்தைத் தலைக் கடனாகக்கொண்டவர்கள்.

நல்ல பொருள்கள் அனுபவித்தற்குக் கிடைப்பது அருமை. அதே போல் சங்ககால தமிழ்நாடக நூல்கள் அழிவுற்றன. காளிதாஸனையும், ஷேக்ஸ்பியரையும் உலக மகா கவிகளாக்கிய நூல்கள் நாடக நூல்கள் தானே? நந்தமிழ் நாட்டிலிருந்த அத்தகைய நாடகநூல் வல்லாரை நாம் இன்று அறியமுடியாதவர்களானோம்.

இன்று புகழ்பெற்று வரும் சினிமா நாடகத்தின் நிழல் தான், நாடகத்தின் வளர்ச்சிபெற்ற தோற்றமென்றும் கூறலாம். சினிமாப் படங்களின் மூலம் இன்று அரிய பெரிய உண்மைகள் சொற்ப நேரத்தில் அற்பச் செலவில் அறிவிக்கப்படுகிறது. மேலை நாடுகளில் இந்த சினிமாக்கலை வளர்ச்சிக்காக பல ஆயிரக்கணக்கான சனங்கள் தம் உடல், பொருள், ஆவி ஆதிய அனைத்தையும் அற்பணம் செய்கின்றனர். அதனால் பெருமை யடைகின்றனர். இன்பம் பெறுகின்றனர்.

"நானிலம் யாவும் ஓர் நாடகசாலையே, ஆண் பெண் அனைவரும் அதில் நடிப்பவர் தாம்.'' என்ற ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர், நாம் அனைவரும் புவியரங்கில் எழுவிதக் கோலம் பூண்டு,

அந்நிலைக்கேற்ற மெய்ப்பாடுகளோடு நடிக்கிறோம் என்று அழகாகவும், அற்புதமாகவும் கூறுகிறார். நம் வாழ்க்கையே நாடகமெனில், நாடகத்தால் நாம் இன்பமடைதல் ஒருதலை யென்பதில் என்ன சந்தேகமுண்டு?

அன்பர்களே! இலங்கையிலிருந்து கலையார்வம் கொண்டு இம்மகா நாட்டிற்குப் பிரதிநிதியாய் வந்துள்ள நான் தமிழனேயாயினும், இடை இடையே எனது யாழ்ப்பாணத் தமிழ் உங்கள் பொறுமையைச் சோதித்திருக்கலாம். இந்நிலையில் அமைதியாயிருந்து என்னைக் கௌரவித்த உங்களுக்கும் இந்த அருமையான மகாநாட்டில் எனக்கு இடமளித்த நிர்வாகிகளுக்கும் வணக்கம் கூறிக்கொண்டு எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

---


தென்னாட்டுத் தனிப்பெருந் தொழிற்சாலை
மன்னனாய் உங்களை வாழ்விப்பது வேலை

உயரிய உணவுக்கு

**'காமதேனு' நெய்!**

தூயதாய் உடையை ஆக்க

**'காவேரி' பார் ஸோப்!!**

மேட்டூர் கெமிகல் அண் இண்டஸ்டரியல்
கார்பொரேஷன் லிமிடெட் தயாரித்தது
எங்களிடம் கிடைக்கும்.

**கெமிகல் ஏஜன்ஸீஸ்**

51, தெற்கு மாசிவீதி, மதுரை.
அருணாசல விலாஸ், காரைக்குடி.
சாத்தூர்.

# ஜூபிடர் பிக்சர்ஸாரின்

—மகத்தான சித்திரம்!—



# மஹா ★ ★ மாயா

| | |
|---|---|
| சின்னப்பா | கண்ணும்பா |
| கிருஷ்ணன் | மதுரம் |
| பாலசுப்பிரமண்யம் | சரோஜா |

—: டைரக்ஷன் :—

ரகுநாத் ★ இளங்கோவன்

உங்களூர் தியேட்டருக்கு விரைவில் வருகிறது.

# சீர்திருத்த நாடகங்கள்

## (தோழர். எஸ். ஆர். சுப்பிரமணியம்)

அன்புமிக்க தலைவர் அவர்களே! C. N. அண்ணாத்துரை அவர்களே! இங்கு குழுமியிருக்கும் ஆர்வமிக்க நாடக அபிமானிகளே! உங்கள் எல்லோருக்கும் எனது வணக்கம் உரித்தாகுக.

இம்மகாநாட்டின் காரியதரிசிக்கு மாநாட்டில் கீழ்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றுமாறு நான் ஓர் தீர்மானம் அனுப்பி வைத்தேன். அத்தீர்மானத்தை மாநாட்டில் பிரேரேபித்து அதைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல அனுமதிவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தேன். என்னுடைய தீர்மானத்தை வரவேற்புக் கமிட்டியில் சமர்ப்பித்து விட்டதாகக் காரியதரிசியிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. ஆனால், அத்தீர்மானம் மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டதா; மாநாட்டில் அத்தீர்மானம் கொண்டுவரப்படுமா; என்பதைப்பற்றிய குறிப்பொன்றும் காரியதரிசியின் கடிதத்தில் இல்லை. தீர்மானம் கீழ்கண்டவாறு:—

"தற்போது நாடகக் கம்பெனிகளிலும், தனிப்பட்ட நாடகங்களிலும், புராண சம்பந்தமான மூட நம்பிக்கைகளையே அடிப்படையாகக் கொண்ட நாடகங்களே மலிந்து மக்கள் அறிவைப் பாழ்படுத்தி வருகின்றன. இம்முறை மாறிப் பகுத்தறிவை ஊட்டும்படியான சமூக சீர்திருத்த நாடகங்கள்; ஜாதிபேத ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண் மக்கள் காதல் மணம், கலப்பு மணம், விதவை மணம், மக்கள் பகுத்தறிவு வளர்ச்சி முதலியவைகளை நடத்தவேண்டுமென்று நடிகர்களையும், நாடகக் கம்பெனிகளையும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. இத்தகைய சீர்திருத்த நாடகங்களுக்கு மக்கள் ஆதரவு கொடுக்கும்படியும் கேட்டுக்கொள்ளுகிறது."

பெரியாரின் புரட்சிக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட முத்தமிழ் நுகர்வோர் சங்கத்தின் சார்பாக மாநாட்டுக்கு அனுப்பிய தீர்மானங்களையும் யான் கண்ணுற்றேன். அவையனைத்தும் என் தீர்மானத்தின் கருத்துக்கள் தாம் என்பது

வெள்ளிடை மலை. தலைவர் சர். சண்முகம் அவர்கள் புராணங்களை எரிப்பது தவறு என்றும், புராணங்களில் நல்லவையும் கலையும் இருக்கிறது, புளுகுகளும், பொய்யுரையும் இருக்கிறது என்றும் சொன்னார்கள்.

நாங்கள் அவரைப் போன்ற அறிவாளிகளைக் கேட்பது என்னவென்றால், உண்மையான கலை எது? பொய்யுரை எது எனப் பிரித்து நிர்ணயம் செய்து இது தமிழன் கலை, இது அறிவுக்குப் பொருத்தமானது, இது பொய்யுரை அறிவுக்குப் பொருத்தமானது அல்ல என்று பாகுபாடு செய்ய ஒரு கமிட்டியை ஏற்படுத்தித் தீர்மானம் செய்ய நாங்கள் சம்மதிக்கிறோம். ஆனால் கலை என்பதற்காக எங்களைச் சூத்திரன் என்று இழிவு செய்யும் எந்த நூலையும் எங்கள் கலை யென்பதாக நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம். சில புஸ்தகங்களை எரிப்பதால் உங்கள் நோக்கம் நிறைவேறுமா என்று கேட்கிறார் தலைவர். நாங்கள் சொல்லுகிறோம் அந்நூலை எரித்தால்தான் அதிலுள்ள அறிவுக்குப் பொருந்தாத ஆபாசங்கள் மக்களுக்குத் தெரியும். எங்கள் அதிருப்தியைக் காட்டவும் அது ஒரு சின்னம். அன்று காங்கிரஸ்காரர்கள் அன்னியத் துணியை உடுத்தக்கூடாது, வாங்கவும் கூடாது என்பதற்காக அன்னியத்துணிக் குவியல்களை எரித்தார்களல்லவா, எதற்காக? அதிருப்தியைக் காட்ட, மக்கள் கவனத்தைக் கவர, அது போலவே நாங்களும் எங்களை எங்கள் சமூகத்தை இழிவுசெய்யும் எந்த நூலையும் எரிக்கத்தான் போகிறோம். தலைவர் அவர்கள் ஒரு தலைப்பட்சமாக அபிப்பிராயம் கொள்ளாமல் நடு நிலைமையுடன் யோசித்துப் பார்க்கட்டும். ஒவ்வொரு நூலிலும் கலைபாகம் எது, பொய்யும் புளுகும் எது என்பதை நிர்ணயம் செய்யக் குறிப்பு இராமாயணம், பெரிய புராணத்தைப் பொறுத்தமட்டிலாவது ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இங்கு இம்மகா நாட்டைக் கூட்டிய அன்பர்கள் T. K. S. சகோதரர்கள் 1931—1932 ஆண்டுகளில் சமூக சீர்திருத்த நாடகங்களைத்தான் நடத்தி வந்தார்கள். அப்பொழுது மக்கள் ஆதரவு கம்மி. ஆனால் தற்பொழுது நவாப் இராஜமாணிக்கம் கம்பெனி இராமாயணம், கிருஷ்ணலீலா போன்ற நாடகங்களை நடத்திப் பெருத்த லாபம் சம்பாதிப்பதைப் பார்த்து T. K. S. சகோதரர்களும் புராண நாடகங்களை நடத்த

ஆரம்பித்து பெருத்த லாபமடைந்தார்கள். ஆனால் 10 வருடத்திற்கப்புறம் இப்பொழுது சீர்திருத்த நாடகங்களுக்கு நல்ல ஆதரவு இருக்கிறது என்பது தோழர் அண்ணாத்துரை நடத்தும் சந்திரோதய நாடகத்திற்கு ஈரோட்டில் ரூ. 4000 ஒரு நாடகத்திற்கு வசூலாயிற்று என்பது மூலம் விளங்கவில்லையா, தோழர் நகைச்சுவை அரசன் N. S. கிருஷ்ணன் அவர்கள் நடத்தும் சமூக சீர்திருத்தக் கதையாகிய கிந்தனார் சரித்திரத்துக்குக் கோட்டையூரில் கூடிய பதினாயிரக் கணக்கான மக்கள் ஆதரவு கொடுத்ததையும் பார்த்த பின்பு தற்பொழுது சீர்திருத்த நாடகங்களுக்கு மக்கள் நல்ல ஆதரவு கொடுக்கின்றனர் என்பது நன்றாக விளங்குகிறது. ஆகவே, இனியாகிலும் T. K. S. சகோதரர்கள் போன்றோர் மற்றுமுள்ள நடிகர்கள் நாடகக் கம்பெனிகள் சீர்திருத்த நாடகங்களையே நடத்தக் கேட்டுக்கொண்டு, மக்கள், தோழர் அண்ணாத்துரை அவர்களின் சந்திரோதயத்திற்கும், தோழர் N. S. கிருஷ்ணன் கிந்தனார் கதைக்கும் கொடுக்கும் ஆதரவைப் போலவே மற்றவர்களுக்கும் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.



## வாழ்த்து

செந்தமிழில் நல்ல சிறப்பொன் றுளதென்றால்
சந்தம் நடிப்பு சரித்திரந்தான் — இந்தவகை
மூன்றும் பொருந்துவது முத்தமிழில் நாடகத்தைப்
போன்று பிறிதில்லை நம்பு.

— திரு ரா. முருகேசக் கவிராயர்,
''நாடகாசிரியர்'' திண்டுக்கல்.

மிஸ்டர் பொதுஜனம் சொல்லுகிறார்.

கேளுங்கள்.

சினிமா புகழ்

**T. S. பாலையா அவர்களின்**

## ★ நக்ஷத்திர நாடகங்கள் ★

- லக்ஷிமிகாந்தன்
- இழந்த காதல்
- விமலா
- ஸ்ரீ கிருஷ்ண லீலா
- ஸ்ரீ சம்பூர்ண ராமாயணம்

அத்துடன்

T. S. பாலையா எழுதிய

- விவேகி

K. V. S. வாஸ் எழுதிய

- நக்கீரர்
- வால்மீகி
- கௌதம புத்தர்

★

உங்களூர் கொட்டகைக்கு

வரும் நாளை எதிர்பாருங்கள்

கேம்ப் — திருக்காட்டுப்பள்ளி.

# ஒழுக்கம் வேண்டும்

(சிதம்பரம் திரு என். தண்டபாணி பிள்ளை)

தமிழ் நாட்டில் ஆதி முதல் இயல், இசை, நாடகம் என மூன்றும் நம் முன்னோர்களால் நிறுவப்பெற்றுப் போற்றி முத்தமிழாக வளர்க்கப்பட்டு வந்தன. அவைகளில் இயற்றமிழ் இப்பொழுது தானே இயங்கிக் கொண்டிருக்கிறது. இசைத் தமிழ் பெருங் கிளர்ச்சிக்கும், உணர்ச்சிக்கும், முயற்சிக்கும் பிறகு பெருகிக்கொண்டு வருகின்றது. நாடகத் தமிழும் இம் மகாநாட்டின் மூலம் புத்துயிர்பெற்று பரவிவருமென்பதில் சந்தேகமில்லை. உலகமே நாடக மேடை. நமது ஆண்டவனே சதா நடனமாடும் ஸ்ரீமந் தில்லைக் கூத்தன் நடராஜன். எனவே, சரம், அசரமாகிய சூரியன், சந்திரன், பூமி, நவக்கோள்கள், நட்சத்திரங்கள் முதலியனவெல்லாம், ஒன்றையொன்று பற்றிநின்று ஆடிக்கொண்டும், ஓடிக்கொண்டும், மாறிக்கொண்டும் நிற்கின்றன.

என்போன்ற அரசியல் வாதிகளும் நடிகர்களே. நாங்கள் பட்டப்பகலில் பகிரங்க மேடையில், வெட்டவெளியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் சமயம், சமூகம், சீர்திருத்தம், அரசியல் கக்ஷிகளில் சேர்ந்து நாட்டில் நடித்து வருகின்றோம். நமது தலைவர் சர். R. K. சண்முகம் செட்டியார் உலக நடிகர். அவர் இந்தியாவில் மட்டுமல்ல, ஆங்கில நாடு, அமெரிக்க நாடு, முதலிய பல வெளிநாட்டு மேடைகளிலும் நடித்து நற்பெயர்பெற்று வந்திருக்கின்றனர். இத்யாதி காரணங்களால் நாங்களும், இரவில் விளக்கு வெளிச்சத்தில் கொட்டகைக்குள் நாடக மேடையில் நடிக்கும் உங்களுடனும், சினிமாப் படக்காட்சியில் நடிக்கும் ஏனையோர்களுடனும் சேர்ந்து "தமிழ் நாடகக் கலையை" முன்னுக்குக் கொண்டுவர முனைந்து முன்னிற்பது பெரிதும் போற்றத் தக்கதல்லவா?

உலகப் பெரியார் மகாத்மா காந்தியைத் தமிழ் நாட்டில் அறிந்தவர்களை விட, இங்குள்ள ஸ்ரீ M. K. தியாகராஜ பாகவதர்

N. S. கிருஷ்ணன், T. A. மதுரம், சுந்தராம்பாள், நவாப் இராஜ மாணிக்கம் போன்றவர்களை நன்ருகத் தெரிந்தவர்கள் ஆணிலும் பெண்ணிலும் அதிகம் உண்டு. ஆயினும், அரசியல் அல்லது மதத் தலைவர்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதையும் மதிப்பும், காட்டப்படும் அன்பும் நடிகர்களுக்கு மக்கள் செலுத்துவதில்லை. காரணம், அரசியல் வாதிகள் தன்னலமற்று தியாக மூர்த்திக ளாய் பிறர் நலத்திற்கே பாடுபடும் ஒழுக்கமுள்ளவர்கள். தமிழ் நாட்டு நடிகர்களும் இம்மாதிரி மதிப்பையும், அன்பையும் மக்க ளிடம் பெறவேண்டுமாயின், தாங்களும் கூடிய வரையில் ஒழுக்க சீலர்களாயும், சுயநலமற்று நாட்டின் நலத்தில் சிறிது பற்றுடை யவர்களாயும், அவசியம் நேரின் தியாகம் செய்யவும் தயாரா யுள்ளவர்களாயும், தமிழ் மொழி, தமிழ் நாடு, தமிழ் இசை, தமிழ் நாடகம், தமிழ் மக்கள் முதலியவைகளில் பற்றுக்கொண்டு தன் மதிப்பைக் காத்துவாழ முயற்சியுடன் முன்வரவேண்டும். பதி ஞயிரக் கணக்கான மக்கள் மகாத்மாவையும், மதுரத்தையும், கிருஷ்ணனையும் பார்க்க முன் வரலாம். ஆனல், அம்மக்கள் மகாத்மாவிற்கு ஒரு குறைஏற்படுமாயின் அதை உயிரைவிட்டும் நீக்க முன் வருவர்; நடிகர்களுக்குப் பெருங்குறை ஏற்படினும், எட்டநின்று கைகொட்டி எள்ளி நகையாடுவர். இதன் ரகசி யத்தை யறிந்து நடிகர்களும் சூட்சுமத்தைக் கடைபிடித்து ஒழுக்க முடையோராய், மக்களின் மனதில் மதிப்பிற்குரியவர் களாகத் தங்களைச் செய்து கொண்டு அதன் மூலம் நமது தமிழ் நாட்டையும், மொழியையும், இசையையும் நாடகக்கலையையும் ஒற்றுமையுடன் அபிவிருத்தி செய்வார்களாக.

★

## வாழ்த்து

தேவரும் போற்றுந் திருநாடு தென்னுட்டில்
மூவரும் கையாண்ட முத்தமிழாம் — யாவர்மகிழ்
ஒப்பிலாத் தமிழ் உயர்நாடகக்கலை
எப்போதும் வாழ்க இனிது.

— K. S. கருப்பையா,
மதுரை.

# வாழ்த்துச் செய்திகள்

ஸ்ரீ சக்கிரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்



.... .... .... .... மகாநாட்டுக்கு என்னுடைய மனப்பூர்வமான வாழ்த்து. எல்லாக் கலைகளையும் வளர்க்கவேண்டும். ஆனால், மக்கள் வாழ்க்கைக்கு அபாயம் வாராதவாறு சீலமும் நன்னடத்தையும் காப்பாற்றப்பட வேண்டும். கலை யென்று ஆரம்பித்து வெறும் வியாபாரத்தில் முடிந்து, அதில் மோசமும் துர்நடத்தையும் புகுந்து விடுவது, இந்த யுகத்தின் நிகழ்ச்சி முறை. அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. இதை மகாநாட்டில் கவனிக்கவேண்டும்.



கவிமணி
தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்

................நாடகம் ஆண்கள், பெண்கள், இளையோர், முதியோர், படித்தவர், படியாதவர் யாவருக்கும் நல்லறிவையூட்டு மென்பதில் யாதும் ஐயமில்லை. சமீபத்தில் ஸ்ரீமதி சரோஜனி தேவியார் ''நாடகசாலை சாதாரண மக்களின் சர்வகலாசாலை'' என்று கூறியிருக்கின்றனர். இது முற்றிலும் உண்மையே. கண்ணால் பார்க்கும் பொழுது ஏற்படக்கூடிய ஒரு உணர்ச்சி காதால் கேட்கும் பொழுது உண்டாக மாட்டாது. இதனாலேயே ஆங்கிலத்தில் One eye is worth two ears' என்னும் பழமொழி வழங்கி வருகிறது.

நாடகத்தமிழ், நாடகத்தமிழ் என்று கூறித் தமிழ் மக்கள் அனைவரும் பெருமை பாராட்டிக் கொள்வதுண்டு. ஆனால் தமிழ் மொழியில் குறவஞ்சி, பள்ளு முதலியவைகளைத் தவிர பாத்திரங்களும் பிறவும் வகுத்து வழங்கும் 'சாகுந்தலம்' 'ஹாம்லெட்' முதலிய நாடகங்களைப் போன்ற நாடகங்கள் ஆதி காலத்திலே இருந்தனவோ என்பது சந்தேகமே. பண்டிதர்களைக் கேட்டால் நம் இலக்கியச் செல்வங்களெல்லாம் கபாட புரத்

தைக் கடல் கொண்டு போனதோடு போய்விட்டன என்று கூறிவாயடைத்து விடுகின்றனர்; கடல் கொண்டு போன நாடக நூல்கள் இனிகரையேறி வரப்போவதில்லை. சிலப்பதிகாரம் அரங் கேற்று காதைக்கு அடியார்க்கு நல்லார் எழுதியிருக்கும் உரைய்யை அப்படியே திருப்பித்திருப்பிச் சொல்லிப் பழம் பெருமை பாராட்டிக் கொள்வதினுலும் பயன்பெற மாட்டோம். இன்று தமிழில் நல்ல நாடகங்கள் இல்லாத குறை, குறை யாகவே இருக்கின்றது. அதை நிவிர்த்தி செய்யவேண்டுவது தமிழறிஞர்களின் கடமையாகும். இதற்காக ராவ்பகதூர். சம் பந்த முதலியார் அவர்கள், நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை அவர் கள், முத்தமிழ்க் கலா வித்வரத்தின டி. கே. எஸ். சகோதரர்கள் முதலியோர் செய்துவரும் தொண்டு மிகவும் போற்றற் குரியதாம்.

தற்காலம் தமிழில் வெளிவரும் நாடகங்கள் பெரும்பாலும் புராணக் கதைகளைத் தழுவி எழுதப்பட்டவைகளாகவே இருக் கின்றன. 'இப்ஸன்' (Ibsen) 'பர்ணுட்ஷா' (Bernardshaw) முதலிய மேலைநாட்டு ஆசிரியர்கள் எழுதிவரும் நாடகங்களைப் போன்ற சமுதாய முன்னேற்ற நாடகங்களும் வெளிவர வேண்டு வது மிக்க அவசியமாம்.

நாடகக்கலை அபிவிருத்தி அடைய வேண்டுமானுல் நாடக ஆசிரியர்கள் மட்டுமல்ல. நடிகர்களும் நல்ல தேர்ச்சியுள்ளவர் களாயிருக்க வேண்டும். ஒரு நடிகன் ஒரு பார்வையினுல் அல்லது ஸ்வர பேதத்தினுல் விளக்கும் உண்மையை ஒரு ஆசிரி யர் பத்துப்பக்கங்கள் எழுதினுலும் கூட விளக்கிக் கொள்ள மாட்டார். மேனுட்டு நாடகாசிரியர் ஒருவர் நாடகம் பார்க்கச் சென்றிருந்தார். அன்று அவரால் எழுதப்பட்ட கதையொன்று தேர்ச்சியுள்ள நடிகர்களால் அங்கு நடிக்கப்பட்டது. நடிப்பைப் பார்த்ததும் அவர் பிரமித்து விட்டார். ஆஹா! நான் நினைத்திராத எவ்வளவோ விஷயங்கள் இந்த நடிப்பிலிருந்து விளங்குகின்ற னவே என்று ஆச்சரியப்பட்டாராம். ஆதலால் நடிகர்களும் நாடகக்கலையின் அபிவிருத்தியின் பொருட்டுக் கண்ணும் கருத் துமாக இருக்க வேண்டியது அவசியமாம்.

நாடகம் பார்க்கும் ரஸிகர்களும் குண குற்றங்களை எல்லாம் பட்சபாத மின்றி எடுத்துக் கூற வேண்டும். நாடகக் கலையால்

ஜனங்களும் ஜனங்களுடைய ஆராய்ச்சி அறிவினால் நாடகக் கலையும் திருந்தி வருமென்பது உறுதி.

ஆதிகாலத்தில் தமிழில் நாடகம் இருந்ததோ இல்லையோ என்ற ஆராய்ச்சி அவசியமேயில்லை; இப்பொழுது தரித்திரனாயிருக்கிற ஒருவன் அவனுடைய முப்பாட்டன் கப்பலோடி வியாபாரியாயிருந்தான் என்ற கதையைக் கூறிக்கொண்டிருப்பதனால் யாதும் பயனுண்டா? தரித்திரன் முயற்சி செய்து குபேரன் ஆவதில் ஆட்சேப மில்லை.

ஈரோட்டில் தமிழ் நாடகக்கலை அபிவிருத்தி மகாநாடு நம் தமிழ்நாட்டுப் பெரியார் ஸர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடப்பதை அறிந்து அளவிலா மகிழ்ச்சி அடைகிறேன். அது இனிது நிறைவேற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராகுக!

●

## சுவாமி சுத்தானந்த பாரதியார்

ஈரோட்டில் நாடக மகாநாடு நடப்பது தமிழின் மறுமலர்ச்சிக்கு ஆக்கமளிக்கும்; மாநாட்டை அணி செய்யும் நடிக மணிகளுக்கும், கலைமணிகளுக்கும், அன்பு, அன்பு. நாடகம் ஆடும் வேதம்; அரங்கம் அறத்தின் நவரசச் சோலை; நாகரிகத்தின் தாயகம். தமிழ்க் குயில்களும், மயில்களும், கிளிகளும் அச்சோலையில் அமுதக்கனியுண்டு கலையின்பந் தந்து வாழ்க! வாழ்க!! மேடை புத்துயிர் பெறுக!

பாட்டும் பரதமும் பண்புள்ள நாடகமும்
நாட்டுக்கு நல்ல பயன்.

●

## திரு கைவல்ய சாமியார்

வணக்கம். ஈரோட்டிற்கு வரவேண்டுமென்றே இருந்தேன். கான்பரன்ஸின் நலன்களும் ஔவை நாடகமும் கண்டு சந்தோஷப்படலா மென்றுதான் நினைத்திருந்தேன். மூன்று நாள் காய்ச்சலும், முதுமையும் சேர்ந்து வருவதைத் தடுத்து விட்டது..........................

.... .... .... அவரவர்கள் நியாயம் அவரவர்களுக்குச் சொந்தம். அளந்து இடை போட்டு எடுத்த நியாயம் எல்லோருக்கும் சொந்தம். தோட்டத்தில் பழுத்த பழத்தைச் சாப்பிட வேண்டுமானால், தோட்டக்காரனிலிருந்து தோட்டத்து எஜமான் பெண்ஜாதி வரையிலும் சலுகை வேண்டும். இதற்கே இப்படியானால், உங்கள் உளம் பூத்து காய்த்த காய், வெம்பாது மூத்துப் பழுத்து கையில் கிடைத்து உண்பதற்கு எத்தனையோ கஷ்டங்களெல்லாம் இருக்காதா? இருக்குமே. உங்கள் தோட்டமோ இப்பொழுது தான் பூத்திருக்கிறது. பழமாகிப் பறித்துத் தின்பதற்குக் கஷ்டமும் சலுகையும் வந்துதான் தீரும். நாளுமாகும். அதற்குள் நெஞ்சையும், தோளையும், உதட்டையும் தொடாமல் ஒன்று சேர்ந்து கொள்ளுங்கள். ஒன்றாகவே இருங்கள். எல்லோருடைய எண்ணமும் ஒன்று தான் என்பதை எல்லோரும் தெரிந்து கொள்ளுங்கள். பழம் எல்லோருக்கும் சொந்தம். எல்லோருக்கும் பங்குண்டு. அதற்குள் பூவைத் துவையலுக்கும், பிஞ்சை ஊறுகாயிக்கும் பிடுங்கி விடாதீர்கள்.

சுக துக்கங்களில் நன்மை தீமைகளுமிருக்குமாம். அதைத் தெரிந்து சகிக்கும் பொறுப்பும், சக்தியும் யாரிடமிருக்கிறதோ அவர்கள் தான் பழம் தின்பார்கள்.

★

## செய்தியனுப்பிய மற்றும் பல பெரியார்கள்.

உயர்திரு ஸர். பி. டி. ராஜன் அவர்கள், மதுரை

,, கான் பகதூர் P. கலிபுல்லா சாஹிப் அவர்கள்,

,, திவான் பகதூர் C. S. ரத்தினசபாபதி முதலியார் அவர்கள், கோவை

,, ராவ்பகதூர் C. ராமாநுஜாச்சாரி அவர்கள், சென்னை

,, V. பழனிசாமி நாயுடு அவர்கள், கோயமுத்தூர்

,, S. A. ரங்கசாமி அவர்கள், போடிநாயக்கனூர்

,, E. M. கோபாலகிருஷ்ணக் கோன் அவர்கள், மதுரை

,, T. S. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், கரூர்

,, A. சக்கரவர்த்தி B.A., அவர்கள், தஞ்சாவூர்

,, சொ. முருகப்பா அவர்கள், காரைக்குடி

,, P. செல்வராஜ் அவர்கள், சென்னை

,, K. V. சந்தானகிருஷ்ண நாயுடு அவர்கள், நாடக ஆசிரியர், சென்னை

,, T. காசிநாதன் அவர்கள், நடராஜபுரம், திருச்சி

,, ஆசிரியர் அவர்கள், "பாரத தேவி" சென்னை

,, பழனிச் செட்டியார் அவர்கள், மண்டி, திண்டிவனம்

,, மகாலிங்க முதலியார் அவர்கள், ஆசிரியர், "தேவி"

,, K. கருப்பண்ணக் கவுடர் அவர்கள், நாமக்கல்

,, ச. சு. சங்கரலிங்கக் கவிராயர் அவர்கள், நாடக ஆசிரியர், சென்னை

,, வாதூல சு. ராமசாமி ஐயர் அவர்கள், ஆத்தூர்

,, M. சோமசுந்தரம் அவர்கள், ஜுபிடர் பிக்சர்ஸ்,

திருமதி K. L. V. வசந்தா, சினிமா நடிகை, சேலம்

,, M. S. சுந்தரா அவர்கள், நடிகை, மதுரை

உயர்திரு சிவானந்தம் அவர்கள், ஒட்டன்சத்திரம்

,, M. R. சித்தையா அவர்கள், சேலம்

,, M. K. ராதா அவர்கள், சினிமா நடிகர், சென்னை

,, வெ. ந. நாராயணன் அவர்கள், நாகர்கோவில்

,, சி. உமைதாணு அவர்கள், சென்னை

,, J. R. ரங்கராஜு அவர்கள், சென்னை

,, வரகவி அ. சுப்பிரமணிய பாரதி அவர்கள்

# தலைவர் முடிவுரை

நான் இந்த மகாநாட்டுக்கு காலையிலே வந்ததும், சில பேர் என்னிடம் வந்திருந்து, இந்த மகாநாட்டிலே ஏதோ கலகம் விளையப்போவதாகவும், மகாநாடு கலைக்கப்பட்டுவிடப் போவதாகவும் சொன்னார்கள். யார் இவ்விதம் செய்யப் போகிறார்கள் என்று நான் கேட்டேன், அவர்கள் சிலருடைய பெயரைக் குறிப்பிட்டனர். உடனே நான், அப்படி எல்லாம் அவர்கள் நடக்கமாட்டார்கள் என்று கூறினேன். மகாநாடு, அமைதியாக நடைபெற்றது, பல அரிய சொற்பொழிவுகள் நடைபெற்றன. நாடகக்கலை அபிவிருத்திபற்றிப். பலர் பேசினார்கள். நாடகத் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கு நல்ல சம்பளம்தரப்படவேண்டும் என்பதுபற்றிப் பேசப்பட்டது. அது அவசியமான காரியந்தான். நாடகக்காரர் என்றால், முன்பெல்லாம் மதிப்பு இருந்ததில்லை, அது இப்போது மாறி விட்டது. நடிகர்கள் பொதுத்தொண்டு செய்பவர்கள் என்ற எண்ணம் வளர்ந்திருக்கிறது. இது மிக நல்லது. இப்போது ராவ்பகதூர் சம்பந்த முதலியார், M. K. T. பாகவதர், M. N. M. பாவலர் இவர்கட்கு முறையே "நாடகப் பேராசிரியர்", "இசை நாடக ஒளி", "நாடகமணி" என்று பட்டங்கள் வழங்கப்பட்டன. பட்டங்கள் வழங்கும் அதிகாரத்தைச் சர்க்கார் எனக்கு அளித்தால், நான் சர், திவான்பகதூர் போன்ற பட்டங்களை, நமது நடிகர்களுக்கு அளிப்பேன். மேனாடுகளிலே சிறந்த நடிகர்களின் சேவை பாராட்டப்பட்டு, அவர்களுக்கு உயர்ந்த பட்டங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

நண்பர் அண்ணாத்துரைக்கும் எனக்கும் ஒரு அபிப் பிராயபேதமும் இல்லை. மூடப் பழக்க வழக்கங்கள் ஒழிக்கப் படவேண்டும் என்று முன்பு சொல்லிக்கொண்டிருந்தவன் தான் நான். சீர்திருத்தம் வேண்டும் என்பதிலே இப்போதும், எனக்கும் நண்பர் அண்ணாத்துரைக்கும் அபிப்பிராய பேதம் ஒன்றும் கிடையாது. அதை அவரே எடுத்துக்கூறினார். நாடகங்களிலே, புராணங்களே கதைகளாக இன்று அமைந்துள்ளன. இது மாறவேண்டியதுதான். வாழ்க்கையைச் சித்தரிக்கும் புதிய, சீர்திருத்த நாடகங்கள் நடத்தப்பட வேண்டும். ஷேக்ஸ்பியர் அருமையான நாடகங்கள் ஒழுதி யிருக்கிறார். என்றபோதிலும், இப்போது இலண்டன் நாடகக் கொட்டகைகளிலே, அந்த நாடகங்களையே நடத்திக்கொண்டு இருக்கிறார்களா? புதிய இப்போது எழுதப்பட்ட நாடகங்கள்

பலவற்றை அங்கு நடத்துகிறார்கள், நமது சம்பந்த முதலியார் அவர்கள் பல புதிய நாடகங்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். எத்தனை நாடகக் கம்பெனிகள் அந்த நாடகங்களைப் பயன்படுத்திக்கொண்டன? வெறும் புராணமயமாக நாடகங்கள் இருந்து பயனில்லை. இது விஷயமாக நண்பர்கள் கூறியது மிகச்சரியானதே யாகும். சீர்திருத்தக் கொள்கை விஷயமாக தான் பேசியது, நான் முன்பு செய்து வந்த பிரசாரத்தினால்தான் என்று, நண்பர் அண்ணாத்துரை கூறினார். அது உண்மை. நண்பர் அண்ணாத்துரை கொஞ்சம் குருவுக்கு மிஞ்சிய சீடராகி விட்டார். ஆனால் அப்படிப்பட்ட சீடர் இல்லாவிட்டால் குருவும் பிற்போக்காகி விடக்கூடும். நாடு முன்னேற வேண்டுமென்றால் இத்தகைய சீடர்கள்தான் அவசியம் வேண்டும். நாடகக்கலை மகாநாட்டிலே இவ்வளவு சமுதாயச் சீர்திருத்த விஷயம் பேசப் படுவானேன் என்று சந்தேகம் உண்டாகலாம். இது சகஜம். இந்த மகாநாட்டிலே சமூக சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசவேண்டியது அவசியம். வாழ்க்கையைச் சித்தரிக்க வேண்டியதுதானே நாடகத்தின் கருத்து. ஆகவே, சமூகத்திலே புதிய புதிய கருத்துகள் தோன்றும்போது பழய கருத்தைக் கொண்ட நாடகங்களே நடத்தப்பட்டு வந்தால் பார்ப்பவருக்குத் திருப்தி ஏற்படுவதில்லை. கருத்து மாறுவதுபோல் நாடகங்களும் புதிது புதிதாக மாற வேண்டும். வாழ்க்கையை விளக்கும் நாடகங்கள் ஆயிரக் கணக்கிலே வெளியிட இடமிருக்கிறது. தரித்திரம் இருக்கும் வரையில் கலைகூடத் தேவையில்லை என்று நான் கூறுவேன். ஆகவே, நாடகத் தொழிலாளரின் நலன்களைக் கவனிக்க வேண்டும். சீர்திருத்த நாடகங்கள் நடத்தப்பட வேண்டும். நண்பர் அண்ணாத்துரை "சந்திரோதயம்" என்ற நாடகம் எழுதி நடத்திக் கொண்டு வருகிறார். அதைப்போல, ஒன்று போதுமா? நூற்றுக் கணக்காக எழுதி நடிக்க வேண்டும். யாரும் நடிக்க முன்வரா விட்டால் நண்பர் அண்ணாத்துரை எழுதும் நாடகத்தில் நான் நடிக்கிறேன்.

இந்த மகா நாட்டை இவ்வளவு நன்றாக நடத்திய நண்பர்களுக்கு என் நன்றியறிதலைக் கூறிக்கொண்டு என் முடிவுரையை நிறுத்திக் கொள்கிறேன்.

# நன்றி கூறல்

நகைச்சுவைச் செல்வன்

**T. N. சிவதாணு, செயலாளர்**



நாடகக் கலாபிமானிகளே,

எனது தோழர் மதுரை M. கருப்பையா அவர்கள் நாடகக் கலை மகாநாடு ஒன்று நடத்தவேண்டுமென்று என்னிடம் கூறினார்; நானும் சற்று யோசித்தேன்; இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவும் தமிழ் மொழிக்குள் அடங்கியிருக்க, இயலுக்கும், இசைக்கும் மாத்திரம் ஆங்காங்கு மாநாடுகள் நடைபெறுகிறதே, நாடக வளர்ச்சிக்கென்று நாம் என் ஒரு தனி மாநாடு கூட்டக்கூடாதென்று மூளையில் கேள்வி பிறந்தது. அதன் முடிவு தான் இந்த "நாடகக்கலை அபிவிருத்தி மாநாடு."

நாங்கள் போட்ட திட்டம் சிறிது. அது நாளடைவில் விரிவடைந்து ஒரு மாகாண மாநாடாகவே ஆகிவிட்டது கண்டு என் உள்ளம் பூரிப்படைகிறது. நாடகக்கலை வளர்ச்சியில் தமிழ்

மக்கள் எவ்வளவு ஆர்வம் கொண்டிருக்கிறார்களென்பது இம் மாநாட்டின் மூலம் நன்கு விளங்கிவிட்டது.

மாநாட்டுக்குச் செயலாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்பு பயந்த நான், இப்பொழுது மகிழ்ச்சியுடன் தலை நிமிர்ந்து நிற்கிறேன். இவ்வளவு பெருமைக்கும் காரணமாக மாநாட்டுக்கு அடிகோலியவரும், எனது கூட்டுச் செயலாளருமான தோழர் M. கருப்பையா அவர்களுக்கு முதலில் மனமார்ந்த வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.

இந்திய சட்டசபைத் தலைவரா யிருந்து தொண்டாற்றிய பெரியார் சர். R. K. சண்முகம் செட்டியார் அவர்கள் இம்மாநாட்டுக்குத் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டது பெரும் பாக்கியமென்றே கருதவேண்டும். விவாதத்துக் கிடமாயிருந்த இம் மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் கொடுத்த அவர்களுக்கு வரவேற்புக் கழகத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தனது வாழ்க்கை முழுதும் நாடகக்கலை வளர்ச்சிக்கு உழைத்த நமது 'நாடகப் பேராசிரியர்' ராவ்பகதூர் P. சம்பந்த முதலியார் அவர்கள், தமது தள்ளாத வயதிலும் ஊக்கம் குன்றாது நாடகக்கலையின்பால் கொண்டுள்ள ஆர்வமேலீட்டால் இங்கு வந்து தமிழ்க் கொடியை ஏற்றிவைத்து மாநாட்டை கௌரவித்தது மிகவும் பாராட்டற்குரியது; அவர்களுக்கும் கழகத்தின் சார்பில் நன்றி.

மூச்சுவிடக்கூட நேரமில்லாமல் பேசும் படவுடகில் சஞ்சரித்துவரும் 'இசை நாடக ஒளி' M. K. தியாகராஜ பாகவதர் அவர்கள் தனது பழைய மேடையைச் சிறப்பிக்கும் முறையில் முன் வந்து மகாநாட்டைத் திறந்து வைத்தமைக்காக மனமார்ந்த நன்றி.

நாடகாசிரியர்களின் திருவுருவப் படங்களைத் திறந்துவைத்த "நாடக மணிக்"கும் நடிக மணிக்கும் கழகத்தின் சார்பில் நன்றி.

எங்கள் அழைப்பை அலட்சியம் செய்யாது, தமது பல அலுவல்களினிடையே இங்கு வந்து சொற்பொழிவாற்றிய அன்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.

மாநாடு நடைபெறுவதற்கு இடமளித்த கான்சாகிப் K. A. ஷேக்தாவுத் சாயபு அவர்கட்கும், பிரதிநிதிகள் தங்குவதற்குத் தமது பங்களாவைக் கொடுத்துதவிப் பல்வகையிலும் பேருதவி புரிந்த பழய கோட்டை பட்டக்காரர் அவர்கட்கும், மாநாட்டிற் கென்று தனியாக 'ஔவையார்' நாடகம் நடத்தித்தர ஒப்புக் கொண்ட T. K. S. சகோதரர்களுக்கும் கழகத்தாரின் நன்றி.

வரவேற்புக் கழக நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு மாநாட்டை மிக சிறப்பாக நடத்திய நகரப் பிரமுகர்களுக்கு, உங்களெல்லோருடைய சார்பிலும் எனது நன்றி.

எங்களுடன் தோளோடு தோள் நின்று ஒத்துழைத்த ஈரோடு நகரசபைச் சிப்பந்திகளுக்கும், லண்டன் மிஷன் பாடசாலை மாணவர்களுக்கும், மதுரை ஸ்ரீ பால ஷண்முகானந்த சபைத் தொழிலாளர்கட்கும் மனப்பூர்வமான நன்றி.

மாநாட்டுக்கு வாழ்த்துச் செய்தி யனுப்பிய பெரியோர்களுக்கும், போக்கு வரத்து வசதிகள் இல்லாத இன்றைய நிலைமையில், தமிழ் நாட்டின் பல பகுதிகளிலு மிருந்து கலை உணர்ச்சியால் உந்தப்பட்டு இங்கு வந்து மாநாட்டைச் சிறப்பித்த உங்களெல்லோருக்கும், அன்பு நிறைந்த வணக்கத்தைச் செலுத்துகின்றோம்.

இம்மாநாடு எங்கள் முதல் முயற்சி; இயன்ற வரையில் பாடுபட்டோம்; குறைகள் பல இருக்கலாம்; நன்றி கூறுவதிலும் சிலரை மறதியாக விட்டிருக்கலாம்; அப்படி யிருந்தால் எங்களை மன்னிக்குமாறு கேட்டுக்கொண்டு, மீண்டும் எல்லோருக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

நாடகக்கலை உலகில் மறுமலர்ச்சி

★

உன்னத சீன்கள்! கருத்தைக் கவரும் நடிப்பு!!

புளியமாநகர்

ஸ்ரீ பரமானந்த பாஸ்கர கான

# P. K. S.

★ ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி ★

முக்கிய நாடகங்கள்

சரஸ்வதி சபதம் (உரிமை பெற்றது)

ஸ்ரீ ராம லீலா

சிவசக்தி லீலா

ஸ்ரீ நாரத லீலா (உரிமை பெற்றது)

ஸ்ரீ கிருஷ்ண லீலா

கண்டிராஜா

முகாம்: **திண்டுக்கல்**

'பழனி' ராஜா தியேட்டரில்

விரைவில் நடைபெறும்.

●

நாடகாசிரியர் :: புரொப்ரைட்டர்

எம். கே. ராஜப்பா

P. K. சுப்பா ரெட்டியார்

அநுபந்தம்

# தமிழர் நாடக வளர்ச்சி

(யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்)



இப்போது தமிழ் நாட்டில் ஏராளமான நடிகரும், நடிகைகளும் தோன்றியிருக்கிறார்கள்; இவர்கள் தங்கள் முழுமனமும் ஊன்றிப் புகழ்வானில் மின்னிப் பறக்கப் பாடுபடுகிறார்கள். மற்றெந்த நாட்டு நடிகருக்கும் நமது தமிழ்நடிகர் இம்மியும் தாழ்ந்தவர்களில்லை. இதில் ஒவ்வொரு தமிழரும் பெருமைகொள்ளலாம்.

இன்று நமது நாட்டில் கலைவெள்ளம் புரண்டோடுகிறது. காவியம், ஓவியம், பாட்டு, நடிப்பு, நடனம் இவை நுண்கலைகள்; பாட்டு, நடனம், நடிப்பு ஆகிய மூன்று கலைகளிலும் தமிழகம் முன்னணியில் இருக்கிறது; இருந்தது; எப்போதும் இருக்கும். மேற்சொன்ன கலைகளெல்லாம் கூடும் இடம் நாடக மேடை.

ஒரு நாட்டு நாகரிகம் நாடக மேடையில் நன்கு விளங்கும். பாரிஸ் மேடையில் பிரெஞ்சு நாகரிகத்தைக் காணலாம்; இலண்டன் மேடையில் ஆங்கில நாகரிகத்தைக் காணலாம்; ஹாலி

உட்டில் அமெரிக்க நாகரிகத்தைக் காணலாம். நமது தமிழ் மேடைகளும் தமிழர் நாகரிக விளக்கமா யிருக்கவேண்டும். முன்னே யிருந்தது; இப்போது கொஞ்சம் கலப்புத்தான்; இனித் திருந்தவேண்டும்.

தமிழ் நாட்டு நாடகத்தின் கதை மிகப் பெரிது. ஷேக்ஸ் பியரும் மோலியரும் நாடகம் எழுதுவதற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே தமிழர் நாடகம் நடித்தனர். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே இங்கே நாடகக்கலை வளம்பெற்றிருந்தது. காளிதாசன் சாகுந்தலம் எழுது முன்பே நம்மவர் அல்லி நாடகம் நடித்தனர். கரிகால்வளவன் கூன்பாண்டியன், சேரன் செங்குட்டுவன் முதலிய மூவேந்தர் கவிதை, ஆட்டம், பாட்டம், நடிப்பு ஆகியவைகளைப் போற்றி வளர்த்தனர். சிலப்பதிகாரம், கம்பராமாயணம், சிந்தாமணி முதலிய பழங்காவியங்கள் நாடகச் சுவை ததும்புகின்றன. அக் கால மன்னர் தமது வீரச் செயல்களைக் கவிதையாகவும் நாடக மாகவும் செய்யச் சொல்லித் தக்க புலவர்களை ஆதரித்து நடிக்கச் செய்தனர். பொதுஜன உத்ஸாகத்திற்கு நாடகங்களை அவசிய மாக்கினர். இராஜராஜன் காலத்தில் ஏராளமான நாடகங்களும், நடனகீதங்களும் நமது நாட்டில் உண்டாயின. பிறகு நாட்டில் இருள் படர்ந்தது; வடக்கே எழுந்த சண்டைகள் தெற்கே திரும்பி, நமது தமிழகத்தில் போர்க் கொடுமைகள் வலுத்தன. நம்மவர் மேடைக் கலையை விட்டுப் போர்க்களத்தில் வீரக்கலை பயின்றனர். ஆயினும் நவராத்திரி, பொங்கல், தேர் திருவிழா நாட்களில் நாடகங்கள் நடைபெற்றே வந்தன.

சென்ற நூற்றுண்டில் நாடகக்கலை உச்ச நிலையிலிருந்தது. முதன்மையாக மதுரை, இராமனுதபுரம், தஞ்சை ஜில்லாக்களில் அரிய நடிகமணிகள் விளங்கினர். நாடகப் பாடல்கள் அமைத் தல் அக்காலம் ஓர் அரிய கலையாக விளங்கியது. இன்னார் பாடிய நாடகம் என்று பொதுஜனங்கள் ஓர் நாடகத்தைப் போற்றினர். அக்கால நாடகங்கள் பெரும்பாலும் மனிதருக்கு உயர்ந்த ஒழுக் கத்தைத் தந்தன. உதாரணமாக கோவலன் கதை, அரிச்சந்திர நாடகம், இராம நாடகம் இவை நடக்காத ஊர் இல்லை. இவற் றுடன் குமாரசம்பவம், காமதகனம், வள்ளி கல்யாணம், நல்ல தங்காள் சரித்திரம், பாண்டவர் வனவாசம், விராடபர்வம், கிருஷ்

ணன் தூது, தேசிங்கு ராஜன் சரித்திரம், மதுரைவீரன் சரித்திரம், பாரிஜாத புஷ்பஹரணம், குலேபகாவலி, சதாரம், தூக்குத்தூக்கி, லலிதாங்கி முதலிய பல நாடகங்கள் நடந்தன.

கலைகளில் நாடகக் கலையே சிறந்தது; அதில் காவியம், ஓவியம் பாட்டு, நடனம், பேச்சு ஆகிய எல்லாம் ஒருங்கே வளர இட முண்டு. ஆதலால் நீண்ட காலமாக நமது நாட்டார் நாடகத் திற்கு ஒரு தனி மதிப்பு அளித்து வந்தனர்.

சிறுவயதில் எங்களூர் சிவன் கோயிலிலும் திரௌபதியம் மன் கோயிலிலும் நாடகம் நடக்கும். சிறந்த தமிழ்—வட மொழிப் புலவர்கள் வேடங்கட்டி ஆடுவார்கள். இக்காலத்தைப் போல, திரைக் காட்சிகளும் பின்னணிகளும் அக்காலம் இல்லை. அதிகமில்லை; என்ருலும் நடிப்பு இயற்கையாகவே இருக்கும் ஒருமுறை திரௌபதையம்மன் கோயிலில் அரிச்சந்திர நாடகம் நடந்தது. அரிச்சந்திரனை நட்சத்திரேயன் கிட்டி போடும்போது ஒரு சாஹேபு வெகுண்டெழுந்து, மேடைக்கு ஓடினார். நட்சத் திரேயன் கையைப் பிடித்துத் தள்ளி, "அரே பாய், நான் உன் பணத்தைத் தந்து விடுகிறேன்; அரிச்சந்திரனை வதைக்காதே" என்று கண்டிப்பாகச் சொன்னார். மயான காண்டத்தில் லோகி தாசன் பிணத்தைச் சுட அரிச்சந்திரத் தோட்டி சந்திரமதியிடம் பணம்கேட்ட கட்டத்தில் நாடகம்பார்த்த பெண்கள் ஐயையோ கொடுமை கொடுமை என்று அலறிவிட்டார்கள். ஒருமுறை சிவன் கோயிலில் பிரகலாத நாடகம் நடந்தது; நரசிங்கம் இரணி யனைக் கிழிக்கும்போது, ஒரு தாத்தாவுக்கு ஆவேசம் வந்து ஹா ஹா ஒழிந்தான் நாஸ்திகன் என்று கூவிக் கூத்தாடினார். நல்ல தங்காள் பஞ்சத்தால் வருந்தும் பரிதாபத்தைக் கண்டு ஒரு தரம் சபை முழுதும் கண்ணீர் மயமானது. இப்படி உணர்ச்சி எழுப் பக்கூடிய நடிகர் அக்காலம் இருந்தனர். ஒவ்வொரு நடிகரும் ஒரு வேடத்தில் ஒப்பற்று விளங்கினர். ஒருவரை மட்டும் இங்கே குறிக்கிறேன்.

அரிச்சந்திர நாடகம் சிவசாமி பெயர் அக்காலம் எல்லாருக் கும் தெரியும். சிவசாமி கட்டுமஸ்தான ஆள்; தமிழில், நல்ல தமிழில் நிரம்பப் புலமை பெற்ற கவி; அகார சாதனம் செய்து

குரலை நன்றாக வளைத்து தசவித கமகமும் பேசும்படி பழக்கியவர். அவர் ஏகபத்தினி விரதர், பிறமாதரைக் கனவிலும் விரும்புவதில்லை. ஊன், மது, புகையிலை, சுருட்டு, வீண் அரட்டை இவற்றை வெறுப்பவர். பரம சிவ பக்தர்; ஆசார சீலர்; அவர் சுமார் இருபது நடிகரைப் பயிற்றிக் கிராமந்தோறும் நாடகமாடிக் கலைக்கே வாழ்ந்தார். பாட்டு வசனம் இரண்டும் தாமே எழுதி நடிகருக்கு நன்றாகப் பழக்கித் தனக்குத் திருப்தியான பிறகே, ஒரு நாடகத்தை அரங்கேற்றுவார். சாயங்காலம் அனுஷ்டானங்களை முடித்து சிவபூஜை செய்து அவர் மேடைக்கு வந்து வேடங்கட்டுவார். சரியாக எட்டரை மணிக்கெல்லாம் நாடகம் தொடங்குவார். சக்தி சிவனை நாம் பக்தியாய் பணிவோமே என்ற பாட்டுத் தொடங்கும்போது திரை உயரும்; உமாபதியின் படத்திற்கு மங்கள ஹாரத்தி நடக்கும்; பிறகு சூத்திரதார் வந்து முன்னுரை சொல்லி, கதைச் சுருக்கத்தைச் சொல்லுவார்; உடனே விகடன் வந்து ஜனங்களை வயிறு குலுங்கச் சிரிக்கச் செய்வான். அதனால் சபைக்கு நாடகத்தில் அதிகக் கவனம் உண்டாகும். அதன் பிறகு அரச தர்பார்; பிறகு கதை மளமள வென்று நடக்கும். சிவசாமி ஆண் வேடம் பெண் வேடம் இரண்டும் போட்டு இயற்கையாக நடிப்பார். அவர் பெண் வேடங் கட்டினால் பகலில் பார்த்தாற்கூடப் பெண்ணென்றே நினைப்போம். பேச்சு, குலுக்கு, நடையுடை எல்லாம் அவ்வளவு பொருத்தமாகயிருக்கும். ஆனால் அக்கால நாடகத்தில் வசனம் குறைவு; பாட்டே அதிகம். ஒரு விருத்தம்பாடிப் பிறகு தாளங்கொட்டிப் பாட்டுத் தொடங்கும். பின்பாட்டுக்காரன் முன்பாட்டை வாங்கிப் பாடுவான். மேளக்கட்டு கச்சிதமாக யிருக்கும். இக்காலத்தில் ஏராளமான கருவிகளும் மின்சார ஏற்பாடுகளும் நமக்கு வாய்த்துள்ளன; அக்காலத்தில் தீவர்த்தி வெளிச்சத்திலே தான் அரிதாரம் பூசி நாடகம் நடந்தது. எனினும் சபையோர் உள்ளத்தை அந்நாடகம் கொள்ளைகொண்டது. ஒருதரம் அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்தால் ஆயுளெல்லாம் மறக்கமுடியாது. கதையின் கருத்து சபையின் உள்ளத்திற் பாயும். மேடையில் கேட்ட பாடல்கள் வீடுகளில் முழங்கும். அப்பாடல்கள் உயர்ந்த நீதிநெறி புகட்டும். அக்கால நாடகங்கள் ஜனசமுதாயத்திற்கு ஒரு கல்விப் பயனளித்தன. இருபாலாரும் ஆவலுடன் கதை, நாடகங்களுக்குச் சென்றனர். அக்கால நாடகப் பாடல்

கள் சில அச்சேறி வழங்கின. அவற்றை மறுபடி அச்சிட்டுப் பரப்பவேண்டும்.

இந்த நூற்றுண்டிலும் நாடகமேடை சீர்குலேயாமலே நடந்தது. சுந்தரராவ், கோபால் ராவ், பரமேசையர், ஜானகி ராமையர், சுந்தரராமையர், பொன்னம்பலம் ஆசாரி, ஜகந்நாத நாயுடு, பாலாமணி, கோகிலாம்பாள் முதலிய புகழ்பெற்ற நடிகமணிகளைத் தமிழர் மறக்கமுடியாது. இவர்கள் அனைவரும் கலைக்கே உயிர்த்த கலைவாணர். டி. சுந்தரராவும் பரமேசையரும் பிறவிப் பெண்கூடத் தோற்றுப் போகும்படி அவ்வளவு இயல்பாக நடித்தார்கள். பாலாமணி வரம் பெற்ற நடிகை. பெண்களை அரங்கேற்றியது அவளே. அவள் அபாரமாகப் பாடுவாள்; உருக்கமாக நடிப்பாள். சுத்தமாகப் பேசுவாள். ஏராளமாகச் சம்பாதிப்பாள், தாராளமாகத் தருமம் செய்வாள்.

இத்தகைய நடிகமணிகள் தமிழகத்தில் நாடகக் கொடியைப் பிடித்து நின்றனர். இடையே பயாஸ்கோப் வந்தது. சலனப்படம். அது ஜனங்களை வசீகரித்தபோது பேசும்படம் வந்தது. சென்ற பத்தாண்டுகளாகப் பேசும்படத்தில் நம்மவர் மோகித்துப் போயிருக்கின்றனர். பேசும்படத்தை நிழலாட்டம் அல்லது யந்திர நாடகம் என்றே சொல்வோம். அதில் காட்சியணி, சங்கீதம், நடிப்பு, பேச்சு எல்லாம் ஒரு வரம்பிற்குட்பட்டுச் சூழ்ச்சியாக அமைந்துள்ளன. உலகெங்கும் பேசும்படம் ஆடரங்கை அழுத்தி மேலோங்கி விட்டது. படத்தைக் கொண்டு பிறநாடுகளில் கல்வியும், தேசப்பிரசாரமும் நடக்கின்றன. ஸ்டாலின்கிராடு முற்றுகை என்றுல், அதை உடனே படம் பிடித்து, படச்சுருள் உலகெல்லாம் வெள்ளித்திரையில் ஆடுகிறது. உழவுக்கும் நெசவுக்கும் யந்திரம் வந்தது போல், இப்போது நாடகத்திற்கும் மைக் வந்துள்ளது. புதுமை வரவேண்டியது தான். ஆனல் யந்திரங்களால் நம் நாடு அடையுங் கதி, பேசும்படங்களாலும் அடைகிறது என்பதை மறுக்க முடியாது. அதைச்சேர்ந்த சாமான்களெல்லாம் கப்பலில் வந்திறங்கவேண்டும். அவற்றிற்கு நம் ஏழைநாட்டின் பணத்தைக் கொட்டவேண்டும். படமெடுக்கும் செலவோ இலட்சக்கணக்குத்தான். ஒரு நடிகை குரலசைக்க ஆயிரக்கணக்கில் தரவேண்

டும்; வெள்ளித்திரைக்குப் பின்னல் நடக்கும் விநோதங்களை அனைவரும் அறிவர். இவ்வாறு படம் பிடிப்பதில் ஜனங்களுக்கு எதில் குஷிதட்டுமோ, அந்தக்காட்சிகளை நுழைத்துப் பணம் பறிக்கும் வித்தையும் கையாளவேண்டியிருக்கிறது. முதலாளிகள் போட்ட பணத்தை எப்படியாவது அள்ளிக் கட்டி விடுவார்கள்; அதற்குமேல் கோட்டை கட்டவும் இடமுண்டு. ஆனல் இந்த நிழலாட்டத்தினல் கலைவளர்ச்சி எப்படி யிருக்கிறது என்று பார்த்தால் ரசிகர் உள்ளம் சினிமா இருளை விட்டு மேடை வெளிச்சத்தையே நோக்குகிறது.

இப்போது வெள்ளித்திரையை விலக்கி, நாடகமேடையைத் துலக்கவேண்டும். அது நாடகக்கலையைக் காப்பதுடன், நமது நாட்டின் பொருளாதாரத்திற்கும், சுகாதாரத்திற்கும், ஒழுக்கத்திற்கும் முதன்மையானதாகும். தமிழர் உறுதியாக முயன்ருல் மேடை உயிர்ப்பொலிவுறும்.

தமிழ்நாட்டில் இன்று நடிகருக்குப் பஞ்சமில்லை; கலைவளர்ச்சி முன்னேறியே வருகிறது. சிலர் நாடகம் இல்லை இல்லையென்று குறைகூறுகிருர்கள். அதுவும் பிசகு; ஏராளமான நாடகங்கள் உண்டு; நம்மவர் கருத்து நிழலாட்டத்தை விட்டு, உயிருள்ள நாடகமேடைக்குத் திரும்பவேண்டும். ஒரு பாடகனை இசைத்தட்டில் கேட்பதைவிட நேரே பாடக்கேட்பது அதி இன்பமளிக்கும். அதுபோல் திரையில் நிழல் நடிப்புகளை இருட்டிலிருந்து காண்பதைவிட, உயிருள்ள பாத்திரங்கள் உணர்ச்சியுடன் மேடையில் உருக்கமாக நடிப்பதைக் காண்பதும் கேட்பதும் பன்மடங்கு அதிப் பயனளிக்கும். நாட்டன்புள்ள கலாரசிகர் இனி மேடைக்குப் புத்துயிரளிக்க முன்வருக. இக்காலம் தமிழுலகில் நாடகாபிவிருத்திக்காக நல்லபணி செய்து வரும் குழுவினரில் குறிப்பிடத்தக்கவர்கள் நவாப் ராஜமாணிக்கம் T. K. S. சகோதரர்கள் வைரம் அருணசலம் செட்டியார் ஆவர்.

தமிழ்நாட்டில் ஆங்காங்குள்ள மற்ற நாடகசபையாரும் கலையொழுக்கத்துடன் நாடகங்கள் நடத்தினல் மேடை புத்துயிர்பெறும். திரையைவிட மேடையால் எவ்வளவோ பலனதிகம் இன்று பெட்ரோல் பஞ்சத்தால் மோட்டார்களின்றி நாம் குதிரை வண்டிகளில் போகிருேம் கச்சா பிலிமிற்கு இழுபறியா

யிருக்கும் இக்காலம், உயிருள்ள நமது நாடக மேடைகளை ஏன் உயிர்ப்பிக்கக் கூடாது? நாடகம் ஆடும் வேதம்; சீர்திருத்த நிலயம். நாடகமேடை ஒழுங்காக நடந்தால் நாடும் முன்னேறும். ஒழுக்கமுள்ள நடிகர், நல்ல தமிழறிவு, சுத்தமான உச்சரிப்பு, உணர்ச்சியுள்ள அபிநயம், பொருத்தமான அளவான நடிப்பு, இனிய பாட்டு, பாட்டின் சொற்களுக்கேற்ற குரலசைவு, சமுதாயத்திற்குப் பயனுகும் புதுப்புது நாடகங்கள், கலையழகு போலியும் காட்சி ஜோடனைகள் இவை நன்கு அமைந்தால் மேடை திரையை வெல்லும். பொதுஜன ஆதரவும் கிடைக்கும்.

தமிழ் நடிகர் ஒன்றுகூடி உயிருள்ள நாடகத்தை முன்னேற்றக் கலைக்கருத்துடன் உழைக்க வேணடும். உழைப்பிற்கு வெற்றியுண்டு. கலைவாணி தமிழ் நடிகருக்கு வெற்றிமேல் வெற்றி தருக.

★

நம் நாட்டுத் தொழிலை ஆதரிப்பது நமது கடமை

"தென்னை மார்க்"

நீல சோப் பார் சோப் கோல்டார் டாய்லெட்
கார்பாலிக் சோப் எங்கும் புகழ் பெற்று இருக்கிறது.

உடைகளின் அழுக்கைப் போக்க
உன்னதமான சோப்!

தயாரிப்பவர்கள்:—

மஹாலட்சுமி சோப் ஒர்க்ஸ்,

தேவகோட்டை ரோடு,

:: காரைக்குடி. ::

இராமனாதபுரம் ஜில்லா.

Our Sympathisers and Admirers are requested not to slip this rare and unique opportunity of our marvellous MAHAMAYA cinema effects.

# Releasing Very Shortly.

## KANNAMBA ★ CHINNAPPA

IN

JUPITER PICTURE'S

# MAHAMAYA

(TALENTED TAMIL PICTURE.)

SUPPORTED BY

**M. S. Saroja ★ Meenalochani**
**N. S. Krishnan ★ T. A. Mathuram**

DIRECTION

**T. R. Raghunath & Elangovan**

STUDIO:— NEW TONE

●

DISTRIBUTORS:

South India Pictures Ltd., Karaikudi

●

BRANCHES:

Madura - Coimbatore - Bangalore
Bezwada.

<u>அநுபந்தம்</u>

# நாடகம் நவின்ற நற்றமிழ்

## திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை, M.A., B.L.

(தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலை பல்கலைக் கழகம்)



சரித்திர வரலாற்றிற்கு முற்பட்டதாகிய மிகத் தொன்மை வாய்ந்த காலத்திருந்தே தமிழ் மக்கள் நாடகக் கலையில் நன்கு தேர்ச்சியுற்றிருந்தனர். இதை, இயல் இசை நாடகம் எனத் தமிழை அவர்கள் முத்திறப் படுத்திய முறைமை கொண்டே நாம் அறியலாம். நாடகத்தைக் கூத்து எனவும் வழங்கினர். பேரவை எனவும் வழங்கினர். பேரவைகள் நிறுமி, ஆங்கு அரங்கினிடத்தே கூத்தாட்டங்களை நிகழ்த்தி, அவ்வாடல்களைத் திரள் திரளாக மக்கள் கூடியிருந்து கண்டு குலாவினர் என்பதை, "கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம், போக்கு மதுவிளிந்தற்று." என்னும் அருமைத் திருக்குறளே செவ்விதிற் புலப்படுத்தும். பெரிய நகரங்களில் செல்வந்தர்கள் துறக்கத்தை யொத்த, நீண்ட சுடர்த் தூண்களாற் கட்டப்பட்ட தமது அழகிய மாளி

கைகளின் மேல்மாடத்தின் நிலா முற்றத்திடத்தே, தமது மகளிருடன் கூடியிருந்து, இன்னிசை முழக்கத்தினிடையே நாடகங்கள் நிகழச்செய்து, இன்ப வாழ்வெய்தி இரவுப் பொழுதைப் போக்கினர் என்னும் செய்தி பட்டினப் பாலையிற் பதிவுறக் காணலாம்:—

"பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்

* * * * * *

நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கி

* * * * * *

பாட லோர்த்து நாடக நயந்தும்
வெண்ணிலவின் பயன்றுய்த்துங்
கண்ணடைஇய கடைக்கங்குலான்."

இவ்வளவு சிறப்புற நாடகக் கலை வளர்ந்தோங்குவதற்கு உதவியாய்க் கூத்தியல் நூல்கள் எண்ணிறந்தன. முற்காலத்திருந்து, இந்நாள் இறந்துபட்டனவாகத் தெரிகிறது. இந்திர காளியம், கூத்தநூல், சயந்தம், செயிற்றியம், பஞ்சபாரதீயம், பரதசேனபதீயம், பரதம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல், குணநூல், சுத்தாநந்தப் பிரகாசம் முதலியன இசை நாடகப் பகுதிகளை விளக்கும் சில நூல்களாகும். இவை நாடக இலக்கணம் இயம்பும் நூல்களாயினும், இவற்றிற்கு இலக்கியமாகவும் பல நூல்கள் இருந்துள்ளன. முத்தமிழ் நுவலும் சித்திர நூலாம் சிலப்பதிகாரம் நாடகவுறுப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதால் நாடகக் காப்பியம் என்று வழங்கப்படும்.

கூத்தாவது, வசைக்கூத்து, புகழ்க்கூத்து; வேத்தியல், பொதுவியல்; வரிக்கூத்து, வரிச்சாந்துக் கூத்து; சாந்திக்கூத்து, விநோதக் கூத்து; ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து; இயல்புக்கூத்து, தேசிக் கூத்து எனப் பலவகைப்படும். இவற்றுள் கதை தழுவி வரும் கூத்து நாடகம் எனப்படும். கதை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ் செய்யும் பலவகைக் கூத்துக்களை அவிநயக் கூத்து என்று வழங்கினர். சுத்த நிருத்தமாய் நூற்றெட்டுக் கரணங்கள் மட்டுமுடைய கூத்து சொக்கம் என்னப்படும். வசைக் கூத்து என்பது நகைத்திறச் சுவையுடைய

விதூடகக் கூத்து. "பல்வகை யுருவமும் பழித்துக் காட்ட வல்லவ ஞதல் வசையெனப்படுமே. என்பது சூத்திரம்.

நாடகக் கலைக்கு உயிர் நாடியாகவுள்ள உறுப்பு அபிநய மாகும். அவிநயமாவது ஒன்பான் சுவையான அகத்து நிகழ் உணர்ச்சிகளைப் பத்துவகைச் சத்துவங்களாகிய உடல் நிகழ்ச்சிக ளாகிய புறத்தொழில்களால், வெண்பளிங்கு மணிகளின் ஊடுரு விச் செல்லும் செந்நிற நூலானது புறத்தே காணப்படுதல் போல், வெளிப்படுத்திப் பிறர்க்குப் புலப்படும் வகைப் பாவகம் செய்தல். பத்துவகைச் சத்துவங்களாவன:—மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண் ணீர் வார்தல், நடுக்கமெடுத்தல், வியர்த்தல், தோற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு என இவை. இவற்றை உடலின் கண்ணே வேண்டியவாறு நிகழச்செய்வது, ஓர் அரிய வாற்றலாகும். அஃது எவ்விதமெனில், வேம்பென்று கூறுகின்றவன் அவ்வேம்பின் இரதங் காட்டாதே, அதன் சுவை யால் மெய்யின்கண் நிகழும் மாற்றங்களைக் காட்டி அதன் மூலம் வேம்பைக் கூறி முடிப்பது. இன்னும், கருணை யென்ருல் பாவித்துக் காட்டுவதன்றி, மெய்யக் கண்ணீர் வந்தழுவது. இவ்வாறு அகத்தூறும் சுவைகளைச் சத்துவங்களான் உடம்பின் புறத்தோட்டிக் காண்பது அவிநயம். இவை உடம்பினும் மிகுதி யாக முகத்திலும், முகத்தினும் மிகுதியாகக் கண்ணிலும், கண் ணினும் மிகுதியாகக் கண்ணின் கடையகத்தும் தோற்றி நிற்கும். மேலும் இக்குறிப்பின் கண் நிகழ்கின்ற நிகழ்ச்சியாகிய சத்து வம் அல்லது விறல் என்பதை, வெகுளி, ஐயம், சோம்பல், களிப்பு, உவகை, அழுக்காறு, இன்பம், தெய்வமேறுதல், ஞஞ்ஞை, உடன்படல், உறக்கம், துயிலுணர்தல், சாக்காடு, மழையால் நனைதல், பனித்தலைப்படுதல், வெயிற்றலைப்படுதல் நாணம், வருத்தம், கண்ணோவு, தலைநோவு, அழற்றிறம்படுதல், சீதமுறுதல், வெப்பமுறுதல், நஞ்சுண்டல் என இருபத்து நான்கு வகையாக, இன்னின்னவாறு அவிநயித்துக் காட்டவேண்டும் என்று அதற்கு விதிகளையும் கூட்டித் தெளிவுற அமைத்திருந்தனர்.

பலவகை நாடகங்களையும், நடனங்களையும் நடித்துக் காட்டு வதற்கென ஒரு தனிக் கூட்டத்தார் அக்காலத்திருந்தனர். அவர் கள் கூத்தர் என்னப்படுவர். அவர்களில் பெண்பாலார் கூத்

தியர் அல்லது விறலியர் என்னப்படுவர். அவர்கள் நடிப்பதையே தொழிலாகக் கொண்டு, அரசவை முதல், சிற்றூர் அம்பலங்கள் வரை, பலவிடங்களுக்குச் சென்று மக்களை மகிழ்வித்துப் பரிசில்கள் பெற்று வாழ்ந்து வந்தனர். ஆனால் ஆடல் வகைகளிற் பல பொதுமக்கள் எல்லாராலும் பயிலப்பட்டு வந்தன. துணங்கை, குரவை, வெறியாடல் முதலிய பல ஆடல்கள் ஆண்களும் பெண்களும் மகிழ்ந்து கூடிக் கைகோத்து ஆடும் விழாச் சிறப்பு வாய்ந்தன. போருக்குச் செல்லும் பொழுதும், வெற்றிகொண்டு மீளும்பொழுதும், அரசனுடைய தேருக்கு முன்னும் பின்னுமாக வீரர்களும், விறலிமார்களும் துணங்கையாடிக்கொண்டு செல்வர். அரசர்களும் இவ்வாட்டங்களிற் கலந்து கொள்வதுண்டு. ஒரு சேர வரசன் இவ்விதம் ஆடுவதில் வல்லவனு யிருந்ததால், ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் என்று வழங்கப்பட்டான். கோயில் விழாக்களிலும் நாடகங்கள் பயின்று வந்தன.

பொய்யை மெய்போல் நடித்துக்காட்டுவது நாடகம். முன் நிகழ்ந்த, அல்லது நிகழ்ந்ததாகக் கூறப்பட்ட நிகழ்ச்சி அல்லது சரித்திரம் ஒன்றைக் கண்ணெதிரே இப்பொழுது நிகழ்வதுபோல் நடித்துக் காட்டுவது ஒரு சிலருக்கே கைவந்த ஒரு சிறந்த திறனாகும். இதற்கு உலக அனுபவமும், இயற்கையை நுனித்தறியும் கூரிய மதிநுட்பமும் சிறந்து அமையப்பெறல் வேண்டும். இதைப் பண்டைத் தமிழர் நன்கு கண்டு அதற்குரிய விதிகளையும் தெளிவுற வகுத்திருந்தனர். ஒரு பார்ப்பனன் அரங்கிடை தோற்றுவதா யிருந்தால், குடையிடுக்கிக் குந்திமிதித்துக் குறுநடைக் கொண்டுவந்து தோற்றுதல், அரசராயின், எடுத்த கழுத்தொடும் அடுத்த மார்பொடும் நடந்து செல்லுதல். இடையராயிற் கோற்கையும், கொடிமடியுடையும், விளித்தவிளையும், வெண்பல்லுமாகித் தோன்றுதல் என்று இன்னோரன்ன வழக்கு நோக்கிய விதிகள் அளப்பிலவாகும்.

நான் காரைக்குடியில், T. K. S. சகோதரர்கள் நடத்திய "சிவலீலா" என்னும் நாடகத்தைக் கண்டு களிக்கும் பேறுபெற்றேன். அதில் திருக்குறிப்புத் தொண்டர் பகுதியில், T. K. பகவதி என்பவர் ஒரு சிவனடியாராகத் தோன்றி, ஆடையொலிக்கும் நாயனரிடத்து, மீண்டும் உலர்ந்த ஆடையைப் பெறமுடியாது, மழையில் நனைந்து குளிரின் மிகுதியால் துயருறுவதுபோல்

மிகத் திறம்பட நடித்துக் காட்டினர். கையிரண்டையும் மார்போடு ஒடுக்கித் தோள் இடுக்கி, மெய்யெல்லாம் பனிப்பெய்தக் கால்கை நடுங்கிச் சொற்கள் தளர்வுற்று அவர் அவிநயித்துக் காட்டியதைக் கண்டோரனைவரும் விரையலால் மெய் கொடுகுவது போன்றதோர் உணர்ச்சி பிறந்து பரவசமெய்தினர். அப்பொழுது எனக்குப் பின்வரும் சூத்திரம் நினைவுக்கு வந்தது:—

"மழைபெய்யப் பட்டோ னவிநயம் வகுக்கின்
இழிதக வுடைய வியல்புநனி யுடைமையும்
மெய்கூர் நடுக்கமும் பிணித்தலும் படாத்தை
மெய்பூண் டொடுக்கிய முகத்தொடு புணர்த்தலும்
ஒளிப்படு மனனி லுலறிய கண்ணும்
விளியினுந் துளியினு மடிந்தசெவி யுடைமையுங்
கொடுகிவிட் டெறிந்த குளிர்மிக வுடைமையும்
நடுங்கு பல்லொளி யுடைமையு முடியக்
கனவுகண் டாற்ரு னெழுதலு முண்டோ."

இது மழை பெய்யப்பட்டோன் இவ்வாறு அவிநயிக்கவேண்டும் என்று வகுக்கப்பட்ட விதியாகும். பழைய நெறிமுறை பிறழாது அவிநயித்துக் காட்டும் நடிகர்கள் இக்காலத்தும் இருப்பதை அறிந்து பெருமகிழ் வெய்தினேன்.

நாடகக் கலை நலனுற ஓங்குக.

★

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"
என்பது ஔவையார் வாக்கு.

ஆனால்,
நல்ல 'மை' இல்லையாயின் எண்ணே
எழுத்தோ விளங்குமா?

★

அகத்தின் அழகு முகத்தில்
எழுத்தின் அழகு மையில்
அந்த 'மை' எது?

'சம்பத்' இண்டஸ்ட்ரியல்

தயாரித்த

சம்பத் இங்க்

பூரண விற்பனை உரிமையாளர்:-

ஸ்ரீ மீனுட்சி ஸ்டோர்ஸ், காரைக்குடி.

# நன்கொடையாளர்கள்.

| | |
|---|---|
| திரு. நவாப் T. S. இராஜமாணிக்கம் பிள்ளை ... ... ... | 101 |
| ,, நகைச்சுவையரசு N. S. கிருஷ்ணன் ... ... ... | 100 |
| ,, கான் சாகிப் K. A. ஷேக்தாவுத் சாய்பு ... ... ... | 51 |
| ,, E. V. கிருஷ்ணசாமி நாயக்கர் ... ... ... ... | 51 |
| ,, N. C. இராஜகோபாலய்யங்கார் ... ... ... ... | 51 |
| ,, K. N. குப்புசாமி முதலியார் ... ... ... ... | 51 |
| ,, R. K. வேங்கிடுசாமி ... ... ... ... ... | 51 |
| ,, குமார பட்டக்காரர் (பழய கோட்டை) ... ... ... | 51 |
| ,, காமெடியன் K. சாரங்கபாணி ... ... ... ... | 51 |
| ,, V. V. C. R. முருகேச முதலியார் ... ... ... | 51 |
| ,, K. N. பழனிச்சாமிக் கவுண்டர் ... ... ... ... | 51 |
| ,, M. சிக்கைய நாயக்கர் ... ... ... ... ... | 51 |
| ,, S. கிருஷ்ணசாமி முதலியார் ... ... ... ... | 51 |
| ,, M. அண்ணுமலை பிள்ளை ... ... ... ... ... | 50 |
| ,, M. சோமசுந்தரம் ... ... ... ... ... | 25 |
| ,, மானகிரி லேனு ... ... ... ... ... ... | 25 |
| ,, பெருமாள் நாடார் ... ... ... ... ... | 25 |
| ,, C. K. R. ராமலிங்கம் செட்டியார் ... ... ... | 25 |
| ,, S. R. சுப்பிரமணியம் ... ... ... ... ... | 25 |
| ,, M. S. முத்துக்கருப்பஞ் செட்டியார் ... ... ... | 25 |
| ,, S. மீனுட்சிசுந்தா முதலியார் ... ... ... ... | 25 |
| ,, N. M. சுந்தராம்பாள் ... ... ... ... ... | 25 |
| ,, T. S. ஜெகந்நாதம் ... ... ... ... ... | 21 |
| ,, வைரம் அருணசலம் செட்டியார் ... ... ... ... | 21 |
| ,, N. P. K. பத்மனுபன் ... ... ... ... ... | 15 |
| ,, S. பழனிச்சாமி ... ... ... ... ... ... | 15 |
| ,, S. நாச்சிமுத்து ... ... ... ... ... ... | 10 |
| ,, அகமத் யூசப் ... ... ... ... ... ... | 10 |
| ,, P. முத்துச்சாமி ... ... ... ... ... ... | 10 |
| ,, G. R. துரை ... ... ... ... ... ... | 10 |
| ,, O. A. ஆறுமுக முதலியார் அன் கோ ... ... ... | 10 |
| ,, S, R. கிருஷ்ணன் ... ... ... ... ... | 10 |
| ,, M. S. அன் சன்ஸ் ... ... ... ... ... | 10 |
| மொத்தம் நன்கொடை வரவு ரூ. | 1154 |

# மாநாட்டின் வரவு செலவு கணக்கு.

| | |
|---|---|
| நன்கொடை வரவு .... .... | 1154—0—0 |
| டிக்கெட் விற்பனை வரவு .... .... | 1819—0—0 |
| நன்கொடை மொத்தம் வரவு ரூ. | 2973—0—0 |

சேலவு விபரம்,

| | |
|---|---|
| பிரதிநிதிகள் சாப்பாட்டு சிலவு .... .... | 941–14—9 |
| விளம்பரம், பந்தல், போட்டோ, ஸ்பீக்கர், பூமாலை, ஆட்கள் கூலி .... .... .... | 638—9—6 |
| பிரயாணச் சிலவு .... .... .... | 137–15—3 |
| தபால் சிலவு.... .... .... ... | 45—6—0 |
| அச்சாபீஸ் சிலவு .... .... .... | 100—3—0 |
| ஸ்டேஷனரி சிலவு .... .... .... | 67—9—0 |
| பட்டமளிப்பு வகை சிலவு .... .... | 433—9—6 |
| மொத்தச் சிலவு ரூ. | 2365—3—0 |

| | |
|---|---|
| வரவு .... .... | 2973—0—0 |
| செலவு .... ... | 2365—3—0 |
| இருப்பு .... ரூ. | 607–13—0 |

புது மலர்ச்சி!      புது மணம்!!      புது உணர்வு!!!

இவைகளே இன்றையத் தேவைகள்

இவற்றிற்கென உழைக்கத்தான்

# ஸ்ரீ சக்தி நாடக சபை

★

அரும்பியுள்ளது.

## மலரும் திருநாள் ? வெகு விரைவில்

அதன் மணத்தை எங்கும்
பரப்புதலே எமது தொண்டு.

●

அதனை நுகர்ந்து வளர்ப்பது
தமிழ் மக்களின் அருங்குணம்.

●

இந்நாடக அவையின் தனிச்சிறப்பு!
தொழிலாளிகளின் முன்னேற்றம்.

●

அமைப்பாளர்,

(T. K. தங்கவேலு என்ற)

**T. K. கிருஷ்ணசாமி,**

: சக்தி நாடக சபை :

அம்பாள்புரம் :: :: புதுக்கோட்டை.

குமரன் பவர் பிரஸ், காரைக்குடி




Cover Printed at P. A. S. Press, Post Box 349, Mount Road, Madras